சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்வரிசை -2

பெண் தெய்வ வழிபாடு

[“ஆன்மீகம்” இதழில் வெளிவந்த கட்டுரைகள்]

முனைவர் செ. இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை – 625 018.
Mobile: 7010997639.

சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்வரிசை - 2

பெண் தெய்வ வழிபாடு

[‘ஆன்மீகம்’ இதழில் வெளிவந்த கட்டுரைகள்]

முனைவர் செ. இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம்

மதுரை – 625 018., ***Mob. : 7010997639***

Tamil Heritage Foundation International

நூல் விவரம்

நூல் வரிசை	:	சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்வரிசை - 2
நூலின் பெயர்	:	பெண் தெய்வ வழிபாடு
துறை	:	சமூகப் பண்பாட்டு ஆய்வு
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	2020
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	162
விலை	:	Rs.200/-

- - - - -

Book Series	:	A Series of Socio Cultural Study Series – 2
Book	:	Penn Daiva Vazhipadu (Worship of Femal Deities)
Subject	:	Socio Cultural Studies
Author	:	Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Designer	:	C. Meenatchi
Publisher	:	Chandrothayam Pathippagam Dinamani Nagar, Madurai – 625 018 Phone : 7010997639
Publish	:	2020
Pages	:	162
Price	:	Rs.200/-

வாழ்த்துரை

கலைமாமணி பேரா. முனைவர்
தே. ஞானசேகரன்
பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 046

முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்கள் பண்பாட்டு ஆய்வில் மிகுந்த ஆர்வமும் தொடர்ந்த தேடுதலும் உடைய அறிஞர். உலகளாவிய அளவில் மதங்களின் (Religion) தோற்றம் எவ்வாறு தொடங்கி அது; பண்பாட்டின் வேராக எப்படி நிலைபெற்றது என்பதை இந்த நூலில் மிக நேர்த்தியாய் "**மர வழிபாடு**" மூலம் முதல் இயலில் விளக்கிச் செல்கிறார். மரத்திற்கு உயிர் உண்டு என்ற நம்பிக்கையில் மரத்தை வழிபட்ட மனிதன் பின்பு மரத்தில் தெய்வம் உறையும் என்று நம்பி வழிபட்டான். இந்த "**மர வழிபாடு**" **(TREE WORSHIP)** தலவிருட்ச வழிபாடாக உலகெங்கிலும் காணப்பட்டதை பல சான்றுகளின் வழி நமக்குக் காட்சிப்படுத்துகிறார். ஊட்டியில் வாழும் தொதவர் (**Todas**) சேல மரம் என்ற மரத்தைக்

குல தெய்வமாகக் கருதி வழிபடுவது முதல் புத்தர் அரச மரத்தடியின் கீழ் அமர்ந்து ஞானம் பெற்றது; பிள்ளையார் அரச மரத்தடியில் வீற்றிருப்பது; அரச மரமும் வேப்ப மரமும் சேர்ந்திருப்பது; மேலும் மரத்தில் உறைந்திருக்கும் தெய்வங்கள் பெரும்பாலானவை பெண் தெய்வங்களாக இருப்பது வரை படிக்கப் படிக்க வியப்பூட்டும் செய்திகளை "**வழிபாட்டின் வேர்களைத் தேடி**" என்ற முதல் இயல் கொண்டுள்ளது.

"**உலகளாவிய காளி வழிபாடு**" - என்ற இரண்டாவது இயல் பெண்ணை பழங்காலச் சமயம் காளி என்றும் நவீனச் சமயம் தேவி என்றும் இரண்டு வகையில் வழிபட்டு வருவதை மிக விரிவாக ஆராய்கின்றது. இந்த இயலில் ஆசிரியர் காளி வழிபாட்டுடன் பெண்; ஆண் சமூகத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட வரலாற்றையும் சேர்த்தே ஆராய்கின்றார். பெண்ணின் ஆதி வடிவம் எல்லையற்றது; அது காளியின் குறியீடு. வேட்டைச் சமூகத்தில் பெண்ணே தலைமை தாங்குபவளாக இருந்தாள். வேட்டைச் சமூகம் மறைந்து வேளாண் சமூகம் தோன்றியது; மெல்ல, மெல்ல வேளாண்மை பெண்ணிடமிருந்து ஆணிடம் மாறியது. இதன் பின்னர் படிப்படியாக பெண்ணின் ஆற்றல் அடக்கி

ஒடுக்கப்பட்டு; ஆணிற்கு ஏற்றவளாகப் பெண் மாற்றப்பட்டாள். இப்படி மாறிய தெய்வமே தேவி வழிபாடானது என்று இந்நூல் பல சான்றுகள் காட்டி நிறுவியுள்ளது. பேராற்றல் படைத்த காளி ஆணிடம் தோற்றுப்போன வரலாற்றை சிவன் - பார்வதி நடனம் புரியும் தொன்மம் வழி மிக நேர்த்தியாய் புரிய வைக்கிறார். காலைத் தூக்கி ஆட முடியாமல் தோற்றுப் போன காளி பின்பு ஆணுக்கு அடங்கிய தேவியானாள் என்பதில் மானிட சமூகத்தின் நிறைய வரலாறுகள் பொதிந்துள்ளன. பல புராணக் கதைகளில் சொல்லப்பட்ட மையக் கருத்துக்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான யார் பெரியவர் என்ற போராட்டமே என்று சொல்லும் இந்நூலில் இடம்பெற்றுள்ள சிந்தனை மேலும் மேலும் ஆராயப்பட வேண்டியவை ஆகும்.

“**தாந்திரிக வழிபாடும் புராணங்களில் காளியும்**” என்ற மூன்றாம் இயலில் தாந்திரிக வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சி இன்றைய நிலை என்பது வரை ஆராயப்பட்டுள்ளது. இந்த இயலில் சொல்லப்பட்டுள்ள சில முக்கியச் செய்திகள்.

“தாந்திரிகர் என்போர் பெண் தெய்வ வழிபாடுகளைச் செய்பவர் ஆவர். சைவர்,

வைணவர் போலத் தாந்திரிகர் ஒருவகைப் பிரிவினர் ஆவர்.”

“தாந்திரிக மரபு எனப்படும் காளி வழிபாடு 14ம் நூற்றாண்டு தொடங்கி 19ம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்து வந்தது. சுமார் ஐந்து லட்சம் முதல் 20 லட்சம் வரை காளி வழிபாடு செய்யும் தாந்திரிகர்கள் இருந்தனர்.”

“தாந்திரிக மரபில் சக்தி சாதனத்தில் மச்சம், மது, மாமிசம், மைதுனம், முத்திரை என்ற ஐந்தும் பஞ்ச மகரங்கள் என்ற பெயரில் பின்பற்றப்படுகின்றன.”

“20, 21ம் நூற்றாண்டில் பெண்ணியவாதிகள் காளியைப் பெண்ணின் அதீத ஆற்றல் வடிவாகக் கண்டனர்.”

இவ்வாறு அமையும் இந்த இயல் காளி வழிபாடு புராணம் முதல் நாட்டுப்புற வழிபாடு வரை எவ்வகையில் வழிபடப்படுகிறது என்பதை பல சான்றுகளின் வழி எடுத்துரைக்கின்றது.

“**காளி - இடாகினி - டாகினிதென்**” என்ற நான்காம் இயல் உலகெங்கிலும் காணப்படும் காளி வழிபாட்டை விளக்குகின்றது. இவ்வியல் தரும் முக்கியச் செய்திகள்.

“ஆதி காலத்தில் தாய்த் தெய்வமாக விளங்கிய காளி கி.பி.3ம் நூற்றாண்டில் வடநாட்டில் குப்தர் காலத்தில் போர்த் தெய்வமாகப் போற்றப்பட்டாள்.”

“மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்பு காளி துர்கா ஆனாள். எட்டாம் நூற்றாண்டில் தாந்திரிக மரபில் இணைக்கப்பட்டு யோகினியாகவும், இடாகினியாகவும் பைரவருடன் சம்போகிக்கும் பெண்ணாகக் காளி மாற்றப்பட்டாள்.”

“காளி வழிபாடு இறப்புடனும், பேரழிவுடனும் தொடர்புடையது என்பதால், ஊருக்குள் காளிக்கு கோவில் அமைப்பது இல்லை. ஊருக்கு வெளியே, சுடுகாட்டுக்கு அருகே கோவில் கட்டப்பட்டது.”

“பதினோராம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கலிங்கத்துப்பரணியில் பேய்களுடன் இணைத்து காளி வழிபாடு பேசப்படுகின்றது.

“டாகினி அல்லது இடாகினி என்ற பெயர் பௌத்த சமயத்துடன் தொடர்புடைய பெண் தெய்வத்திற்குப் பெயராக இருந்தது. இவள் பிணம் தின்பவள். காளியின் மெய்க்காப்பாளரான சாதகர்களுடன் இருப்பவள்.”

“இடாகினி காளிக்கு ஏவல் செய்பவள்”.

“டாகினி வழிபாடு ஜப்பானிலும் காணப்படுகின்றது”

“இந்தியாவில் டாகினியும், காளியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக உள்ளன”.

இவ்வாறு செல்லும் இந்த இயலில் காளி வழிபாடு குறித்த ஆழ்ந்த பல நுணுகிய சிந்தனைகளைக் காணலாம். காளி வழிபாடு ஒருவகையில் வளமையுடன் தொடர்புடைய தாய்த்தெய்வ வழிபாடு என்பதை இந்த இயல் நிரூபிக்கிறது.

*“**சப்தகன்னியா**;” என்ற ஐந்தாம் இயலில் பிராமி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வராகி, நரசிம்மி, இந்திராணி ஆகிய ஏழு கன்னியர் வழிபாடு குறித்து விளக்கப்பட்டுள்ளன.*

“சப்த கன்னியர் வழிபாடு ஆணின் ஆற்றல் மற்றும் அதிகாரத்தை மறுக்கும் வழிபாடாக ஆதியில் இருந்தது. இவர்களே சர்வ வல்லமை படைத்த காவல் தெய்வங்கள் என்று நம்பப்பட்டனர். அதனால் எல்லா ஊர்களிலும் சப்த கன்னியர் வழிபாடு தவறாது இருக்கிறது. இன்றும் இம்மரபு தொடர்கிறது.”

“உலகெங்கிலும் கன்னிப் பெண்களை வழிபடும் மரபு இருந்து வந்திருக்கிறது. இந்த வழிபாட்டிலிருந்தே கன்னிமேரி என்ற கத்தோலிக்க மதம் தோன்றியது.”

*‘**நாட்டுப்புற வழிபாட்டில் சப்த கன்னியர்**’ என்ற ஆறாவது இயலில் கன்னிமார் வழிபாடு தமிழ்நாட்டில் எந்தெந்தத் தெய்வ வழிபாட்டுடன் இணைந்து வழிபடப்படுகிறது என்பதை ஆராய்கின்றது. மேலும் இவர்களின் தோற்றக் கதை குறித்தும் பேசுகின்றது.*

“பிராமி அம்பிகையின் முகத்தில் இருந்து தோன்றியவள். இவள் பிரம்மனின் மனைவி.”

“மகேஸ்வரி, இவள் தேவியின் தோளிலிருந்து உதித்தவள். சிவனின் மனைவி என்பதால் இவளுக்குரிய வாகனம் எருது.”

“கவுமாரி, முருகனின் மனைவி, இவளுக்குரிய வாகனம் மயில்”

“வைஷ்ணவி தேவியின் கைகளிலிருந்து தோன்றியவள். இவள் விஷ்ணுவின் மனைவி. இவளது வாகனம் கருடன்.”

“இந்திராணி இந்திரனின் மனைவி; இவளை வணங்கினால் வாழ்க்கைத்

துணையும், தாம்பத்தியமும் சிறப்பாக அமையும்.”

“வராகி, சாமுண்டி ஆகிய இருவருக்கும் பொருத்தமான ஜோடியாக ஆண் தெய்வங்கள் இல்லை.”

என்று விரியும் இந்த நூலின் செல்நெறி முழுவதும் தாய்த் தெய்வ வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி பற்றி விரிவாக ஆராய்கின்றது.

உலகத் தோற்றத்தில் மிக ஆற்றல் பெற்ற ஓர் உயிர் என்றால் அது பெண்தான். அவளால்தான் இந்த உலகை உயிர்ப்பிக்கவும், வளப்படுத்தவும் முடியும். உலகின் ஆதி வழிபாடு பெண்ணை வழிபடும் தாய்த் தெய்வ வழக்கிலிருந்தே தொடங்குகின்றது. உலகம் முழுவதும் தாய்த்தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவில் தோன்றிய தாய்த் தெய்வங்கள் போல் உலகின் பழைய நாகரிகங்களில் சிறந்த நாடுகளான எகிப்து, பாபிலோனியா, சுமேரியா, கிரீஸ், உரோம் ஆகிய பல நாடுகளிலும் தாய்த் தெய்வங்கள் தொழப்பட்டன. தாய்த் தெய்வத்தின் ஆற்றல் குறித்து உரோம் நாட்டின் தாய்த் தெய்வம் பின்வருமாறு கூறியதாக “**தமிழ் இலக்கியத்தில்**

தாய்த் தெய்வ வழிபாடு" *என்ற நூலில் பி.எல்.சாமி குறிப்பிடுகிறார். அது வருமாறு.*

"உலகில் எல்லாவற்றிற்கும் நானே தாய், நானே தலைவி, நானே தோற்றுவித்தவள், எல்லாத் தெய்வீக சக்திகளுக்கும் நானே நாயகி, வீட்டுலகிற்கு நானே அரசி, கோளுக்கெல்லாம் நானே முதன்மையானவள். என்னைப் பல நாட்டினர், பல குடியினர் பற்பல பெயர்களோடு பல வகையாகக் கூறுகின்றனர். பிரிஜியர் தெய்வங்களின் தாய் என்றும், அதேனியர் மினர்வா என்றும், ஐபீரியர் வீனஸ் என்றும், டையானா என்றும், சிஸிலியர்ட் ட்ரோஜர்பினா என்றும், எலூஷியர் ஸிரெல் என்றும் சிலர் ஜீனோ என்றும், வேறு சிலர் பெல்லோனா என்றும் மற்றும் சிலர் ஹிகேட் என்றும் என்னைக் கூறுகின்றனர். பழமையானவர்களான எகிப்தியர்களும், எத்தியோப்பியர்களும் என்னை ஐசிஸ் ராணி என்று அழைக்கின்றனர்" என்று கூறுவதிலிருந்து தாய்த் தெய்வங்கள் பல பழைய நாடுகளிலும், பண்டைக் காலத்தில் பல குடிகளாய் பலவகைப் பெயர்களால் தொழப்பட்டமை தெளிவாகத் தெரிகின்றது. இதுபோலவே பழந்தமிழிலக்கியத்தில் தமிழரின் தாய்த் தெய்வம் பழையோள், கொற்றவை, மலைமகள் (பார்வதி) என்ற

மூன்று பெயர்களில் அமைவதைப் பார்க்கின்றோம். இந்த வரலாற்றைத்தான் “**பெண் தெய்வ வழிபாடு**” என்ற இந்த நூலில் மிக நேர்த்தியாய் தொகுத்துத் தந்திருக்கிறார் முனைவர் செ. இராஜேஸ்வரி. இவருக்கு எனது வாழ்த்துக்கள். இவர் இதுபோன்ற பல நூல்களை எழுதி வெளியிட வாழ்த்துகின்றேன்.

மிக்க அன்புடன்

(தே. ஞானசேகரன்)

அணிந்துரை

முனைவர் ஆ. பாப்பா
தமிழ் உதவிப்பேராசிரியர்
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை

இந்தியத் தெய்வங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளை மேலைநாட்டினர் இன்றைக்கும் வியப்பாகவேதான் பார்த்து வருகின்றனர். பலசமயங்களில் அவர்களது ஆய்வறிவிற்கு எட்டாத நிலையில்தான் நமது வழிபாடு அமைந்திருக்கிறது. அவ்வகையில் இந்திய வழிபாட்டு மரபு பற்றிய செய்திகளைத் தந்ததோடு மட்டுமல்லாமல் உலகளாவிய நிலையில் ஒப்பிட்டுக் கூறியிருப்பது வழிபாடு குறித்த ஒருமைக்குள் நம்மைக் கொண்டு செல்கிறது. இன்னும் உலகிலுள்ள அனைத்து வழிபாட்டிற்கும் வேட்டைச்சமூக மக்களின் தேவைகளே ஆரம்பமாயமைந்துள்ளதை மறைநிலையில் கொண்டுச் சுட்டிக்காட்டுவது இன்றைய சமூகத்தில் காணப்படும் சமயப்பூசல்கள் தேவையற்றவை என்கிற புரிதலுக்கு நம்மை அழைத்துச்செல்லும்.

மனித அச்சத்தின் விளைவே வழிபாடு என்கிற ஃப்ராய்டின் கூற்றை இந்நூல் ஒவ்வோரிடத்திலும் வெளிப்படுத்துகிறது. உலகளாவிய நிலையிலான பல்வேறு மனிதர்களின் வாழ்வியல், சமயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அளவுக்கு அதிகமான தரவுகளை உள்ளடக்கியதோடு மட்டுமல்லாமல் எதிர்கால ஆய்வுக்கான களங்களை ஏகமாய்த் தந்திருக்கிறது. வெவ்வேறு தலைப்பில் ஆறு கட்டுரைகளைக் கொண்டிருந்தாலும் அவையனைத்தும் பெண் தெய்வ வழிபாடு என்கிற ஒற்றை இலக்கை நோக்கிப் பயணிப்பன.

வழிபாட்டின் தொடக்கமே இயற்கையை வழிபடுவது. இயற்கையின் ஆற்றலைப் புரிந்து கொள்ளவும் அதனைக் கட்டுப்படுத்தவும் முடியாததால் அதன் மீது அச்சம் கொண்ட மனிதன் அதோடு சமரசம் செய்து கொள்வதற்காக வழிபடத் தொடங்கியதன் ஒரு பகுதியே மரவழிபாடு என்கிற கருத்தாக்கத்தைத் தெளிவுபடுத்துவதே வழிபாட்டின் வேர்களைத் தேடி என்கிற முதல் கட்டுரை. வேட்டைச்சமூகத்தில் தொடங்கி உலகம் முழுமைக்கும் பரவி இன்றைக்கும் வெவ்வேறு வடிவங்களில் காணப்படும்

மரவழிபாடு குறித்த மிகுதியான தரவுகளை இக்கட்டுரை பதிவு செய்திருக்கின்றது.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத்தமிழர்களும் மரத்தில் உறைந்திருக்கின்ற தெய்வத்திற்குப் படையலிட்டு வணங்குதல், தலைவனைக் காக்குமாறு தெய்வத்திடம் தலைவி வேண்டுதல் என்று அக வாழ்க்கையிலும் உன்ன மரத்தின் செழுமை மற்றும் வாட்டத்தைப் பொறுத்துத் தம் படைகள் வெற்றி, தோல்வியைச் சந்திக்குமென நம்பும் அரசன் என்று புறவாழ்க்கையிலும் நம்பிக்கை சார் நிலையில் மரத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

இயற்கையிடமிருந்து தன்னைப் பாதுகாத்தல் என்கிற நிலையில் தொடங்கிய இவ்வழிபாடு பின் மரங்களை, நீர்நிலைகளைத் தெய்வத்துடன் தலவிருட்சம், தீர்த்தம் என்று இயற்கையைப் பாதுகாக்க வழிபாடு செய்தல் என்கிற நிலையை அடைந்துவிட்டது. காலப்போக்கில் இன்னும் இது எதிர்மறையாக மரம் பாதுகாப்பைத் தருவது என்பது மட்டுமல்லாமல் மரங்களில் தீமையைச் செய்யும் ஆவிகளும் இருப்பதாக நம்பப்பட்டுப் பேயை மரத்தில் கட்டிவைக்கும் வழக்கமாக மாற்றம் பெற்றதையும் காரண காரியங்களோடு இக்கட்டுரை விளக்குகிறது. மரத்தின் அடிப்படை வேர். வழிபாட்டின் அடிப்படை

இயற்கையாகிய மரம். இவ்விரண்டையும் இணைத்து வழிபாட்டின் வேர்களைத் தேடி என்று கட்டுரைக்குத் தலைப்பு கொடுத்திருப்பது கட்டுரைச் செய்திகளுக்குக் கணத்தைக் கொடுத்திருக்கிறது.

வேட்டைச்சமூகத்தில் பெண்ணும் அவளது அதீத ஆற்றலும் ஒருவித பயத்துடனே பார்க்கப்பட்டன. அடுத்த காலகட்டத்தில் பெண் கட்டுப்பாட்டுடன் கூடிய ஆற்றலும் மென்மைத்தன்மையுடையவளாகவும் காட்டப்பெறுகிறாள். உலக முழுமைக்கும் இது பொருந்தினாலும் வன்மை / மென்மை ஆகிய இரு நிலைகளிலும் இன்றுவரை உலகெங்கிலும் பெண் வணங்கப்படுவதை உலகளாவிய காளிவழிபாடு கட்டுரை விளக்குகிறது.

ஆணாதிக்கச்சமூகம் தோன்றிய பிறகு ஆண் தெய்வங்களிடம் பெண் தெய்வங்கள் தோற்றுப் போனதாகக் கதைகள் புனையப்பட்டு பெண்ணின் ஆற்றல் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் வேட்டைச் சமூகத்தின் எச்சமாக உலகெங்கும் ஆற்றல் மிக்க பெண் தெய்வமான காளியின்தோற்றம், வழிபாட்டு முறைகள், வசிப்பிடம், நம்பிக்கைகள் ஆகிய நிலைகளில் ஒரே மாதிரியான அமைப்பினுள் அடங்குவதை

இக்கட்டுரை விவரித்துச் செல்கிறது. இக்கட்டுரைச்செய்திகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு உலகளாவிய நிலையில் காளி வழிபாட்டை ஆய்வு செய்வதற்கும் பெண் தெய்வ வழிபாட்டினை அமைப்பியல் ஆய்விற்குட்படுத்துவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

இந்திய வழிபாட்டுச் சிந்தனை மரபில் புராணங்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதை விளக்குவதே தாந்திரிக வழிபாடும் புராணங்களில் காளியும் என்கிற மூன்றாவது கட்டுரை. தெய்வங்களிலும் பெண், ஆண் என்கிற பாலினப் பாகுபாட்டிற்குப் புராணங்களில் இடமிருந்ததையும் அதீத ஆற்றலுடைய பெண் தெய்வமாகிய காளிசாந்தமாகவும் கோபமாகவும் வெவ்வேறு பெயர்களில் வழிபடப்படுவதையும் அதற்கு அவ்வக்காலச் சமயங்களும் காரணமாய் அமைவதையும் இக்கட்டுரை ஆதாரங்களுடன் விளக்குகிறது. இக்கட்டுரையில் தரப்பட்டிருக்கும் பல்வகையான காளி மற்றும் அவற்றின் வழிபாட்டு முறைகள் குறித்த செய்திகள் வரலாற்று ஆய்வுக்கு முன்னெடுத்துச் செல்லக்கூடியவையாக அமைந்துள்ளன.

இந்து, பௌத்த சமயங்களில் காளி, இடாகினி, டாகினி தென் ஆகிய மூன்று

தெய்வங்களும் அதீத ஆற்றலுடையவள் பெண் என்கிற ஒரே பார்வையில் பார்க்கப்படுவதையும் இம்மூன்று தெய்வங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதையும் காட்டுவது நான்காம் கட்டுரை. அதீத ஆற்றல் என்கிற கோட்பாட்டை அடியாகக் கொண்டிருந்தாலும் இந்து, பௌத்த சமயங்கள் இவ்வாற்றல் நன்மை செய்யும் தெய்வமாகவும் தீமை செய்யும் பேயாகவும் பிரித்துப்பார்ப்பதைப் புராணங்கள் மட்டுமன்றி சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி போன்ற இலக்கியங்கள் வழி விளக்கப்படுகிறது. இத்தெய்வங்கள் இடத்திற்கேற்றபடி பெயர் மாற்றம் பெற்றாலும் கால மாற்றத்தால் காவல் தெய்வமாகவே வணங்கப்படுவதையும் கட்டுரை விளக்குகிறது. இப்பகுதியில் காணும் டாகினி மற்றும் சப்பானிய வழிபாடு குறித்த செய்திகள் நூலாசிரியரின் சப்பானியப் பண்பாடு பற்றிய அறிவை தெளிவுபடுத்துகின்றன. இயற்கைக்கும் பெண்ணுக்குமான தொடர்பு காலங்காலமாகத் தவிர்க்கமுடியாதது. இன்றைக்கு இது சூழலியல் பெண்ணியமாகப் ***(Eco Feminism)*** பேசப்படுகிறது. இக்கட்டுரை தரும் பெண்ணுக்கும் விலங்கிற்குமான தொடர்பு பற்றிய செய்திகள் சூழலியல் பெண்ணியம் குறித்த அடுத்தகட்ட ஆய்விற்குக் கொண்டு செல்லத்தக்கன. செவ்வியல்

தெய்வங்கள், ஊர்த்தெய்வங்கள் இரண்டிற்குமான இடைவெளி, சமஸ்கிருதமயமாக்கல், போன்ற (முன்னரே இருக்கும்) ஆய்வுகளுக்கு இக் கட்டுரைத்தரவுகள் கூடுதல் அழுத்தம் சேர்க்கும்.

சப்தகன்னியார் வழிபாடு செவ்வியல் மற்றும் வாய்மொழி மரபு ஆகிய இரண்டிலும் பின்பற்றப்பட்டு வந்ததை சமயம், வரலாறு ஆகிய அடிப்படையில் விளக்குபவை கடைசி இரண்டு கட்டுரைகள். வாய்மொழி மரபில் ஏழுமலை, ஏழுகடல், ஏழு அண்ணன் தம்பிமார், ஏழு ஊர்கள், ஏழூர்நாடு, ஏழுவீடு என்று ஏழு என்கிற எண் முக்கியத்துவம் வாய்ந்தது. உலகம் முழுவதும் ஏழு, ஏழரை, ஒன்பது, பதிமூன்று என்று எண்களின் மீதான நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. ஏழு கன்னிமார் வழிபாடு என்றே நாட்டுப்புறங்களில் இன்றைக்கும் இவ்வழிபாடு அழைக்கப்படுகிறது.

பெண் தெய்வங்களின் தோற்றக் கதைகள் பெரும்பாலும் கொலையை மையமிட்டதாகவே அமைந்திருக்குமென ஆ. சிவசுப்பிரமணியம் தனது கொலையில் உதித்த தெய்வங்கள் என்னும் கட்டுரையில் விளக்குவார். இக்கட்டுரையில் கூறப்படும் சப்த கன்னியார் குறித்த கதைகளும் அதற்கு விலக்கல்ல.

சப்த கன்னியர் வழிபாடு பெருமரபில் தோன்றிப் பின் நாட்டுப்புற வழிபாடாகச் சுருங்கிப்போனதாக இக்கட்டுரை குறிப்பிடுகிறது. மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியில் அம்மாபட்டி என்கிற ஊரில் நடைபெறும் அம்மன் திருவிழாவில் இவ்வூருக்கருகிலுள்ள ஏழு ஊர்களிலிருந்தும் அம்மன் தெய்வங்கள் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு விழா நடத்தப்பெறும். இங்கு மட்டுமல்ல தமிழகத்தின் அதிக ஊர்களில் சப்த கன்னியர் வழிபாடு அம்மன் விழாவாகவே கொண்டாடப் பெறுகிறது. இப்படிப் பார்க்கும்போது பெருமரபைவிட நாட்டுப்புற மரபில்தான் இவ்வழிபாடு அதிகம் உயிர்ப்புள்ளதாக காணப்படுகிறது. மேலும் வேதம் தொடங்கி புராணங்கள், இந்து பௌத்த சமயங்கள் மற்றும் சமஸ்கிருத வழிபாட்டு மரபில் சப்த கன்னியர் வழிபாடு இருந்ததைக் கால மற்றும் வரலாற்று அடிப்படையில் ஆதாரங்களுடன் இக்கட்டுரைகள் விளக்குகின்றன. அதேநேரம் இந்துசமயக் கோவில்களில் இன்று இவ்வழிபாடும் தெய்வ உருவங்களும் அருகிவிட்டன / மறைக்கப்பட்டுவிட்டன / மறக்கப்பட்டுவிட்டன என்றுதான் கூறமுடியும்.

இன்றைய சமூகத்தில் தெய்வம் மனிதனிலிருந்து தள்ளி நிற்பது அனைவரும்

அறிந்ததே. வழிபாட்டுத் தளங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தாலும் அதன் நோக்கம் வழிபாடாக இல்லை. தங்கள் தேவைக்கு மட்டும் தெய்வத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் மக்கள் இறைவனைத் தொழும் தருணத்திலாவது மனத்தை இறைவனிடம் செலுத்தி இருக்கிறார்களா என்றால் அது கேள்விக்குரியதே? ஆக சுயநலத்திற்காக மட்டுமே வழிபாடு செய்யும் இன்றைய சமூகம் பெண்ணையும் தன்னிலிருந்து விலக்கித்தான் வைத்திருக்கிறது. அதாவது தேவைப்படும் பொழுது நுகரும் பொருளாக இல்லையில்லை நுகர்ந்து எறியும், இல்லை நுகர்ந்து எரிக்கும் பொருள் என்ற நிலைக்குக் கொண்டுவந்துவிட்ட காலகட்டத்திற்கு ஏற்றதாக இப்படைப்பு அமைந்துள்ளதை மறுக்க முடியாது. ஆரம்பத்தில் பெண்களை வழிபாட்டிற்குரியவளாகப் பார்த்த, பார்க்கின்ற சமூகம் மற்றும் உலகமாக இருந்தது என்கிறதொரு புரிதலைக் கொடுக்கக்கூடியதும் வழிபடு நிலையைக் கடந்து ஆற்றல் நிறைந்தவள் என்கிற தெளிவைத் தரக்கூடியதுமானது இந்நூல் என்று கூற முடிகிறது.

“உலகில் எல்லாவற்றிற்கும் நானே தாய், நானே தலைவி, நானே தோற்றுவித்தவள், எல்லாத் தெய்வீக சக்திகளுக்கும் நானே நாயகி, வீட்டுலகிற்கு நானே அரசி, கோளுக்கெல்லாம் நானே முதன்மையானவள். என்னைப் பல நாட்டினர், பல குடியினர் பற்பல பெயர்களோடு பல வகையாகக் கூறுகின்றனர். பிரிஜியர் தெய்வங்களின் தாய் என்றும், அதேனியர் மினர்வா என்றும், ஐபீரியர் வீனஸ் என்றும், டையானா என்றும், சிஸிலியர்ட் ட்ரோஜர்பினா என்றும், எலூஷியர் ஸிரெல் என்றும் சிலர் ஜீனோ என்றும், வேறு சிலர் பெல்லோனா என்றும் மற்றும் சிலர் ஹிகேட் என்றும் என்னைக் கூறுகின்றனர். பழமையானவர்களான எகிப்தியர்களும், எத்தியோப்பியர்களும் என்னை ஐசிஸ் ராணி என்று அழைக்கின்றனர்”

பி.எல்.சாமி

“தமிழ் இலக்கியத்தில்
தாய்த் தெய்வ வழிபாடு”

நூலாசிரியர் பற்றி

முனைவர் செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். **மொழி பெயர்ப்பியல் ஆய்வு** என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். *Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles* போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை

அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளி நாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும்

வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி ***"ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100"*** என்ற தலைப்பில் விகடன்.காமில் *(காம் இணைய தளத்தில்)* முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் *www.tamilauthors.com* என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின்

தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது **வெற்றித் திருமகன்** என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 18 நூல்கள் வெளிவந்துள்ளன.

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல், காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி மற்றும் தேனடையும் வரலாறு என்ற கவிதை நூல்களை இவர் முறையே **"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive",** என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் **பூ மர நிழலில் களமும் காலமும்** மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் **பாடுபொருளும் பாசப்பொருளும்**

[திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற *நூல்களையும்* ***'2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, முத்தமிழ் விரும்பியின் கவிதை காதல்*** *என்ற நூலையும் வெளியிட்டார்.*

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ***பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு], தேவேந்திரன், தமிழகத்தில் பெண் தெய்வ வழிபாடு,*** *ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார்.* ***காணாமல் போன கடவுளர்*** *என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி வருகிறார்.*

சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் *என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட் டார். இவர் எழுதிய சிறுகதைகள்* ***'அமராவதியின் காதல்'*** *என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்தது. நெருஞ்சி இலக்கிய இதழில் இவரது கட்டுரைகள் வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய* ***"என்னோட ராசி நல்ல ராசி"*** *என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.*

உள்ளடக்கம்

1.	வழிபாட்டின் வேர்களைத் தேடி	1
2.	உலகளாவிய காளி வழிபாடு	35
3.	தாந்திரிக வழிபாடும் புராணங்களில் காளியும்	57
4.	காளி – இடாகினி – டாகினி தென்	79
5.	சப்த கன்னியர்	101
6.	நாட்டுப்புற வழிபாட்டில் சப்த கன்னியர்	115

1. வழிபாட்டின் வேர்களைத்தேடி

மதங்களின் பெயரால் சண்டை சச்சரவுகள் குண்டுவெடிப்புகள் நடக்கும் இக்கால கட்டத்தில் மதங்களின் அடிப்படைக் காரணம் என்ன அவை தோன்றுவதற்கான சமூகக் காரணம் என்ன மற்றும் அவற்றின் தோற்ற வரலாறு யாது என்பன பற்றி அறிந்து கொள்வது காலத்தின் கட்டாயமாகும். எனவே நாம் மனித குல வரலாற்றில் சமய வரலாற்றின் வேர்களைத் தேடிச் செல்வோம். சமயம் என்பது கடவுளை மையப்படுத்தியதாகத் தோன்றினாலும் கடவுள் நம்பிக்கையற்ற சில விதிமுறைகளை மையப்படுத்தியத மதங்களும் உண்டு.

கடவுள் நம்பிக்கை உடைய மதங்கள் அகச்சமயங்கள் என்றும் கடவுள் நம்பிக்கை அற்றவை புறச்சமயங்கள் [பௌத்தம், சமணம்] என்றும் தமிழில் அழைக்கப்படும். வேதங்களில் நம்பிக்கை கொண்டவை வைதீகச் சமயங்கள் என்றும் வேதங்களில்

நம்பிக்கையற்றவை அவைதீகச் சமயங்கள் [பௌத்தம் சமணம்] என்றும் இந்தியாவில் பெயர் பெறுகின்றன.

சமயம் என்பது அதீத நம்பிக்கை சார்ந்ததாக இருக்கின்றது. கடவுள் என்பது அதீத சக்தி உடையதாக நம்பப்படுகிறது. மேலும் கடவுளைப் பாதுகாவலனாகவும் அனைத்து உயிர்களையும் படைக்கின்றவனாகவும் அழிக்கின்றவனாகவும் மக்கள் படைத்து இருக்கின்றனர் அல்லது வேறு வகையில் சொன்னால் நம்புகின்றனர். மனித சக்திக்கும் மீறிய பேராற்றல் பெற்றவனாகவே கடவுளைச் சமயங்கள் வருணிக்கின்றன. இந்தப் பேராற்றலைக் குறிக்கவே மனிதன் கடவுளுக்குப் பல கைகளும் தலைகளும் குறியீட்டு முறையில் வரைகின்றான்.

மக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர்களைப் பாதுகாக்கும் அதீத சக்தியாகக் கடவுளைச் சமயங்கள் விளக்கியுள்ளன. இந்த அதீத சக்தி மனித குலத்தின் ஆரம்பக்கட்டத்தில் நெருப்பு, நீர், மலை, நதி, காடு, மரம் எனப் பல இயற்கைச் சக்திகளிடமும் இருந்ததாக நம்பப்பட்டு வந்தது. இந்த நம்பிக்கை சார்ந்த வரலாற்றில் மனிதன் மரங்களைத் தெய்வங்களாக ஏற்றுக் கொண்ட வரலாற்றை முதலில் காண்போம்.

முதலில் மரம் வழிபடப்பட்டது; பின்னர் மரத்திற்கு உயிர் இருப்பதாகவும் நம்பப்பட்டது. அதன் பிறகு மரத்தில் இருப்பது தெய்வம் எனக் கருதும் நம்பிக்கை துளிர்த்தது. இதனைத் தொடர்ந்து மரத்தில் இருக்கும் தெய்வத்துக்கு சாந்தி செய்வதும் வணங்கி மகிழ்வதுமாக சமயச் சடங்குகள் வளர்ந்தன. பின்னர் மரங்கள் இருக்கும் இடங்களில் கோவில்கள் முளைத்தன. மரங்களின் முக்கியத்துவம் ஸ்தல விருட்சம் என்றளவில் நின்றுவிட்டது. பவுத்தம் தவிர மற்ற சமயங்களில் மர வழிபாடு அருகிவிட்டது.

மரம் அல்லது மரங்கள் அடர்ந்த வனம் ஆரம்பகாலத்தில் தெய்வீக சக்தி உடையதாக நம்பப்பட்டது. மர வழிபாடு என்பது

இன்றைக்கு வேப்பமரத்தை வழிபடுதல் அரசமரத்தை வழிபடுதல் என்று புரிந்து கொள்ளப் பட்டாலும் கூட இது இந்து சமயம் சார்ந்தது மட்டுமல்ல, மற்ற மதங்களிலும் *sacred groves* எனப்படும் புனித மரக்காடுகள் ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்காவிலும் வழிபாட்டுக்கு உரியனவாக இருந்துள்ளன.

பொதுவாக திராவிட இயக்கங்கள் இந்து மதத்தை மூடநம்பிக்கை சார்ந்த சமயம் என்று பிரச்சாரம் செய்து கருத்துக்களைப் பரப்பி விட்டன. எனவே இந்து மதத்தில்தான் மரத்தையும் மாட்டையும் வழிபடும் முட்டாள் தனமான போக்கு இருப்பதாக நம்பப்பட்டு வந்தது. ஆனால் உண்மை அதுவல்ல. விஞ்ஞானத்துக்கு வழி வகுத்ததாக தி.க. மற்றும் திமுகவினர் பிரச்சாரம் செய்த வெள்ளைக்காரர்கள் வாழ்ந்த ஐரோப்பா நாட்டிலும் கூட மரங்கள் தெய்வங்களாக வழிபடப்பட்டன. அதுபோல நாகரிகத்தில் பின்தங்கியவர்களாகக் கருதப்படும் கருப்பர்கள் வாழும் ஆப்பிரிக்கக் கிராமங்களிலும் மரங்கள் வழிபடு பொருட்களாகப் போற்றப்பட்டன. எனவே மனிதர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் மரங்களும் அவர்களுக்குத் தெய்வங்களாகவே இருந்து வந்த காலம் ஒன்று இருந்தது.

உதகமண்டலம் பகுதியில் வாழும் தொதவர் *[Todas]* எனப்படும் மலைவாழ் மக்கள் சேல மரம் என்ற மரத்தைத் தம் குல முதல்வராகக் கருதி வழிபட்டு வருகின்றனர்.

[தி இந்து 17- 3 -18]. கௌதம புத்தர் போதி மரம் எனப்படும் அரச மரத்தின் கீழிருந்து தியானம் செய்த போது அவருக்கு ஞானோதயம் பிறந்ததால் அந்த மரம் போதி மரம் என்ற பெயரில் புத்தி தரும் மரமாக பவுத்தர்களால் வணங்கப்பட்டு வருகிறது.

அரசமரத்தடிப் பிள்ளையார் ஆல மரத்தடிப் பிள்ளையார் என்ற பெயரில் மரத்தடியில் பிள்ளையார்கள் வைக்கப்பட்டு அரச மரமும் ஆலமரமும் இந்து சமயத்தவரால் தெய்வீக மரங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றில் அரசமரத்தைச் சுற்றி வரும்பொழுது ஆக்சிஜன் அதிகம் கிடைப்பதால் குழந்தைப் பேறு உண்டாகும் என்ற நம்பிக்கையும் உண்மையும் நடைமுறையில் உள்ளது. இந்தியாவில் அரச மரம் பெறும் பெருமையை தெய்வீகத் தன்மையை ஐரோப்பாவில் ஓக் மரம் பெற்றுள்ளது.

இந்தியாவில் மர வழிபாடு இருப்பது போல ஐரோப்பாவில் அரசர் காடுகள் என்று பெருங்காடுகள் அடர்த்தியாகவும் தெய்வீக சக்தியுடனும் இருந்தன. கிரீஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் புனிதக் காடுகள் வழிபாட்டுக்கு உரியனவாக இருந்து வந்தன. இப்போது நகரமயமாக்கல் வந்து அங்கும் காடுகளை அழித்துவிட்டது. ஜெர்மனியில் பழைய

வழிபாட்டுத் தலங்கள் என்பவை பெரும்பாலும் அடர்ந்த புனிதக் காடுகளே ஆகும். ஆரியர் எனப்படும் இந்தோ ஐரோப்பிய வமிசத்தினர் மரங்களில் தெய்வம் உறைந்திருப்பதாக நம்பினர். வானில் வன தேவதை உலவுவதாகவும் நம்பி வணங்கி வந்தனர். கிறிஸ்தவ சமயம் பெரு வளர்ச்சி பெற்ற பிறகு அங்கு வன தேவதைகளும் மர வழிபாடும் மறைந்து விட்டது என்றாலும் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது வைக்கப்படும் கிறிஸ்துமஸ் மரம் இன்றும் அங்கிருந்த மர வழிபாட்டின் எச்சமாகவே தங்கி இருக்கிறது.

மரமும் கருவளமும்

ஜெர்மனியில் கிறிஸ்துமசுக்கு முந்தைய இரவில் பழம் தரும் மரங்களை ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கயிறால் கட்டி வைப்பது மரபு. இது மரங்களுக்கு இடையிலான திருமணச் சடங்கைப் போன்றதாகும். மரங்களை இணைத்து வைத்தால் அவை நன்றாக பழுக்கும் எனபது ஜெர்மானிய விவசாயிகளின் நம்பிக்கை.

மற்றொரு இனத்தவர் கிராம்பு மரங்கள் பூக்கும் வேளையில் அது கருவுற்றிருப்பதாக நம்பி அந்த மரங்களின் அருகே எவரும் சென்று தொந்தரவு தரக் கூடாது; அங்கு யாரும் சத்தம்

போடக் கூடாது, இரவில் விளக்கெடுத்து கொண்டு அவ்வழியே போய் அதன் உறக்கத்தைக் கெடுக்கக் கூடாது; நெருப்பு கொண்டு போகக் கூடாது; மரம் பயந்துவிட்டால் பழங்கள் பழுக்காமல் நின்றுபோய்விடும். பழுக்காது அல்லது கடுங்காயாகவே உதிர்ந்துவிடும். மரத்துக்கு மரியாதை தரும் வகையில் அவ்வழியே செல்பவர்கள் தலையில் தொப்பி வைக்கக் கூடாது. ஆனால் தனது தலையைத் துணியைக் கொண்டு மூடிக்கொள்ள வேண்டும். என்ற கட்டுப்பாடுகள் விதித்தனர்.

இது போன்ற ஆதி காலச் சமயத்தின் பழக்க வழக்கங்கள் தான் பின்னர் தெய்வம் இருக்கும் கோவில்களில் யாரும் தனக்குக் குடை பிடிக்கக் கூடாது, தலையில் முண்டாசு கட்டக் கூடாது; என்று தென் பகுதியிலும் வடக்கிலும் மேற்கிலும் பெண்கள் தலையை துணியால் மூடிக்கொள்ள வேண்டும் என்றும் நம்பிக்கைகள் வளரக் காரணம் ஆயிற்று.

மரங்களுக்கு உயிர் இருப்பதால் அவை அழும் ஒலி பல மைல்களுக்குக் கேட்கும் என்று நம்பினர். ஒரு முறை அரவிந்தர் ஆசிரமத்தைச் சேர்ந்த அன்னை இரவில் ஒரு மரம் அழும் ஒலி கேட்பதாகச் சொல்லியபடி எழுந்து வந்து பார்த்த போது அங்கு ஒரு

மரத்தில் ஒரு கோடரி அப்படியே வெட்டி வைக்கப்பட்டு இருந்தது. அதை அவர் எடுத்துத் தரையில் போட்டார். பின்பு மரத்தின் அழுகை கேட்கவில்லை என்றார்.

மரம் வெட்டுபவர்கள் அந்த மரத்தை வணங்கி அதனிடம் உத்தரவு பெற்றுத் தான் வெட்டுவர். இப்பழக்கம் அந்தக் காலத்தில் மட்டுமல்ல இப்போதும் உண்டு. இரஷ்யாவில் ஒரு பகுதியில் மரத்தை வெட்டுவதற்கு முன்பு ஆட்டை வெட்டி அதன் இரத்தத்தைத் தெளித்து மர தேவதையை சாந்தப்படுத்துவர். உரோம் நாட்டில் மரம் வெட்டும் விவசாயி பன்றியை வெட்டி அதன் இரத்தத்தைக் கொண்டு அடிமரத்தை மெழுகுவார். பிறகு வணங்கி உத்தரவு பெற்று வெட்டுவார்.

ஸ்வீடன் நாட்டின் பழைய தலை நகரமான உப்சாலாவில் மிகப் பெரிய புனித வனம் ஒன்று வழிபாட்டுக்குரியதாகப் போற்றப்பட்டு வந்தது. இங்குக் கடம்ப வனம், தில்லை வனம் என்றிருப்பதைப் போல அங்கும் ஒரே வகை மரம் அடர்ந்து காணப்படும் வனங்களும் இருந்தன. இவ்வனத்தில் உள்ள ஒவ்வொரு மரமும் தெய்வ சக்தி உடையது ஆகும். அங்குள்ள எந்த மரத்தையும் மனிதர்கள் வெட்டுவதோ காய் கனிகளைப் புசிப்பதோ கிடையாது. அவ்வாறு

செய்வது அம்மரத்தை எச்சில் படுத்தியதற்குச் சமம் ஆகும். எனவே அதன் புனிதத்தைக் காப்பாற்றும் வகையில் மரங்களைப் பாதுகாப்பது மரபு. இதை நம் சங்க இலக்கிய நன்னன் கதையுடன் ஒப்பு நோக்கலாம். செல்த்தியர்கள் ஓக் *[oak]* மரங்களைத் தெய்வீக மரமாகக் கருதி வழிபட்டனர்.

மரங்களை வழிபட்டு வந்த லித்துவேனியர்கள் பதினான்காம் நுற்றாண்டு வரை இப்பழக்கத்தைப் பின்பற்றினர். பின்னர் இவர்களும் கிறிஸ்தவத்துக்கு மாற்றப் பட்டதால் பழைய நம்பிக்கைகளையும் மரபுகளையும் கைவிட்டனர். உரோமர்களின் தலைவனான ரோமுலஸ் நினைவாக அத்தி மரம் அங்கு வழிபடு பொருளாக இருந்தது. பாலதின் மலையில் வளர்ந்த கார்நெல் *[cornel]* மரம் உரோமர்களின் புனித மரமாகக் கருதப்பட்டது. இந்த மரம் வாடியிருப்பதை வழிப்போக்கர் கவனித்தால் உடனே பெரிய கூப்பாடு போடுவார்; அதைக் கேட்டு அருகில் இருக்கும் கிராமத்தார் வாளிகளில் நிறைய தண்ணீர் கொண்டு வந்து ஊற்றி மரத்தைச் செழிக்கச் செய்வர். மரம் வாடினால் மக்கள் வாழ்வும் வாடி விடும் என்பது அவர்களின் நம்பிக்கை.

கிழக்கு ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வந்த வாணிக்கா இனத்தவர் தென்னை மரத்தைத் தமது தெய்வமாகக் கருதினர். அதனை அம்மா என்றே அழைத்தனர். நாம் தென்னம் பிள்ளை என்று பிள்ளையாகக் கருதுகிறோம் ஆப்பிரிக்கர்கள் அதை அன்னையாகக் கருதினர். தென்னை மரத்தை வெட்டிச் சாய்ப்பது அன்னையைக் கொன்ற பாவத்துக்கு நிகரானதாகும் என்று வாணிக்கா இனத்தைச் சேர்ந்த ஆப்பிரிக்கர் நம்பினர்.

மரங்களுக்கு உயிர் இருக்கிறது. அதனை ஒடிப்பதும் உடைப்பதும் அதன் பிஞ்சுக் கைகளை முறிப்பதற்குச் சமம் ஆகும் என்று பௌத்த சமயத்தவர்கள் பிரச்சாரம் செய்து மரம் செடி கொடிகளை அழிவில் இருந்து காப்பாற்றினர். தமிழகத்திலும் இவர்களே காடுகளில் வசித்துத் தற்காப்புக் கலைகளான கராத்தே, குங்ஃபு போன்றவற்றைக் கற்றனர். மருத்துவம், சோதிடம், இரசவாதம், மாந்திரிகம் போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்களில் பலர் சைவ வைணவ எழுச்சிக்குப் பிறகு சித்தர்கள் என்று அறியப்பட்டனர். பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்த கேரளத்தில் இன்றும் மரங்களில் உறைந்திருக்கும் தேவதையை யட்சி என அழைத்து அதனைக் கண்டு அஞ்சி ஓடும் நிலையும் உள்ளது.

அஸ்ஸாம் காடுகளில் வசிப்போர் தங்களின் குழந்தை தொலைந்து விட்டது என்றால் மரத்தில் உறையும் தெய்வங்கள் கவர்ந்து சென்று விட்டன என்று நம்புவர். அதனால் குழந்தை கிடைக்கும் வரை மரத்தின் கிளைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிப் பின்னப்படுத்துவர். அபோது தான் அந்த மரத்தில் இருக்கும் தெய்வம் தமது குழந்தையைக் கொண்டு வந்து திருப்பித் தரும் என்று நம்பித் தண்டிப்பர்.

மரங்களில் உறைந்திருப்பதாக நம்பப்பட்ட தெய்வம் பெரும்பாலும் பெண் தெய்வமாகவே இருப்பதுண்டு. இதில் மக்களுக்கு நல்லது செய்யும் தெய்வங்களும் உண்டு. சில மரங்களில் துஷ்ட தெய்வங்கள் உறைந்திருப்பதும் உண்டு என இம்மர வழிபாட்டின் நம்பிக்கை காலப் போக்கில் பெரியளவில் கிளை விட்டு வளர்ந்தது.

காங்கோ இனத்து மக்கள் மரங்களின் கீழ் நம் மக்களைப் போலப் படையலிட்டு வணங்குவர். அப்போது மதுக் குடங்களை மரத்தடியில் வைத்து விடுவர். மரங்கள் தாகம் எடுக்கும் போது இந்த மதுவைக் குடித்துத் தாகம் தீர்க்கும் என்று நம்பினர்.

ஆஸ்திரேலியாவிலும் பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் மக்கள் தங்களின் முன்னோர் மரங்களாக உருவவெடுத்திருப்பதாக நம்பி வணங்கி வந்தனர். தமது அப்பா தாத்தா ஆகியோர் மரமாக உருவெடுத்து வந்திருப்பதாக நம்பினர். இதற்கு முக்கியக் காரணம் அவர்கள் இயற்கை சார்ந்து வாழ்ந்த வாழ்க்கையும் அவற்றின் ஆதரவு வேண்டும் என்று நம்பிய நமபிக்கையும் எனலாம். ஜப்பானிலும் இந்நம்பிக்கை உண்டு.

மரங்கள் அடர்ந்த பகுதி தெய்வாம்சம் கொண்டதாக நம்பப்பட்டு வந்ததால் அங்குள்ள புனித மரத்தின் கீழ் இருந்து நம்ம ஊரில் பஞ்சாயத்து நடப்பது போல அங்கும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் பழக்கம் இருந்தது. பிறருக்குத் தர்மமாகக் கொடுக்க விரும்பும் பொருட்களை இம்மரத்தடியில் வைத்துச் செல்வது உண்டு. இந்த மரத்தடியில் வைத்து எடுத்துச் சென்றால் அந்தப் பொருளுக்கும் உயிருக்கும் இறைவனின் ஆசி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது. தெய்வீக மரத்தின் அடியில் தெய்வத்திற்குப் பலி கொடுக்கப்பட்டது. சில வளமைச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன ஏனென்றால் இந்த மரத்தில் தெய்வம் உறைந்திருப்பதாக

நம்பிக்கை இருந்ததால் மரங்களின் கீழ் இன்றைக்குத் தெய்வ சந்நிதானத்தில் நடக்கும் சடங்குகள் அனைத்தும் நடைபெற்றன

ஜப்பான் நாட்டில் சகுரா எனப்படும் செர்ரி மரத்தின் கீழ் முற்காலத்தில் இறந்தவர்களைப் புதைத்தனர். அவ்வாறு புதைக்கப்பட்ட அவர்கள் தங்களுடைய வம்சத்தினருக்கு மலர்களாக வந்து ஆசி வழங்குவதாக ஒரு நம்பிக்கையும் இருந்தது. எனவே இந்த மரங்கள் பூக்கும் காலங்களில் அந்த மரங்களின் அடியில் தங்களின் முன்னோர்களைப் புதைத்தவர்கள் அந்தந்த மரத்தடியில் வந்து உட்கார்ந்து அந்த மலர்கள் தங்கள் மீது உதிரும்போது முன்னோர்களின் ஆசி கிடைத்ததாக நம்பி மகிழ்ந்து வீடு திரும்புவது உண்டு. இப்பழக்கம் இன்றைக்கு மரத்தின் அடியில் யாரையும் புதைப்பதில்லை என்றாலும் மலர்கள் தம்மீது பொழிவதை மகிழ்ச்சியாகக் கருதும் போக்கு நீடித்து வருகிறது. இதனை மலர் காணுதல் *[flower viewing]* என்பர். பிளம்ஸ் மரங்களின் நிழலிலும் இவ்வாறு மக்கள் கூடும் பழக்கம் உண்டு. உமே எனப்படும் பிளம்ஸ் மரங்களின் அடியிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அமர்ந்து ஒரு நாள் முழுக்க செலவழிக்கின்றனர்.

சில இனத்தவர் மரங்களின் கீழ் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் வைத்திருந்ததால் இம்மரத்தின் கீழ் மழை பொழியும் சடங்குகளை நிறைவேற்றினர். மரத்தின் கிளைகளை வெட்டித் தண்ணீரில் நனைப்பதால் மரத்தில் உள்ள தெய்வம் குளிர்ந்து மழை பொழிவிக்கும் என்று நம்பினர். ஐரோப்பாவில் பல இனங்கள் இந்நம்பிக்கை உடையனவாகவே இருந்தன. மரங்கள் குளிர்வதால் மழை பொழியும் பயிர் செழிக்கும் என்று ஐரோப்பிய விவசாயிகள் ஆழமாக நம்பி மரங்களின் மீது தண்ணீரை ஊற்றினர்.

மரத்தில் தண்ணீர் ஊற்றுவதைப் போல மரத்தின் அடியில் சில மரக்குச்சிகளை மட்டும் போட்டு நெருப்பு வளர்ப்பதும் உண்டு. அந்த நெருப்பின் புகையால் மேகம் சூழ்ந்து மழை பொழியும் என்று நம்பினர். இவை ஆதி சமயத்தின் போன்மைச் சடங்குகள் ஆகும். மனிதன் தனக்கு என்ன நடக்க வேண்டும் என்று நினைக்கின்றானோ அதையே அவன் செய்து காட்டுவதாகும். மழை வேண்டும் எனில் தண்ணீரைக் கொட்டுவதும் மேகம் திரள வேண்டும் என்றால் புகை உருவாக்குவதும் என அக்காலத்தில் செய்யப்பட்ட சடங்குகளை ஜேம்ஸ் ஃபிரேசர் என்ற அறிஞர் போன்மைச் [போலச் செய்தல்] சடங்குகள் என்றார்.

ஒரு தெய்வ மரம் சாய்ந்துவிட்டால் ஊருக்கு அழிவு என்று அஞ்சினர். உடனே அதில் இருந்து ஒரு கிளையை எடுத்து மறு மரம் வளர்த்தனர். புது மரம் தளிர் விட்டதும் தமக்குப் புது வாழ்வு கிடைத்ததாக நம்பி மகிழ்ந்தனர். இன்றைக்கும் நமது கிராமங்களில் இவ்வழக்கம் இருந்து வருகிறது. சாமி மரம் வாடக் கூடாது என்பது மக்களின் பொதுவான நம்பிக்கை. சாலைகளை அகலப் படுத்துவதற்காக மரங்களை வெட்ட நேர்ந்தால் உடனே அதில் இருந்து ஒரு குச்சியை ஒடித்து எடுத்து நட்டு, தழைக்க வைக்கின்றனர்.

வழிபாடுகள் மட்டுமல்லாது பொது மன்றமாகவும் மரத்தடிகள் விளங்கின. வெல்டன் என்ற இனத்தவர் புனித மரத்தின் கீழ் உட்கார்ந்து சண்டை சச்சரவுகளைப் பேசித் தீர்த்து வைத்தனர் இந்த மரத்தடி ஒரு பொது மந்தை போல விளங்கியது இன்றைக்கும் தமிழகக் கிராமங்களில் மரத்தினடியில் அமர்ந்து பஞ்சாயத்துப் பேசுவதும் அந்தப் பகுதியை மந்தை என்று அழைப்பதும் அங்கு மந்தையம்மன் என்ற பெயரில் பெண் தெய்வம் ஒன்றை வைத்து வழிபடுவதும் பின்னர் அந்த மந்தை அம்மன் கோவில்கள் மாரியம்மன் கோவில்களாக உருமாறியதும் உண்டு.

மர வழிபாட்டின் தோற்றம் என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்தால் மக்கள் உயரமான வானத்தை நோக்கிச் செல்லும் மரங்களே நம்மை உயரத்துக்கு அல்லது மேலே அழைத்துச் செல்லும் ஒரு வாகனமாக நம்பினர். மேலே இருக்கும் அதீத சக்திகளிடம் அல்லது அமானுஷ்ய சக்திகளிடம் மனிதர்களைக் கொண்டு சேர்க்கும் சக்தி வாய்ந்தன என்று பிற்காலத்தில் ஸ்தூபிகள், கொடி மரம் மற்றும் கோவில் ஸ்தல விருட்சங்களை நம்பினர். இந் நம்பிக்கையே பின்னர் கோவில்களில் கொடி மரம் வைக்கும் பழக்கத்தையும் கொண்டு வந்தது.

ஆரம்பத்தில் மலை, மரம் போன்றவை தெய்வம் உறையும் சக்தி உடையவையாக நம்பப்பட்டு வந்தன பிர்காலத்தில் கோவில் போன்ற உயரமான கட்டிடங்களைக் கடவுளுக்கு எழுப்பும் போது அதில் கொடிமரத்தையும் தூண்களையும் மனிதர்கள் அதாவது மன்னர்கள் எடுப்பித்தனர்.

தமிழகத்தில் மர வழிபாடு ஆலமரம் அரசமரம் வேப்ப மரம் என்பதோடு நின்று போய்விடவில்லை. மானாமதுரை அருகே நான்கு ஊர்க்காரர்களுக்கு வேதியரேந்தல் என்ற ஊரில் ஒரு பெயர் தெரியாத ஒரு மரம் வழிபடும் மரமாக விளங்குகிறது. இந்த

மரத்திற்குப் பெயர் கிடையாது. இந்த மரத்தின் அடியில் ஒரு முனிவர் வந்து இருந்ததனால் அவர் தண்ணீர் தேடி மண்ணுக்குள் போய்விட்டதனால் அவரை முனீஸ்வரர் என்று அழைத்து அங்கு அவர் நினைவாக ஒரு முனீஸ்வரர் சிலையும் இப்போது வைத்திருக்கின்றனர். வேதியரேந்தல் கிராமத்தின் அருகில் இருக்கும் நெடுங்குளம், பூக்குளம், கீழ் பசலை, இளைய நாயக்கன் ஆகிய நான்கு ஊர்களைச் சேர்ந்த மக்களுக்கும் இம்மரம் குல தெய்வமாக விளங்குகின்றது. இம்மரம் தரையோடு தரையாகப் படர்ந்து ஒரு அதிசய மரமாக அமைந்துள்ளது. இந்த மரத்தின் நிழலில் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

ஆப்பிரிக்காவை சேர்ந்த மரம் இதுவென்று தற்போது மர ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். ஆனால் உருவ வழிபாடு வேண்டி அங்கு வைக்கப்பட்ட முனீஸ்வரரை தர்ம முனிஸ்வரர் என்று அழைக்கின்றனர். தண்ணீர் தேடி பூமிக்குள் சென்ற அவர் மரமாகி விட்டதாக நம்பி அங்கு வாழும் மக்கள் அவரைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

காலப்போக்கில் அபூர்வ மரங்களை *[rare species]* இனம் கண்டு பராமரித்து அவற்றை வழிபாட்டுக்குரியனவாகக் கருதினர். பின்னர் அபூர்வ மரங்கள் இருந்த இடத்தில் தெய்வ சக்தி

இருக்கின்றது என்ற நம்பிக்கையில் அங்குக் கோவில்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு ஸ்தல விருட்சம் அமைந்ததும் இதன் வழியில் தான் எனலாம்.

திருவானைக்காவலில் தல விருட்சமாக இருக்கும் வெண் நாவல் மரம் ஒரு அபூர்வ வகையைச் சேர்ந்தது ஆகும். மதுரை பழங்காநத்தம் பகுதியில் காசி விஸ்வநாதர் கோவிலில் இருக்கும் வில்வமரம் அபூர்வமான ஏழு இலை வில்வ மரமாகும். இது போன்ற அபூர்வ மரங்கள் ஆரம்பத்தில் வழிபடப்பட்டு சைவ சமய எழுச்சிக்குப் பிறகு பின்னர் தல விருட்சங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. நாகை மாவட்டத்தில் திருவிற்குடி திருப்பயன்குடி ஆலயம் உள்ளது. இங்கு



சிலத்தி மரம் என்பது ஸ்தல விருட்சமாக இருக்கிறது. இச் சிலத்திமரம் சித்திரை முதல் நாளில் இருந்து வைகாசி 18 ஆம் நாள் வரை சுமார் 48 நாட்கள் மட்டுமே பூ பூக்கும். இது ஒரு அபூர்வ மரமாகும். மதுரைக்குக் கடம்ப மரமும் பிள்ளையார்பட்டிக்கு மருதமரமும் சிதம்பரத்திற்குத் தில்லை மரமும் காஞ்சிக்கு நான்கு வகைச் சுவையுடைய காய் காய்க்கும் மா மரமும் என ஒவ்வொரு தெய்வ ஸ்தலத்துக்கும் ஒவ்வொரு மரமும் சிறப்பான மரமாகத் தலவிருட்சமாகப் போற்றப்படுகிறது. பின்னர் ஸ்தல புராணங்கள் எழுந்த காலத்தில் இந்த ஸ்தல விருட்சங்களும் அந்தப் புராணத்தில் முக்கிய இடத்தைப் பெற்று விட்டன. மரத்தின் அடியிலும் தெய்வ தரிசனம் தெய்வப் பரிகாரங்கள் நடந்ததாகக் கதைகள் எழுதப்பட்டன.

நாட்டுப்புறக் கதை வடிவங்களில் சமய நம்பிக்கைகளில் வன்னிமரம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மகாபாரதக் கதையில் பஞ்சபாண்டவர்கள் வன்னி மரத்தினடியில் தங்கள் ஆயுதங்களை ஒளித்து வைத்துவிட்டுப் போனதாகவும் மீண்டும் அவற்றை வந்து எடுத்துப் பூஜை செய்த நாளே ஆயுத பூஜை நாளாகக் கொண்டாடப் படுவதாகவும் கூறப்படுகிறது. இது தவிர

நாயக்கர் காலத்தில் முஸ்லிம் தளபதிகள் இந்துப் பெண்களைக் கவர்ந்து செல்ல முனைந்த போதும் பெண் கேட்டு வந்த போதும் அந்த பந்தத்தைத் தவிர்ப்பதற்காக பெண்ணோடு குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்தனர். அவ்வாறு ஊரை விட்டுக் கிளம்பி வந்த போது வன்னிமரம் ஆற்றின் நடுவே குறுக்கே விழுந்து இவர்கள் மறுகரைக்குக் கடந்து செல்ல உதவியதாகவும் முஸ்லிம்கள் ஆற்றின் அக்கரையில் வந்து நின்றபோது அவர்கள் ஆற்றைக் கடக்க இயலாத வகையில் மரங்கள் நிமிர்ந்து கொண்டன என்றும் கதைகள் சொல்லி வருகின்றனர். இதனால் வன்னிமரம் பல இனங்களுக்குக் குல தெய்வமாக விளங்குகின்றது

இதுபோல வேறு சில மரங்களும் இதே கதையின் மறு வடிவங்களாக இருப்பதை நாட்டுப்புறவியல் நமக்கு விளக்குகின்றது. கதையில் பெண் கொள்ள வரும் ஆதிக்க சாதியினர் அல்லது இனத்தவர் அரச வகுப்பினர் மாறியுள்ளனர். மற்றபடி கதை ஒன்றுதான்.

அபூர்வ மரங்கள் மற்ற மரங்களை விட வித்தியாசமானதாகத் தோன்றியதால் அவற்றில் தெய்வ சக்தி குறைந்து இருப்பதாக எண்ணி ஆதிகால மனிதன் பயந்து மரங்களுக்குப் பலி

கொடுத்து பூசைகள் செய்து மரத்தில் உறைந்திருக்கும் சக்தியைச் அமைதிப் படுத்தினான். மரத்தில் உறையும் தெய்வம் தன்னைக் காக்க வேண்டும் என்று வணங்கிச் சில காணிக்கைகளையும் தனக்கு உயர்வாகத் தோன்றும் பொருட்களையும் அவன் மரத்திலுள்ள இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான்.

மர வழிபாடும் மரத்தில் உறையும் தெய்வ சக்தி பற்றிய நம்பிக்கைகளும் பௌத்த மதத்தின் இயற்கை வழிபாட்டில் இன்றும் காணப்படுகின்றன. மரத்தில் யட்சி/ இயக்கி/ இசக்கி உறைந்து இருப்பதாக பௌத்த மதத்தில் நம்பிக்கை உண்டு. பவுத்தம் செல்வாக்குப் பெற்றிருந்த கேரளத்தில் யட்சி என்றும் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இசக்கி என்றும் இத்தெய்வம் அழைக்கப்படுகிறது. மேலும் மரத்தில் உறையும் தெய்வீக சக்தி நல்ல சக்தியாக இருந்து மனிதர்களுக்குப் பாதுகாப்பும் வளமும் தருவதாக இருக்க வேண்டும் என்ற பயத்தில் மக்கள் மரங்களில் உள்ள தெய்வத்தை வழிபட்டனர்.

பௌத்தம் பிரபலமாக இருந்த கேரளாவில் பல இடங்களில் மரங்கள் வெறும் மரங்களாகவே இன்றும் வழிபடப்பட்டு வருகின்றன. அமிர்தபுரி என்கிற ஊருக்கு

அருகில் உள்ள ஊர் சேரி என்ற இடத்தில் பெரிய பெரிய மரங்களாக ஒரே இடத்தில் ஐந்து ஆறு மரங்கள் இருக்கின்றன. அவை தெய்வ சக்தி உள்ளவையாகப் பரம் பொருள் என்று அழைக்கப்பட்டு இன்றைக்கும் சிறப்பு வழிபாடுகள் தினமும் நடக்கின்றன.

ஆல மரங்கள் இருக்கும் பகுதியில் பிள்ளையாரை அதன் அடியில் வைத்து அதனை வழிபடு பொருளாகக் கருதியதற்கு இன்னொரு முக்கியக் காரணமும் உண்டு. பூமிக்கடியில் நீரோட்டம் அதிகமாக இருக்கும் இடத்தில் மட்டுமே ஆல மரம், அரச மரம் மற்றும் நாவல் மரம் வளரும். எனவே இம்மரங்கள் பெரும்பாலும் ஏரி, கண்மாய் மற்றும் குளம், ஆறு ஆகியவற்றின் கரைகளில் காணப்படும் இந்த மரங்களைப் பாதுகாத்தால் அடியில் இருக்கும் நீரோட்டம் பாதுகாக்கப்படும் என்பதாலும் இந்த மரத்தில் தெய்வம் உறைந்திருப்பதாக நம்பிக்கையை உருவாக்கி அங்கு தெய்வச் சிலைகளை வைத்து மரத்தையும் சமயத்தையும் ஒரு சேரப் பாதுகாத்து வந்தனர். தெய்வம் உறைந்திருக்கும் மரங்கள் என்றால் அதனை யாரும் சேதப்படுத்த மாட்டார்கள் மரங்களும் பாதுகாக்கப்பட்டன; மரங்களின் உதவியால் மனிதர்களுக்கும் பல நன்மைகள் விளைந்தன.

ஆதி கால மனிதன் மரங்களைத் தெய்வமாக வழிபட்டு வந்த போது தன்னை ஏதேனும் ஒரு தாவரத்தின் வழி வந்தவனாக நம்பிக் கொண்டான். இதனால் அந்தத் தாவரம் அவனுடைய குல முதல்வராக, மூத்தவராக நம்பப்பட்டது அதனால் அவன் அந்தத் தாவரத்திற்கு சேதம் விளைவிப்பது கிடையாது. மரம் செடி கொடி பறவை விலங்கு ஆகியவை அவனுடைய குல முதல்வனாகக் *[totem]* கருதப்பட்டன. இதனையே செங்கீரைக் கூட்டம், காடைக் கூட்டம், குருவிக் கூட்டம் என்று மக்கள் தங்களுக்குப் பெயர் வைத்துக் கொண்டு அழைக்கின்றனர். செங்கீரைக் கூட்டத்தார் செங்கீரையைப் பறித்து உணவாக்கி உண்பது கிடையாது. காடைக் கூட்டத்தார் காடையை உண்ண மாட்டார்கள். இவ்வாறு இந்த மரங்கள் அல்லது இந்தச் செடி கொடிகள் அவர்களின் குல முதல்வராகக் கருதப்பட்டன.

சங்க இலக்கியத்தில் ஒரு மரத்தில் இருந்து நீரில் விழுந்த காயைச் சாப்பிட்ட ஒரு இளம் பெண்ணை நன்னன் என்ற மன்னன் கொன்றுவிடுகிறான் அவனுடைய பெற்றோர் அந்தப் பெண்ணின் எடைக்கு ஒன்பது ஒன்பது அதாவது எண்பத்தொரு மடங்கு தங்கம் தருவதாகச் சொல்லியும் கூட அவன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அவளைக் கொன்று

விடுகிறான் இதற்குக் காரணம் அந்த மரம் அவனுடைய தெய்வம்; அவனுடைய குலம் காக்கும் காவல் மரம். அந்தத் தெய்வ மரத்திலிருந்து விழுந்த காயை அவள் எச்சில் படுத்தியதால் அந்த மரத்தையே அவள் அசிங்கப்படுத்தியதாகக் கருதினான். எனவே அவளை அவனால் மன்னிக்க முடியவில்லை. அவளுக்குக் கொலைத் தண்டனை அளிக்கிறான். இவளே இப்போது மாசாணி அம்மனாக வழிபடப் படுகிறாள். குலமுதல்வன் அல்லது தெய்வக் குறியீடாகக் கருதப்படும் மரங்கள் அதன் இனத்தவர்களால் மிக உயர்வாகப் போற்றப்பட்டன.

சேர, சோழ, பாண்டியர்கள் தங்களுடைய அடையாளமாக பனம் பூ, அத்திப்பூ, வேப்பம் பூ ஆகியவற்றைச் சூடிக் கொண்டதும் கூட இந்த மர வழிபாட்டின் பிந்தைய வடிவங்களே ஆகும். அது போல சங்க இலக்கியத்தின் புறத்திணை வடிவங்களில் வெட்சி, கரந்தை, நொச்சி வாகை போன்ற மலர்கள் ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் அடையாளப் பூக்களாகக் கொள்ளப்பட்டன. இவற்றையும் மர வழிபாட்டின் எச்சங்களாகவே புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் ஒரு குழந்தை பிறந்த போது மரம் நட்டு வளர்ப்பதும் கன்றுக்குட்டி

வாங்கி விடுவதுமான பழக்க வழக்கங்கள் இருந்துள்ளன. அவ்வாறு மரங்களை வைத்து வளர்த்து வருபவர்கள் அந்த மரங்களைத் தங்களுடைய வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கும் ஈர நெஞ்சம் உடையவர்களாக இருந்து வந்தனர். தன் காதலனோடு பேசிக் கொண்டிருக்கும் ஒரு பெண் 'புன்னை மரத்திற்கு அடியில் போய் நின்று பேச வேண்டாம் வா; அவள் என் அம்மா வைத்து வளர்த்த மரம்; எனவே அவள் எனக்கு அக்கா முறை ஆகிறாள்; அக்காவின் முன்பு காதலனோடு பேசுவதற்கு எனக்குக் கூச்சமாக இருக்கிறது' என்று தலைவி தலைவனிடம் சொல்வதாகச் சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் உண்டு. 'நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும் என்று, அன்னை கூறினள் புன்னையது சிறப்பே' என்று தன் தாய் அந்தப் புன்னை மரத்தின் சிறப்பைப் பற்றிக் கூறியதைத் தன் தலைவனிடம் அப்பெண் எடுத்துரைக்கின்றாள்.

மரங்களுக்குள் திருமணம்

ஆதி மனிதனின் அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்துவதாக இருப்பது ஆலமர அரசமர வேப்பமர வழிபாடுகளாகும். இந்த மூன்று மரங்களும் விஞ்ஞான ரீதியாக மனிதனுக்கு மிகுந்த நன்மையைத் தரக் கூடியவை. அரசமரம்

வேப்ப மரம் ஆகியவை அதிக ஆக்ஸிஜனை வெளியேற்றுவதால் அந்த மரத்தடியில் இருக்கும் மனிதர்களுக்கு உடல் ரீதியாக இருந்த கோளாறுகள் விலகி நல்ல ஆரோக்கியம் உண்டாகிறது. எனவே அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் சுற்ற வேண்டும் என்று ஒரு பழக்கம் மக்களிடையே ஏற்பட்டது.

ஆல் வேம்பு என்ற இரண்டு மரத்தையும் தனித்தனியாகச் சுற்றுவதை விடச் சேர்ந்து சுற்றலாம் என்ற நோக்கத்தில் தான் அரசமரத்துக்கும் வேப்பமரத்துக்கும் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் உண்டானது. அரச மரம் என்பது ஆணாகவும் வேப்பமரம் என்பது பெண்ணாகவும் கருதப்பட்டு இரண்டு மரத்துக்கும் திருமணச் சடங்கினை நிறைவேற்றுகின்றனர். இரண்டையும் அருகருகே வைத்து வளர்த்து அந்த மரத்தைச் சுற்றி வருவதற்கும் பக்தர்களுக்கு அல்லது மனிதர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றனர். வடக்கே துளசிக்கு இவ்வாறு திருமணம் செய்விப்பதுண்டு. வெளி நாடுகளிலும் மரங்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் இருந்தது. இதனால் வேளாண்மை செழிக்கும். மரங்கள் நன்கு வளரும் என்று நம்பினர்.

வேப்பமரம் என்பது பெண்ணாகக் கருதப்பட்டதால் வேப்பமரத்தின் கீழ் மாரியம்மன் வழிபாடும் இணைந்து கொள்கிறது. மாரியம்மன் வழிபாடு பொதுவாக கோடை காலங்களில் நடைபெறுவது உண்டு. இதற்கு முக்கியக் காரணம் கோடை காலத்தில்தான் அம்மை நோய் வருவதற்கு வாய்ப்பு உண்டு. இந்த அம்மை நோய்க்கு அக்காலத்தில் இருந்த ஒரே மருந்து வேப்பமரத்துக் காற்றும் வேப்பிலையும் ஆகும். வேப்பிலையையும் மஞ்சளையும் அரைத்து அதனை உண்ணக் கொடுப்பதன் மூலமே அம்மை நோயைச் சுகப்படுத்த முடிந்தது. எனவே அம்மை நோய் வராமல் இருப்பதற்காக வேப்பமரத்தின் கீழ் மாரியம்மனை வைத்து வழிபட்டனர். வேப்ப மரத்தைச் சுற்றி வருவதற்காகவே மாரியம்மன் தெய்வ வழிபாடும் தோன்றியது.

அதிக நேரம் வேப்பமரத்தின் கீழ் இருப்பவர்களுக்கு அம்மை வைசூரி போன்ற நோய்கள் வருவதில்லை. அம்மைத் தடுப்பு மருந்து பயன்படுத்தப்பட்டு இன்றைக்கு உலகத்திலேயே வைசூரி எனப்படும் பெரியம்மை தடுக்கப்பட்டு விட்டதால்

அம்மை நோயின் அபாயங்கள் இன்றைய தலைமுறையினருக்கு அதிகம் தெரிவதில்லை. வைசூரி எனப்படும் பெரியம்மை தாக்குதல் நடந்தபோது பலருக்கு உடல் முழுக்க அம்மைத் தழும்புகளும் சிலருக்குக் கண் பார்வையும் கூடப் போய் விட்டது. இவர்களை வாழையிலையில் படுக்க வைத்து அவர்களுக்குக் குளிர்ச்சியூட்டி வந்தனர். இன்றைக்கு வைசூரி எனப்படும் பெரியம்மை

தாக்குதல் உலகில் எங்கும் இல்லை என்று நம்பப்படுகிறது. இந்நோய் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டது.

மரங்களில் உறையும் தெய்வங்கள் அல்லது ஆவிகள் நல்ல ஆவியாக இருக்கும்போது அதனைத் தெய்வம் என்றும் கெட்ட ஆவியாக அந்த மரத்தின் பக்கம் நடந்து போகின்றவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடிய கெட்ட ஆவி அல்லது துஷ்ட ஆவி என்றும் அழைக்கின்றனர். மரங்களின் கீழ் உறையும் நல்ல ஆவிகளுக்கு அம்மனாகக் கருதி சிலை எடுக்கப்பட்டு அங்கு வழிபாடுகள் செய்யப்படும். வன்னி மரத்தையும் வேப்ப மரத்தையும் அம்மன் என்ற பெயரில் வழிபடுகின்றனர்.

புளியமரத்தில் பேய் இருக்கும் என்ற நம்பிக்கை புளியமரத்தின் கீழ் ஆக்சிஜன் குறைவாக இருக்கும் என்பதால் ஏற்பட்டது. அங்கு மூச்சுத் திணறல் ஏற்படும். புளிய மரத்தின் கீழ் இரவில் உறங்கும் பொழுது ஆக்சிஜன் குறைவாகக் கிடைப்பதால் மூச்சு விட முடியாமல் நெஞ்சில் யாரோ அமுக்குவது போலத் தோன்றும். இதைத்தான் புளியமரத்தடியில் இருக்கும் பேய் பிசாசு அல்லது அமுக்குப் பிசாசு என்றெல்லாம் அக்காலத்தில் சொல்லி

வந்தனர். பொதுவாகவே மரத்தின் கீழ் இரவில் இருப்பது கூடாது. அப்போது இலைகள் கரியமில வாயுவை வெளியேற்றும். இதனால் மனிதர்களுக்குப் போதிய ஆக்சிஜன் கிடைக்காமல் திணறுவர். புளியமரத்தில் ஆக்சிஜன் மிக மிகக் குறைவாக இருக்கும்.

மரங்களில் துஷ்ட ஆவிகள் இருப்பதாக நம்பப்படும் போது அந்த மரத்தில் பேய் இருக்கிறது என்ற நம்பிக்கை உண்டாகி அந்த நம்பிக்கை பரப்பப்படுகிறது. பேய் பிடித்தவர்களுக்கு மரத்தில் போய் அந்த பேயை ஆணியடித்து இறக்கி விடும் பழக்கம் இருந்ததால் ஆணியடித்த மரங்களில் பேய் இருப்பதாகவும் துஷ்ட ஆவி இருப்பதாகவும் நம்புகின்றனர். இதனால் மர வழிபாட்டில் நல்ல மர வழிபாடும் உண்டு; பேய் உறையும் மரங்களும் உண்டு என்ற நம்பிக்கை வளர்ந்தது.

‘பெருக்கமரம்’

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகில் உள்ள வேதியரேந்தல் என்ற கிராமத்தில் உள்ள தருமமுனீஸ்வரர் கோவில் வளாகத்தில் 6000 சதுர அடி வரை படர்ந்து வளர்ந்துள்ள இரு பெருமரங்கள் இக்கோவிலின் தலமரம் போல் விளங்குகின்றன.

இக்கோவில் வளாகத்தில் இரண்டு பெருமரங்கள் உள்ளன. இவற்றின் வயது 500 ஆண்டுகள் என்றும் இக்கோவிலுக்கு வருபவர்கள் கடவுளை மட்டுமின்றி இம்மரத்தையும் வழிபடுவதாகவும் கூறுகின்றனர்.

மடகாஸ்கர் என்ற தென்கிழக்கு ஆப்பிரிக்க நாட்டில் இருந்து இந்தியாவிற்கு இம்மரம் வந்ததாக இந்தியத் தாவரவியலாளர்கள் குறிப்பிடுகிறார். 5000 ஆண்டுகள் வரை இம்மரத்தின் ஆயுள்காலம் ஆப்பிரிக்காவில் உள்ளதாகவும் ஆடன்சன் குறிப்பிடுகிறார். இலங்கையிலும் இம்மரம் காணப்படுகிறது. அங்கும் அயல் நாட்டு மரமாகவே இம்மரம் கூறப்படுகிறது. இலங்கையின் வடபகுதியில் அரேபியர் குடியிருப்புகளில் இம்மரத்தை நட்டு வளர்த்தாகவும், புத்தளம் திகழி போன்ற இஸ்லாமியர் வாழும் ஊர்களில் இம்மரம் இருந்த தாகவும் புத்தளம் ஊரின் வரலாறை எழுதிய ஷாஜகான் குறிப்பிடுகிறார். மேற்கூறிய இரு ஊர்களிலும் உள்ள பள்ளிவாசல்களில்

இம்மரங்கள் இருந்ததாகக் கூறும் இவர், இது தொடர்பாக 'ஊருக்கலங்காரம் ஒசந்த பள்ளி பெருக்கமரம்' என்ற நாட்டார் பாடல் வரிகளை மேற்கோளாகக் காட்டுகிறார். அத்துடன் இலங்கையைச் சேர்ந்த வரலாற்றறிஞர் சைமன் காசிச்செட்டி என்பவர் புத்தளம் என்ற ஊரில் உள்ள பள்ளிவாசலில் வளர்ந்திருந்த 'பெருக்கமரம்' (பெருமரம்) குறித்து எழுதியுள்ள பின்வரும் பகுதியை மேற்கோளாகக் காட்டுகிறார். இம்மரத்தைத் தமிழில் 'பப்பரப்புளி', 'இராட்சதப் புளி' எனவும், 'தொதி' எனவும் 'பெருக்கமரம்' எனவும் அழைப்பர்.

— **பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்**

நன்றி!

தமிழ் மரபு அறக்கட்டளை,

வாட்ஸ்அப் பதிவு

<u>நவ வனம் வழிபாடு *(Worship of Sacred groves)*</u>

1.	மதுவனம்	-	நன்னிலம்
2.	மறை வனம்	-	வேதாரண்யம்
3.	கடம்ப வனம்	-	மதுரை
4.	முல்லை வனம்	-	திருக்கருகாவூர்
5.	செண்பக வனம்	-	திருநாகேஸ்வரம்
6.	வில்வ வனம்	-	திருவாடானை
7.	குண்டலி வனம்	-	திருவக்கரை
8.	மாதவி வனம்	-	திருமுருகன் பூண்டி
9.	வேணு வனம்	-	திருநெல்வேலி

2. உலகளாவிய காளி வழிபாடு

பெண்ணின் ஆற்றலைப் பழங்காலச் சமயம் காளி என்றும் நவீனப்படுத்தப்பட்ட சமயம் தேவி என்றும் இரண்டாக வகுத்துள்ளது. ஆக்ரோஷமான கொடூரமான ஆற்றல்மிக்க கொலைக் குணம் படைத்தவளாக வேட்டைச் சமுகத்தில் தோன்றிய தெய்வம் கருமை நிறம் கொண்ட காளி. வேட்டைச் சமுதாயம் மறைந்து வேளாண் சமுதாயம் மலர்ந்த பின்பு பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதும் சாந்தமான அமைதியான தெய்வீகமான அம்சமாகத் தோற்றுவிக்கப்பட்டவள் தேவி. இவ்விரண்டில் அசுரத்தன்மை மிகுந்த காளி கருப்பு நிறம் கொண்டவளாக உருவகிக்கப் படுகிறாள். தேவி மென்மையான சிவந்த வண்ணம் கொண்டவளாகக் காட்டப்படுகிறாள்.

காளி - தேவி முரண்பாடுகள்

காளி தலைவிரி கோலமாகச் சிங்கப்பல்லுடன் நாக்கைத் தொங்க விட்ட படி நிர்வாணமாக ஒரு கையில் கத்தி அல்லது அரிவாள் மறு கையில் வெட்டப்பட்ட தலையின் உச்சி மயிரைப் பிடித்தபடி இன்னொரு கையில் அந்த தலையில் இருந்து

வடியும் ரத்தத்தை ஒரு பாத்திரத்தில் ஏந்தியபடி கொடூரமான உருவத்துடன் காட்டப் படுகிறாள். ஆனால் தேவியோ மன்னனின் மகளாக, சிவனின் மனைவியாக, விநாயகர் மற்றும் முருகனின் தாயாக, திருமாலின் தங்கையாகப் பல குடும்ப உறவுகள் கொண்ட அமைதியான பெண்ணாகக் காட்டப்படுகிறாள். இந்த அமைதியான பெண் கோபம் கொண்டு கணவனோடு சினந்து முனிந்து போராடும் போது அவள் சபிக்கப்படுகிறாள்.

தேவிக்குத் தண்டனை

காளி அடங்காதவள்; அவள் ஆண்களைக் கருவறுப்பாள்; தண்டிப்பாள்; ஆணுக்கு அடங்கமாட்டாள்; ஆண் வாடை அறியாதவள் ஆணை வெறுப்பவள். ஆனால் தேவியோ கணவனுக்குக் கட்டுப்பட்டவள். பதிவிரதை. அவள் கணவனுக்கு அடங்கவில்லை என்றால் கணவனால் தண்டிக்கப்படுவாள். பூலோகத்திற்கு இறக்கப்படுவாள்; அங்கு தன் கணவனாகிய சிவனை நினைத்துத் தவமிருந்து மீண்டும் தன் கணவனுடன் இணைவாள்.

தேவலோகத்தில் இருப்பதாகக் கருதப்படும் தெய்வங்களுக்குப் பூலோகம் 'பனிஷ்மெண்ட் டிபார்ட்மெண்ட்' அல்லது தண்டனை வழங்கும் சிறைச்சாலையாக

விளங்குகின்றது. எனவே மேலோகத்தில் தவறு செய்து தண்டனை பெற்றவர்கள் எல்லோரும் பூலோகத்திற்கு வந்து தண்டனைக் காலத்தை அனுபவித்துப் பின்பு பாவ விமோசனம் பெற்று மேலோகத்திற்குத் திரும்பிச் செல்கின்றனர்.

பல வண்ணக் காளி

தெய்வமான காளியைப் பச்சைக் காளி என்றும் பவளக்காளி என்றும் கருங்காளி என்றும் பல வண்ணங்களில் காண்கிறோம். பெரும்பாலும் பச்சைக் காளி என்பவள் மலையாளத்தில் இருந்து புறப்பட்டு வந்த காளியாக நம்பப்படுகிறாள். பச்சைக்காளி பவளக்காளியைக் குலசேகரப் பட்டினத்தில் நடக்கும் முத்தாரம்மன் கோவிலின் தசரா பண்டிகையின் போது பக்தர்கள் ஆட்டும் ஆட்டத்தில் காணலாம். இவ் ஆட்டம் ஒரு கலைத் தொன்மம் ஆகும். மதுரை அருகே மடப்புரத்தில் இருக்கும் பச்சைக்காளி மலையாளத்தில் இருந்து தென் தமிழ் நாட்டுக்குள் புகுந்து பின்பு மதுரை மீனாட்சியால் தமது எல்லைப் பகுதிக்குள் நுழையக் கூடாது என்று தடுக்கப்பட்டவள்.

தோற்றுப்போன காளி

சிவனுடன் போட்டியிட்ட காளி தோற்றுப்போனதாக புராணங்களில் கதைகள்

உண்டு. தோல்விக்கான காரணம் ஆட்டம் சார்ந்ததல்ல; ஆணாதிக்கம் சார்ந்தது. காளி காலைத்தூக்கிக் காதில் குண்டலத்தைக் கழட்ட இயலாததால் அவள் தோற்றுப் போனாள். ஒரு ஆணால் காலைத் தூக்க முடியும்; தவறில்லை. ஆனால் ஒரு பெண் தன் காலைத் தலை அளவு உயரத்திற்குத் தூக்கக்கூடாது. காதணியைக் காலால் கழட்ட வேண்டும் என்று போட்டி வைத்துவிட்டுக் காலைத் தூக்கினால் அவள் அடங்காப்பிடாரி என விதி சமைப்பது என்ன விந்தை? அடங்காப் பிடாரியை அடக்கி ஒடுக்க வேண்டும் என்பது சமூகத்தின் எழுதப்படாத விதியாகும்.

பிடாரியும் காளியும்

ஊருக்கு ஒரு பிடாரி; ஏரிக்கு ஒரு ஐயனார் என்று வழக்கில் இருந்த காலம் ஒன்று உண்டு. அப்போது பிடாரி 'துடியான தெய்வம்' என்ற பெயரில் ஊருக்கு ஊர் கோவில் வைத்து வணங்கப்பட்டாள். அவள் நல்லவள். மக்களுக்கு நன்மை செய்பவள் பௌத்த சமயம் பிடாரியைப் போற்றியது. சைவ சமய எழுச்சி ஏற்பட்ட போது பிடாரியும் ஐயனாரும் மறைந்து போயினர். தல புராணங்களின் வருகையும் காளியின் மகத்துவமும் குறைந்து சிவனிடம் தோற்றுப் போனாள் என்ற கதையை விரைந்து பரப்பியது.

சிவனிடம் தோற்றுப்போன மீனாட்சி

காளி மட்டுமல்ல மீனாட்சியின் கதையும் இதே கதை தான். வடக்கே இருந்து வந்த சிவனுக்கு முன்பு போரிடச் சென்ற தென்பாண்டி நாட்டு இளவரசி மீனாட்சி அவனிடம் தோற்றுப் போனதால் அவனுக்கே மாலையிட்டு மனைவி ஆகிப் போனாள். இதுவும் பெண் முதன்மைச் சமுதாயமாக அதுவரை இருந்து வந்த தமிழக சமுதாயம் ஆண் முதன்மைச் சமுதாயமாக மாறிய வரலாற்று நிகழ்வின் முக்கியப் பதிவாகும். மனித குல வரலாற்றில் நடந்த முக்கியத் திருப்புமுனைகளை நம் முன்னோர் புராணங்களாக வடிவமைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

காளி – ஒரு வரலாற்றுப் பதிவு

காளியை அசுரத்தனம் உடையவள் அல்லது கொடூரமானவள் என்று புரிந்து கொள்வதைவிட ஒரு காலகட்டத்திய பெண்மக்கள் ஆதிக்கத்தின் ஓர் அடையாளம் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போலக் காளி மனித குல வரலாற்றின் வேட்டைச் சமுகத்தின் வரலாற்றுப் பதிவாக உலகெங்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறாள். அக் காலகட்டத்தில் வலிமை மிக்க பெண் தலைமையில் ஆண்கள் அவளுக்குப் பணிந்து குழுவாக இணைந்து வாழ்ந்தனர்.

மனித குல வரலாற்றில் வேளாண்மைச் சமுதாயம் உருவான போது ஆண் முதன்மைச் சமுதாயம் உருவெடுத்தது. அவள் பெண், மனைவி ஆனால், அவள் கணவனாகிய ஒருவனுக்கு மட்டுமே குழந்தை பெறும் பொறுப்பு உடையவள் ஆனாள். குழந்தைப்பேறு, குழந்தைப் பராமரிப்பு அவர்களுடைய சகல தேவைகளையும் கவனித்தல் போன்ற பணிகள் அதிகமாகிவிட்ட காரணத்தினால் குடும்பத் தலைவி என்ற பொறுப்பு மட்டுமே பெண்ணுக்குப் போதுமானதாகி விட்டது. வீடு அவளது ராஜ்ஜியமாகவும் குடும்பத்தினர் அவளது பிரஜைகளாகவும் மாறிப்போயினர்.

இப்பெண் பல உறவு முறைகளுக்கு உரியவளாகிவிட்டாள். இவளது வடிவமே தெய்வங்களில் பார்வதி ஆகிறது. பார்வதி தேவி ஒரு சராசரி பெண்ணைப் போலத் தாய், தங்கை, மகள் எனப் பல உறவுகளுக்கிடையே, உறவுச் சிக்கல்களுக்கு இடையே பின்னிக் கிடக்கிறாள். இவள் சாந்த சொரூபியாக தாயன்பு கொண்டவளாக தியாகத்தின் திருவுருவாக வாழவேண்டும் என்ற சமூக நியதிகளுக்கிடையே ஆட்பட்டு இயல்பு மாறிப் போகிறாள்.

காலனின் அம்சமே காளி

காளியை சிவனின் கோபக் கனலான காலனின் பெண் வடிவம் என்கின்றனர். இவள்

காலத்தின் தேவதை, அதாவது மனிதனின் காலக் கணக்கை முடித்து வைப்பவள். அழிவின் கடவுள். வடமொழியில் காலா என்றால் கருப்பு. இவள் கருப்பு நிறத்தவள். காளிக்கு நிகராக ஒரு தெய்வம் கொற்றவை என்ற பெயரில் தமிழகத்தில் வழிபடப்பட்டது. கொல்+தவ்வை என்றால் கொல்லும் மூத்தவள் என்பது பொருள். போருக்குப் போவோர் கொற்றவையை வணங்கிச் செல்வர். கொற்றவைக்கு உயிர்ப்பலி தருவது மரபு.

அமாவாசை - பௌர்ணமி பூஜை

காளிக்கு அமாவாசை இரவில் சிறப்புப் பூஜைகள் நடைபெறும். ஆனி அமாவாசை அன்று பலஹாரிணி பூஜையும் மார்கழி அமாவசை அன்று ரதந்தி பூஜையும்

நடைபெறும். பெண் முதன்மையை உணர்த்தும் வகையில் கருப்பு கிடாய் [ஆண் ஆடு] பலி கொடுக்கப்படும். காளி இரத்த தாகம் உடையவள் அவள் இரத்தம் குடிக்க விரும்புவாள் என்பதும் இப்பூஜையின் முலம் உணர்த்தப்படும். ஆனி அமாவசை அன்று நடந்த பூஜையின் போது தான் ராமகிருஷ்ண பரமஹம்சர் அவர் மனைவி சாரதா தேவியை சோடஷியாக வழிபட்டார்.

தேவிக்குப் பௌர்ணமி இரவில் முழு நிலவொளியில் சிறப்பு வழிபாடுகள் நடக்கும். தேவி ஒளியின் தேவதை. காளி இருட்டின் அம்சம். எனவே இவளுக்கு அமாவாசை இரவில் சிறப்புப் பூஜை நடைபெறும். இரு வழிபாடுகளுக்கும் இடையிலான வித்தியாசங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

காளியைப் புரிந்துகொள்வது எப்படி ?

ஒவ்வொரு தெய்வமும் ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் தோற்று விக்கப்பட்டதாகும். இக்கோட்பாட்டைப் புரிந்துகொண்டால் அதன் உருவாக்கத்தின் பின்னணியையும் புராணக் கதைகளின் சாராம்சத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். காளி என்ற கொலைத் தெய்வம்

அழிவுத் தெய்வம் ஆண்களை வெறுக்கும் தெய்வம் நம் நாட்டில் மட்டுமல்ல மனித சமுதாயம் தோன்றி வளர்ந்த அனைத்து நாடுகளிலும் உண்டு. வட இந்திய மொழிகளும் ஐரோப்பிய மொழிகளும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்ற ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதால் காலி, காளி என்ற பெயர் அங்கு கேலே, காலே, என உயிரொலி இடம் பெயர்தல் [காளி என்பதில் கா என்பதில் உள்ள அகரம் கே என எகரமாக மாறுதல்; அடுத்து ளி என்பதில் உள்ள இகரம் லெ என எகரமாக மாறுதல்] என்ற ஒரு மாற்றத்துடன் காணப்படுகிறது.

மற்ற நாடுகளில் காளி போன்ற ஒலியுடன், தோற்றத்துடன் பண்புடன், ஒரு பெண் தெய்வம் வணங்கப்பட்டதால் இந்து சமயம் தான் மனித வரலாற்றின் முதல் சமயம். உலகெங்கும் இந்துத் தெய்வமான காளியை வணங்குகின்றனர் என்று நாமாக பெருமை பாராட்டக் கூடாது. மற்ற நாடுகளிலும்

கொலைத் தெய்வமாகப் பெண் தெய்வ வழிபாடு இருந்தது. பின்னர் அதுவும் சாந்த தெய்வமாகக் கன்னி மரியாளாக மாற்றப்பட்டது. இந்த மாற்றம் எப்படி நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மற்ற நாடுகளில் காளி கோட்பாடு

இந்தியாவில் பெண் முதன்மைச் சமுதாயத்தின் பிரதிபலிப்பாக வழிபடும் ஆவேசமான பெண் தெய்வ வழிபாடு போலவே ஐரோப்பிய நாடுகளிலும் வழிபட்டனர். காளி என்பது இந்தியாவில் வணங்கப்படும் தெய்வப் பெயர் என்றாலும் இது ஒரு தெய்வம் மட்டுமன்று. இது ஒரு கோட்பாடு. பிறப்புக்கும் இறப்புக்கும் உடைய பெண் தெய்வம் என்ற பொருளில் அஸ்டெக் இனத்தவர் **கொட்லிக்யு** என்ற பெயரில் ஒரு பெண் தெய்வத்தை வழிபட்டனர். அவள் தன் இடுப்பில் பாம்புகளை உடையாக உடுத்தியிருந்தாள். [இந்தியாவில் காளி வெட்டப்பட்ட கைகளை கோர்த்துத் தன் இடுப்பில் ஆடையாக அணிவாள்]. கொட்லிக்யு அருவருப்பானவளாகவும் கருதப்பட்டாள்.

தோற்றத்தில் ஒற்றுமை

ஸ்பெயின் நாட்டில் **கிரடுலபே** என்ற தெய்வம் காளியை நிகர்த்தவளாக இருந்தாள்.

அவள் தலை வெட்டப்பட்டு அங்கிருந்து இரண்டு இரத்த ஊற்று பீச்சி அடிக்கும். அது இரண்டு பாம்புகளின் உருவில் தோன்றும். இவள் இடுப்பில் பாம்பைக் கச்சையாக அணிந்திருப்பாள். மார்பில் மனித இதயங்களைக் கோர்த்து மாலையாக அணிந்திருப்பாள். இவளது கழுத்தணியில் பதக்கமாக மண்டையோடு இருக்கும். [இந்தியாவில் காளி மண்டையோடுகளைக் கோர்த்து மாலையாக அணிவாள்] இவளது தலை மேலே இருக்கும் மோட்சத்தையும் கால் அதற்குக் கீழே இருக்கும் பாதாளத்தையும் குறித்தன.

உருஷ்யப் பழங்குடிகளின் பெண் தெய்வமான ரா என்பவள் கோபக் கனல் தெறிப்பவள் என்பதால் சிவப்பு நிறமாகக் காட்சி தருவாள். அதனால் அவள் பெயர் ரா. அதாவது சிவந்தவள்.

காலனின் மனைவியாக்கப்பட்ட ரியா

ஏஜியர்களின் ஜெகன் மாதா ரியா எனப்படுவாள். இவளும் பிறப்பு இறப்பு இரண்டுக்கும் உரிய அதி தேவதை ஆவாள். சிவனிடம் இருந்து தோன்றிய காலனின் பெண் வடிவம் காளி என்றதைப் போன்று ரியாவுக்குக் காலப்போக்கில் ஒரு கணவர் தெய்வத்தை [a

husband God] மக்கள் அறிமுகம் செய்தனர். அந்த ஆண் கடவுளின் பெயரும் காலன் தான். அவன் பெயர் *kronus/ Chronus.* கிரேக்கத்தில் இருந்து ஆங்கிலத்துக்கு வந்த இச்சொல்லில் இருந்து தான் *[காலம்] Chronology* என்பது தோன்றியது..

ஆண்களை அழிக்கும் காளி

காளியின் உருவத்தைப் பார்த்தால் அவள் சிவனின் நெஞ்சின் மீது தன் காலை ஊன்றி நிற்பது போலிருக்கும். இன்னும் சில படங்கள் / ஓவியங்கள் உண்டு. அவற்றில் காளி சிவனின் லிங்கத்தின் மீதமர்ந்து அவனது தலையை வெட்டிக் கையில் வைத்திருப்பாள். தனது ஆதிக்கத்தால் அவனை அழித்து ஒடுக்கி விட்டாள் என்ற கருத்தை விளக்கும் படங்கள் இவை. அழிவின் கடவுள் என்பதிலும் குறிப்பாக ஆணை அழித்தல் என்பதும் காளியின் கருத்தாக்கத்தில் மிக முக்கியமானது. **ரியா க்ரோனியா** ஆரம்பத்தில் இங்கே நாம் படங்களில் காணும் காளியைப்போல ஆண்களைக் 'காயடித்துக்' [ஆணுறுப்பை அறுத்து] கொன்றாள். அவள் கையில் வைத்திருந்த *scythe* என்ற அரிவாளால் வானத்தின் தந்தை கொல்லப்பட்டார் என்று கதைகள் கூறுகின்றன. ஆண் ஆதிக்கத்தின் மீது பெண்களுக்கு வரும் கோபத்தை உளவியலார் *penis envy* என்பர்.

பல புராணக் கதைகளில் சொல்லப்பட்ட மையக் கருத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான யார் பெரியவர் என்ற போராட்டம் ஆகும். காளிக்குச் சிவனைக் கொல்ல வேண்டும்; சிவனுக்குக் காளியின் அகங்காரத்தை அழிக்க வேண்டும். பெண் முதன்மைச் சமுதாயம் முடிந்து ஆண் முதன்மைச் சமுதாயம் தோன்றிய போது ஏற்பட்ட கால மாற்றத்தின் *[transition period]* போராட்டப் பதிவுகள் ஆகும்.

செல்டிக் பழங்குடியினர் தங்கள் பிள்ளைகளைக் கொன்று தின்னும் பெண் தெய்வத்தை **ரியானோன்** என்று அழைத்தனர். இந்த ரியாவும் வானத்தின் தந்தை யுரேனசை காயடித்துக் கொன்றாள்.

அயர்லாந்தில் கேலெயாக்

கேலெயாக் என்ற பெயரில் ஓர் அழிவுக் கடவுளைச் செல்டிக் இனத்தவர் வணங்கி வந்தனர். இவள் கருப்பு நிறத்தவள். இவளே படைப்புக் கடவுள் ஆவாள். இவள் கணவன் மறைவுக்குப் பிறகும் வாழ்ந்தவள். இவளது மேலுடையில் இருந்து கற்கள் உதிர்ந்து மலைகள் தோன்றியதாக நம்புகின்றனர். எனவே இவளே உலகத்தைப் படைத்தவள். இங்கு இவளுக்கு ஆடு வெட்டிப் பலி கொடுக்கின்றனர்.

‘**கேலெலாக்**’ என்றால் மூத்த பெண், கன்யாஸ்த்ரி, ஆண் முகம் காணாதவள் என்றும் பொருள் படும். இவளுக்கு ஆண்களைப் பிடிக்காது. இவள் ஆண்களை வெறுப்பவள் என்ற கருத்தாக்கம் இந்தியக் காளி கதையுடன் ஒத்துப் போகின்றது. தன்டகாசூரன் இறைவனிடம் தனக்குப் பதினாறு வயது வரை ஆண் முகம் பார்த்திராத கன்னிப் பெண்னால் மரணம் நேரிடலாம் என்று வரம் பெற்றான். அவனைக் கொல்ல காளி வந்தாள்.

வேறு நாடுகளிலும் கொலைத் தெய்வமாகப் பெண்ணைப் போற்றிய காலத்தில் இருந்து அவளை ஆண் வாடை அறியாதவளாக ஆணை வெறுப்பவளாகவே உருவகித்துள்ளனர். இந்நாடுகளில் இடைக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் இவளைக் ‘கருப்பு ராணி’ என்று அழைத்தனர். சொர்க்கத்தில் வசித்த இந்தக் கருப்புராணி ஆண்களைக் கருவுற்பத்திக்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு பின்னர் அவர்களைக் கொன்று விடுவாள் என்ற தகவல்கள் உள்ளன.

‘கேலெ’ தந்த கேலண்டர்

அயர்லாந்தில் பெண் பூசாரிகளைக் ‘**கேல்லஸ்**’ என்பர். அதாவது ‘கேலெ’ என்ற தெய்வத்துக்குப் பிறந்தவர்கள். இப்பெண்கள்.

கேலே என்ற சொல்லில் இருந்து சக்சன் [saxon] மொழி பேசுவோர் **கேலேண்டர்** என்ற சொல்லைக் கொண்டு வந்தனர். சந்திரனை அடிப்படையாகக் கொண்டு நாட்காட்டி தயாரிக்கும் மதி வழி மாதக் கணக்கு முறை இவர்களிடமும் இருந்தது. இவர்கள் அந்த நாட்காட்டியை 'லூனார் கேலேண்டர்' என அழைத்தனர். இந் நாட்காட்டி வசந்த காலத்தில் இருந்து மார்ச் 14 முதற்கொண்டு தொடங்கும். இதே முறை இன்று வரை இந்தியப் பஞ்சாங்கங்களில் பின்பற்றப்படுகிறது. வருடப்பிறப்பு சித்திரை மாதத்தில் இருந்து தொடங்கும். பௌர்ணமி வரும் நட்சத்திரத்தின் அடிப்படையில் பன்னிரெண்டு மாதங்களுக்கு பெயரிடப்பட்டது. மதி [சந்திரன்] பெயரில் கணக்கிடப்பட்டதால் மாதம் என்றாயிற்று.. ஒரு முழு நிலா நாளில் இருந்து மறு முழு நிலா நாள் வரும் வரை இருபத்தெட்டு நாட்கள் ஆகும் அதுவே ஒரு மாதம் எனப்பட்டது. 28 நாட்கள் கொண்டது ஒரு மாதம் என்றால் ஒரு குழந்தை பெறப் பத்து மாதம் ஆகும் [280 நாட்கள்] .

ஸ்காட்லாந்து ஸ்காட்டியாவின் நிலம்

'கேலெ'' என்ற தெய்வத்தை 'ஸ்காட்டியா' என்பர். ஸ்காட்டியாவின் குடிமக்கள் வாழ்ந்த நிலம் ஸ்காட்லாந்து எனப்பட்டது. செல்டியப் பழங்குடியினர் இத்தெய்வத்தை '**ஸ்காத்தா**'

[scatha] என்றும் **ஸ்கித்** *[scyth]* என்றும் அழைத்தனர். ஸ்கேண்டிநேவியாவைச் சேர்ந்தவர்கள் ஸ்கதி *[scathe]* என்று இப்பெண் தெய்வத்தை அழைக்கின்றனர்.

தாய்த்தெய்வமும் கன்னி மரியாளும்

பெண் முதன்மைச் சமுதாயதைச் சேர்ந்த இத்தெய்வத்தைத் தமது தாய்த் தெய்வமாகப் போற்றும் மரபு பல நாடுகளிலும் காணப்படுகிறது. பாரசீக நாட்டில் வாழும் நாடோடிகள் [ஜிப்சிகள்] கேலண்டிரிஸ் என்ற பெயரில் தங்களைக் கேலெயின் பிள்ளைகள் என்றே அழைக்கின்றனர். இந்த ஜிப்சிகளின் பெயரும் 'கல் தர' அல்லது 'கதேராஷ்' என்பதாகும். கருப்புத் தெய்வம் குழந்தை பெறுவதைப் போல் உருவகிப்பதும் இங்கு வழக்கில் உண்டு. இவளை '**துருயிட் குரோட்டோ**' என்பர். குரோட்டோ என்றால் கருவறை என்று பொருள்.

ஆண் வாடை அறியாத கன்னிப்பெண் என்பதால் குழந்தை பெறும் இக்கன்னிப் பெண்ணை ஜிப்சிகள் '**சாரா கேலெ**' என்கின்றனர். சாரா கேலெ என்றால் கேலெ ராணி என்பது பொருள். இவளே இவர்களின் தாய், ஆட்சியாளர், ராணி என அனைத்தும் ஆகும். இக் கோட்பாட்டில் இருந்து தோன்றியது தான் கன்னி மரியாளின் வழிபாடு.

ஐரோப்பிய நாடுகளில் பியாற்றிஸ் [BEATRICE] மடோனா [MADONNA], ஆக்னெஸ் [AGNES], சாரா [SARAH] என்று வணங்கப்பட்டு வந்த பல தாய்த் தெய்வங்களின் ஒருமித்த சேர்க்கையே உரோமர்கள் தமது கத்தோலிக்க சமயத்துக்கெனத் தோற்றுவித்த தாய்த்தெய்வம் கன்னி மரியாள். இவர்கள் தாங்கள் வணங்கிய கன்னித் தாயை, அனைத்து ரோமானியரின் இரத்த மூலம் [மூலாதாரம்] ' என்பர்.

கேலிபோர்னியா 'கேலெ'யின் நிலம்

ஸ்பெயின் மொழி பேசியோர் அமெரிக்காவுக்குக் குடி பெயர்ந்த போது

தாங்கள் வணங்கி வந்த **கேலெ** என்ற பெண்தெய்வத்தின் பெயரால் அந்தப் புதிய நிலப் பகுதியை கேலிஃபோர்னியா என்று அழைத்தனர்.

ஃபின்லாந்துப் பகுதியில் இப்பழைய பெண் தெய்வத்தைக் **காளிமா** என்றும் **கல்மா** என்றும் குறிப்பிட்டனர். இவள் இடாகினிப் பேயைப் போல் கல்லறையில் இருக்கும் பிணங்களைத் தோண்டித் தின்பாள். சாரா கேலெ என்றும் இவளை அழைப்பதுண்டு. இவளே எல்லோருக்கும் மேம்பட்டவள்; அதிகாரம் மிக்கவளும் ஆவாள். பிரான்சிலும் சாராவை இராணி என்றே அழைத்து வணங்கும் பழக்கம் உண்டு.

பிள்ளை தின்னும் காளி

காளி தன் காதுகளில் தான் கொன்றழித்த குழந்தைகளைக் குண்டலங்களாகத் தொங்க விட்டிருப்பாள். தனது இனத்தைத் தானே அழிக்கும் கால தேவதை என்ற பொருளில் ரியாவையும் வணங்குகின்றனர். கோபம் வந்தால் நோய், வெள்ளம், நிலநடுக்கம் போன்றவற்றை ஏற்படுத்திக் காளி தனது இனத்தைத் தானே அழித்துவிடுவாள் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கிறது. மக்கள் ஆயுட்காலத்தின் கணக்கை முடித்து வைக்கும் கால தேவதை இவள் என்ற

கருத்தியல் உலகெங்கும் இருப்பதை அறிய முடிகிறது. ஆங்கிலத்தில் இவளை *Cannibal mother* என்றும் *Goddess of Time* என்றும் அழைக்கின்றனர்.

தென் தமிழகக் கிராமங்களில் பிள்ளை தின்னி இராக்கச்சி என்ற பெண் தெய்வம் உண்டு. இத்தெய்வத்தைக் கைகளில் பிள்ளைகளைத் தொங்க விட்டிருப்பதாகவும் மடியில் ஒரு பிள்ளையை மல்லாக்கப் போட்டிருப்பதாகவும் வடிவப்படுத்துவர். இராட்சசி என்ற பெயரின் திரிபு இராக்கச்சி என்பதாகும்.

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோவில் மலையில் உள்ள சுனையின் தெய்வம் தீர்த்தக்கரை ராக்கு எனப்படும் இத்தெய்வத்தை வணங்குவோர் தம் பெண் குழந்தைகளுக்கு ராக்காயி, ராக்கம்மாள், ராக்கு எனப் பெயரிடுவர். இராக்கச்சி என்ற பெயரின் குறு வடிவமே ராக்கு.

பெண்ணின் ஆளுமைத் திறன் மிகுந்த காளி என்ற வடிவம் வரலாற்றால் மறக்கடிக்கப் படவில்லை. அந்தப் பதிவு சிவ புராணத்தின் மூலமாகத் தோல்வியுற்ற பெண்ணாகக் காட்டப்பட்டாலும் சிறுவாச்சூர் மதுரகாளி, பச்சைகாளி, பவளக் காளி, பத்ரகாளி என இன்னும் வழிபடு தெய்வங்களாகவே இருக்கின்றனர்.

அத்திவரதர் 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியே எடுக்கப்பட்டு 47 நாட்கள் பூசைகள் நடைபெறும். இவ் வரதராஜப்பெருமாளுடன் போட்டியிட்டுத் தோற்ற கருங்காளியின் கோவில் பெருமாள் கோவிலுக்கு சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

ஆணாதிக்கம் சமயத்தில் புகுந்து செல்வாக்குப் பெறறு காளியின் ஆற்றலை விமர்சித்து அவளுக்கு எதிரான புராணக் கதைகளை புகுத்திய பிறகும் அவளை இன்னும் ஆசிய நாடுகளில் வணங்குகின்றனர்.

அழகர் கோவில்

3. தாந்திரிக வழிபாடும் புராணங்களில் காளியும்

தாந்திரீகம் என்பது பெண் தெய்வ வழிபாட்டை குறிக்கும் தத்துவம் ஆகும். காளி கருமையானவள். தலை முடியை விரித்தபடி இருப்பாள். சிங்கப்பல் இருக்கும் நாக்கைத் தொங்க விட்டிருப்பாள். ரத்தம் குடிப்பாள். நிர்வாணமாகத் தோன்றுவாள். உடலில் இறந்தவர்களின் தலையோடுகளையும் கைகளையும் கோர்த்துக் கட்டியிருப்பாள். நாகங்கள் இவள் உடலில் நெளியும். நான்கு, எட்டு, பதினாறு கைகளுடன் தோன்றுவாள். காலுக்கு அடியில் சிவனைக் கிடத்தி அவன் நெஞ்சில் மிதித்தபடிக் காட்சி அளிப்பாள்.

புராணத்தின்படி காளி தண்டகாசுரனைக் கொல்வதற்காக சிவனின் கட்டளையை ஏற்று பூமியில் தோன்றியவள். சும்பன் மற்றும் விசும்பனை அழித்தவள். சண்டன் மற்றும் முண்டனை அழித்ததால் சாமுண்டி

எனப்பட்டாள். காளிக்கு தூமாவதி என்ற பெயரும் உண்டு. தூமாவதி என்றால் புகை வடிவமானவள். அதாவது கருமை நிறம் உடையவள் பார்வதியின் கறுப்புத் தோலை கௌசிகா என்றும் அதனை உரித்த பின்பு அவள் வெள்ளை நிறமாகத் தோற்றமளிப்பதை கௌரி என்றும் குறிப்பிடுகின்றனர். இதற்கு பின் வந்த கதைகளில் காளி சிவனுடன் நடனமாடித் தோற்றுப் போனாள்.

காளியைக் கும்பிடலாமா?

காளியைக் குடும்பத்தில் இருக்கும் பெண்கள் வணங்கினால் அடங்காப் பிடாரியாகி விடுவர் அதனால் அவளை வீட்டில் வைத்து வணங்கக் கூடாது. வீட்டில் சிவன் பார்வதி சேர்ந்திருக்கும் படத்தை வைத்துப் பெண்கள் பூஜிக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி ஆகும். காளியை ஆண்கள் வணங்கினால் அவர்களுக்குக் குடும்பம் அமையாது. முறையாக அவளுக்குப் பூஜை செய்யாவிட்டால் பைத்தியம் பிடிக்கும்; கால் கையை முடக்கிவிடுவாள் என்ற நம்பிக்கையும் பரவி இருப்பதால் பெரும்பாலும் காளிக்குப் பதிலாக சிவ துர்க்கை அல்லது விஷ்ணு துர்க்கையை அதிகமானோர் வணங்குகின்றனர். மந்திரவாதிகள், தாந்திரிகர்கள் மட்டும் காளி வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர்.

நடுநிசிப் பூஜை

காளிக்கு அமாவாசை இரவில் பூஜை செய்வர். அதற்கு சியாமா பூஜை என்று பெயர். சியாமா என்றால் இருள் அல்லது கருமை. சிவனின் கண்ணிலிருந்து தோன்றிய காலனின் மனைவி காளி என்று ஒரு கருத்தும்

புராணத்தில் காணப்படுகிறது. காலன் என்றால் அவன் காலத்தின் கடவுள். காளியும் காலத்தின் அதிதேவதையாகக் கருதப் படுகிறாள். அவள் கருப்பு என்பதால் காளி [காலி] எனப்படுகிறாள் [சமஸ்கிருதத்தில் காலா என்றால் கருப்பு]

சவ சாதனை

தாந்திரிகர் அமாவாசை இரவில் சுடுகாட்டில் சவத்தின் (பிணத்தின்) மீதமர்ந்து செய்யும் பூஜை சவ சாதனை எனப்படும். காளிக்கு இரவில் மயான பூஜை நடப்பதும் உண்டு. இதனை மகா நிசி பூஜை என்பர். இவள் அழிவின் கடவுள் என்பதால் இவளது பூஜைகளும் அழிவுடன் தொடர்புடையதாகவே இருக்கின்றன.

காளி வழிபாடு

பெண் முதன்மைச் சமுதாயப் பழக்க வழக்கங்களை இன்றும் நடைமுறையில் பின்பற்றி வரும் வங்காளிகள் தினமும் காளியை வணங்குகின்றனர். வட மாநிலங்களில், பிற மாநிலங்களில் தீபாவளி இரவன்று லக்ஷ்மி பூஜை நடைபெறும். ஆனால் வங்காளத்தில் மட்டும் அன்றிரவு காளி பூஜை நடக்கும். மேற்கு வங்காளம் தவிர பௌத்த சமயம் செல்வாக்குடன் திகழ்ந்த ஒரிசா, திரிபுரா, பிகார் மற்றும் நேபாளத்தில் மைதிலி

மொழி பேசும் மிதிலா என்ற பகுதியிலும் காளியை தினமும் வணங்குகின்றனர். மலையாள நாட்டில் பகவதி என்ற பெயரில் சாந்த ரூபினியாக வழிபடுகின்றனர்.

பௌத்தமும் காளியும்

வங்காளத்திலும் மலையாளத்திலும் காளி பூஜை நடைபெறுவதற்கான காரணங்களில் மிக முக்கியமானது இவ்விரு மாநிலங்களும் பெண் முதன்மைச் சமுதாயமாக இருந்து வந்தவை ஆகும். இவ்விரண்டு மாநிலங்களிலும் இன்றும் பெண்கள் பலவகையிலும் மேலாதிக்கம்

பெற்றவர்களாக அதிகாரம் படைத்தவர்களாக விளங்குகின்றனர் மேலும் இவ்விரு மாநிலங்களிலும் பௌத்த சமயம் நல்ல செல்வாக்குடன் திகழ்ந்தது. பௌத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டை ஆதரித்தது. காளியை பிரஜ்னாபரமிதா என்ற பெயரில் புத்தரின் மனைவியாகக் கொண்டனர். இவளே தாரா தேவியாகவும் கருதப்பட்டாள். இவளை ஞானத்தின் இருப்பிடமாகக் கொண்டு பௌத்தர்கள் வழிபட்டனர்.

காளி பௌத்த சமயத்தில் துன்பத்தில் இருந்து மக்களைக் காக்கும் அனாத ரட்சகியாகப் போற்றப்பட்டாள். அன்பாக இருப்பவளை தாரா தேவி என்றும் கோபமாக இருக்கும் காளியை உக்ர தாரா என்றும் பௌத்தர்கள் அழைத்தனர். இவளை நான்கு கரம் கொண்டவளாகச் சித்திரித்தனர். காளியைக் காதி அல்லது ககராதி என அழைத்தனர். ககராதி என்றால் க ச ட த ப என்ற வரிசையில் வரும் அனைத்து மெய்யெழுத்துக்களும் [21 அட்சரம்] அவளே ஆவாள். பௌத்தம் பரவியிருந்த பிஹார், ஒரிசா, நேபாளம் போன்ற இடங்களில் காளி வணக்கம் சிறப்பாக இருந்து வருகிறது.

காளியைப் போர்க் கடவுளாக வழிபடும் வழக்கம் மன்னர் ஹர்ஷ வர்தன் காலத்தில் தோன்றியது.

காளி வகைகள்

ரக்ஷா காளி அனைவரையும் இரட்சிக்கும் காளி ஆவாள். ஸ்மாஷா காளி அனைவரையும் அழிக்கும் காளி ஆவாள். இவள் சுடுகாட்டில் ஊளையிடும் நரிகளோடு பெண் பிசாசுகளோடு போய் அங்கு சவ சாதனத்தில் இருப்போருக்கு அச்சமூட்டுவாள். இரத்தம் குடிக்கும் உக்ர சண்டி, பீமா சண்டிகளும் உக்கிர தெய்வங்களே ஆவர். ஷியாமா காளியை வீட்டில் வைத்து சிலர் வழிபடுகின்றனர். அவள் அச்சம் போக்கி அருள் வழங்குவாள். சித்த காளி என்பவளைத் தாந்திரிகர்கள் தங்கள் சாதனத்தின் [வழிபாட்டு வைராக்கியத்தில்] மூலமாக சித்தி பெற்று வணங்குகின்றனர்.

காளிக்குத் தூமாவதி, ராத்திரி, அதிதி மகாகாளி, காலராத்ரி, பத்ரகாளி என்றும் பல பெயர்கல் உள்ளன.

மகாகாளி

இவள் இருபது கைகளைக் கொண்டவள். பத்து முகங்களும் முகத்துக்கு மூன்று கண்களுமாக முப்பது கண்களைக் கொண்டவள். கருப்பான மினுமினுப்புத் தோல் உடையவள். இவள் மது மற்றும் கைடபர் என்ற அரக்கர்களை அழித்தாள்.

காலராத்ரி

இவள் கொடூர முகமும் பழுப்பு நிறக் கண்களும் கொண்டவள். எதிரியைக் கொன்று இரத்தத்தைக் குடிப்பாள். புலித்தோல் அல்லது யானைத் தோலை உடுத்தியிருப்பாள். ஒரு கையில் தலையை வெட்ட கோடரியும் மறு கையில் இரத்தம் பிடித்துக் குடிக்க மண்டை ஓட்டையும் கிண்ணமாகக் கொண்டிருப்பாள்.

பத்ரகாளி

பத்ரகாளியை விருதுநகர், சிவகாசி மாவட்டங்களில் முக்கியத் தெய்வமாகக் கொண்டு நாடார் சமூகத்தினர் வணங்கி வருகின்றனர். இவர்களே அதிக எண்ணிக்கையில் மதுரைக்கு அருகில் உள்ள மடப்பரம் காளி கோவிலுக்கும் வருகின்றனர். இவர்கள் பத்ரகாளி, காளீசுவரி, காளியப்பன், காளியம்மாள் என்று தம் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுகின்றனர். காளியம்மன் நாடார் சமூக மக்களைக் காப்பற்றியதாகக் கர்ண பரம்பரைக் கதைகளும் இப்பகுதிகளில் நாடார் சமூகத்தினரிடையே வழங்குகின்றன. தமிழகத்தில் குல தெய்வமாகக் காளியம்மனை அல்லது பத்ரகாளியை வணங்குவோர் நாடார் சமூகத்தவர் மட்டுமே எனலாம்.

மடப்புரம் காளி அம்மன்

தாந்திரிகம்

தாந்திரீகர் என்போர் பெண் தெய்வ வழிபாடுகளைச் செய்பவர் ஆவர். சைவர், வைணவர் போலத் தாந்திரீகர் ஒரு வகைப் பிரிவினர் ஆவர். ஆனால் இவர்கள் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே உள்ளனர். புராணக்

கதைகளின் படி பத்ரகாளி மும்முடி தரித்தவள்; தலையில் விரிசடையும் பிறை நிலவும் அணிந்திருப்பாள். கழுத்தில் நாகங்கள் நெளியும். செவ்வாடை உடுத்தி மகிழ்ச்சியான மனநிலையில் தோன்றுவாள். இவள் உலகெங்கும் நிறைந்திருப்பதாகத் தாந்திரீகர் நம்புகின்றனர்.

தக்கிகள்

தாந்திரீக மரபு எனப்படும் காளி வழிபாடு பதினான்காம் நுற்றாண்டில் இருந்து பத்தொன்பதாம் நுற்றாண்டு வரை வழக்கத்தில் இருந்து வந்தது. சுமார் ஐந்து இலட்சம் முதல் இருபது இலட்சம் வரை காளி வழிபாடு செய்யும் தாந்திரீகர்கள் இருந்தனர். பிரிட்டிஷார் காலத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் கலந்த தக்கிகள் எனப்பட்ட ஒரு பிரிவினர் தீவிரமாகக் காளியை வழிபட்டனர்.

பிற்காலத்தில் தக்கி என்றால் ஏமாற்றுக் காரர்; கொள்ளையடிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள். கொலை செய்யவும் அஞ்ச மாட்டார்கள். என்ற கருத்து பரவியது. தக்கிகள் தங்களைக் காளியின் வியர்வையில் இருந்து பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டனர். அழிவுக் கடவுளான தாயின் கடமையை நிறைவேற்றுவது தமது கடமை என

நம்பியதால் இவர்கள் காளிக்கு எதிரானோரைக் கொன்று போட்டனர்.

'நான் கடவுள்' படத்தில் குருட்டுப் பிச்சைக்காரியாக இருக்கும் பூஜா அகோரியான ஆர்யாவிடம் தனக்கு விடுதலை அளிக்கும்படி கெஞ்சுவார். உடனே அகோரி அவளது கழுத்தை அறுத்து அவளுக்கு இப் பூவுலக வாழ்வில் இருந்து விடுதலை அளிப்பார். இவ்வாறு செய்வதைத் தமது கடமை என அகோரிகள் கருதினர். அது போலத் தக்கிகளும் ஆத்மவிடுதலை அளிக்க கொலை செய்தனர். பிரிட்டிஷார் காலத்தில் பெனெடிக்ட் பிரபு இவர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கினார். பிறகு இவர்கள் இந்தியாவில் தலையெடுக்கவில்லை.

காளியின் தோற்றத்தில் அவளது வலது கை தட்சின மார்க்கத்தையும் இடது கை வாமன மார்க்கத்தையும் குறிக்கிறது. தட்சின மார்க்கம் என்பது வலது கைப் பாதை. அது ஆன்மீகம் மற்றும் வழிபாடு சார்ந்தது. வாமன மார்க்கம் என்பது இடது கைப் பாதை. அது கொலை மற்றும் அகோரி மார்க்கம் ஆகும்.

காளி கதைகள்

சிவனிடம் இருந்து தோன்றிய காலனின் அம்சமான காளியைச் சிவனே நடனப்

போட்டியில் தோற்கடித்து மணந்துகொண்ட புராணக் கதையில் ஒரு முரண்பாடு அமைந்துள்ளது. சிவனிடமிருந்து பிறந்த காளி சிவனையே மணந்துகொண்டாள் என்பது நம் முன்பு தோன்றும் பண்பாட்டுச் சிக்கல். இதைப்போலவே பிரம்மனே அனைத்து உயிர்களையும் படைத்தவன் என்பதால் அவனே சரஸ்வதியையும் படைத்தான். பின்பு அவனே சரஸ்வதியையும் மணந்து கொண்டான். இதுவும் தகப்பன் மகளை மணந்து கொண்ட கதையாகத் தோன்றுகிறது. இவை ஃபிராய்டின் உளவியல் சிக்கல் கருத்தியலுக்கு காட்டாக விளங்குகின்றன.

கொலைத் தெய்வமாக விளங்கி வந்த காளியைப் பற்றி இன்னொரு கதையும் உண்டு. சிவனும் அவன் மனைவியுமான பார்வதிக்கு இடையில் சண்டை மூண்ட போது சிவன் சக்தியை 'நீ காளியாகப் போ' என்று சபிக்கிறார். ஆக சிவனின் கோபத்தால் சக்தி காளியானாள் என்றும் ஒரு கதை உலவுகிறது.

சாக்தம் எனப்படும் சக்தி வழிபாடு தமிழகத்தில் மெல்ல மறைந்து சைவமும் வைணவமும் தோன்றிய போது சக்திக்கு எடுக்கப்பட்டிருந்த கோவில்களுக்கு அருகில் மிகப்பெரிய சைவ, வைணவக் கோவில்கள் எழுப்பப்பட்டன. அப்போது பெண்

தெய்வத்துக்கு எழுப்பட்ட கோவில்களைத் தோற்றுப்போன காளியின் கோவில்களாக மாற்றினர். புத்தர்களின் பெண் தெய்வக் கோவில்கள் அம்மன் கோவில்களாக மாற்றப்பட்டன. உக்கிரமான காளி உருவத்தைச் சாந்தமான வடிவத்தில் செதுக்கி வழிபாட்டுக்குரியதாக்கினர். இவ்வாறு மாற்றப்பட்ட ஒரு காளி தில்லைக்காளி எனப்படும் பிரம்ம சாமுண்டீஸ்வரி ஆகும்.

மாறியது உருவம் மாற்றியவர் யாரோ

தில்லைக் காளி கோவில் கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவ மன்னனால் கி.பி.1200 இல் கட்டப்பட்டதாகும். பொதுவாகப் பெண் தெய்வக் கோவில்கள் வடக்கு நோக்கி இருப்பது மரபு. இக்கோவிலும் வடக்கு நோக்கி அமைந்திருந்தது. இதற்குத் தென்பகுதியில் சிதம்பரம் கோவில் உள்ளது. தோற்றுப்போன காளியைச் சாந்தசொரூபியாக மாற்றி நிஷ்டை கோலத்தில் இருப்பவளாக நான்கு கரங்கள் கொண்டவளாக மாற்றி அமைத்தனர். உண்மையில் காளி நான்கு முகங்கள் கொண்டவள். நான்கு திசைகளிலும் அவளது ஆதிக்கம் பரவியிருந்ததைக் குறிக்கும் வகையில் அவள் அதிகாரம் படைத்தவளாக ஆரம்பத்தில் உருவகிக்கப்பட்டிருந்தாள்.

பௌத்த சமயத்தின் வீழ்ச்சியும் சைவ எழுச்சியும்

தில்லைக் காளி கோவிலைக் கட்டியவன் பல்லவன் மன்னன். பல்லவர்கள் சமண பௌத்த மதங்களைத் தமிழகத்தில் அறிமுகம் செய்தனர். பௌத்த சமயத்தில் நான்முகன் எனப்படும் பிரம்மா முதன்மைத் தெய்வம் ஆவார். பௌத்த சமயத்தில் பிரம்மாவும் இந்திரனும் சரஸ்வதியும் முக்கியத் தெய்வங்களாவர். சைவ சமய எழுச்சி ஏற்பட்ட போது பிரம்மன் மற்றும் இந்திரனின் முக்கியத்துவம் புராணக் கதைகள் மூலமாகத் திட்டமிட்டு அழிக்கப்பட்டது.

சைவம், வைணவம் என்ற வைதிக மதங்கள் தலையெடுத்தபோது பிரம்மாவின் ஒரு தலையைக் கிள்ளி சிவனின் கையில் மன்டையோடாகக் கொடுத்து விட்டனர். சிவனின் முடி தேடிப் போன பிரம்மா தாழம் பூவை வைத்து பொய் சாட்சி சொல்லியதாக ஒரு கதை உருவாக்கப்பட்டது. பிரம்மன் கோவில் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்போது பிரம்மாவுடன் இருந்த சரஸ்வதியும் முக்கியத்துவத்தை இழந்தாள். பௌத்த தெய்வமான இந்திரன் சபிக்கப்பட்டவனாக எல்லாச் சிவத் தலங்களிலும் சாபம் நீங்குவதற்காக சிவலிங்கத்தை வழிபடுபவனாகப் புதிய தல புராணக் கதைகள் தோன்றின. இத்தல புராணங்கள்

சைவ சமய எழுச்சிக்கு சைவ சமய ஆதிக்கத்திற்கு உறுதுணையாக நின்றன.

அத்தி வரதரும் கருங்காளியும்

காஞ்சிபுரத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியே எடுக்கப்பட்டு ஆராதிக்கப்பட்டு வந்த அத்திவரதர் கதையிலும்

பிரம்மனும் காளியும் உண்டு. பிரம்மன் அஸ்வமேத யாகம் நடத்தியபோது சரஸ்வதி தன்னை அழைக்காமல் யாகம் நடத்தும் பிரம்மாவின் யாகத்தைக் கெடுக்க வேண்டும் என்பதற்காக பெண்களில் அதிக வலிமை பெற்ற சக்தியான காளியைக் கருங்காளியாக அனுப்பி வைக்கிறாள். எட்டு கரங்களுடன் தோன்றிய கருங்காளியுடன் திருமால் போர் புரிந்து அவளை வெல்கிறார். காளிக்குரிய சன்னதி வரதராஜ பெருமாள் கோவிலுக்குச் சற்று தொலைவில் இன்றும் காணப்படுகிறது.

பஞ்ச மகரங்கள்

தாந்திரிக மரபில் சக்தி சாதனத்தில் மச்சம், மது, மாமிசம், மைதுனம், முத்திரை என்ற ஐந்தும் பஞ்ச மகரங்கள் என்ற பெயரில் பின்பற்றப்படுகின்றன. அகோரிகளைப் போல பெண்களில் யோகினிகள் சக்தி சாதனம் செய்பவர்களாக இருக்கின்றனர். யோகினி செய்யும் யோகம் தாந்திரீகத்தில் சிவசக்தி ஐக்கியத்தில் அல்லது ஆண் பெண் கலவியில் உணர்ச்சிக்கு இடம் அளிக்காமல் ஆன்மீக பலத்துக்கு மட்டுமே இடம் அளிக்கும் உன்னத தியான நிலையைக் குறிக்கின்றது. இத் தியான நிலை சிவனின் மீது அல்லது லிங்கத்தின் மீது பெண்ணானவள் அமர்ந்து செய்யும் தியானம் ஆகும். சிவனின் ஆணவத்தைக் குலைத்த

காளியின் ரூபமாக வரையப்பட்டிருக்கும் ஓவியத்தைப் போன்று யோகினி தோன்றுவாள்.

காளியும் மாரியும்

தமிழகத்தில் காளியை அக்காள் என்றும் மாரியை தங்கை என்றும் பல நாட்டுப்புறக் கதைகள் வழங்குகின்றன. ஈரோட்டுப் பகுதியிலும் நெல்லைப் பகுதியிலும் இக்கதைகள் பிரபலம். அக்காவுக்குப் பிள்ளையில்லை அவள் தன் தங்கையின் பிள்ளைகளைத் தனது பிள்ளைகளாகக் கருதினாள். ஆனால் தங்கையோ தனது அக்கா தன் குழந்தைகளைக் கொஞ்சுவதைக் கண்டு பொறாமைப்பட்டாள். அதனால் தனது அக்கா

வந்து கேட்கும்போது பிள்ளைகள் வெளியே விளையாடப் போய்விட்டன என்று பொய் சொ சொன்னாள். ஆனால் வீட்டுக்குள் அவர்களைக் கூடையில் போட்டு மூடி வைத்தாள். அக்கா மனம் வருந்தியபடி தனது வீட்டுக்குத் திரும்பினாள். கூடையைத் திறந்து பார்த்த தங்கை தம் பிள்ளைகள் ஏழும் செத்துப் போய்க் கிடந்ததைக் கண்டு அழுது அக்காளிடம் ஓடினாள். அக்காள் வந்து அவர்கள் முகத்தில் தண்ணீர் தெளித்துத் தன் சேலை முந்தானையால் துடைக்கவும் பிள்ளைகள் உயிர் பெற்றன. காளியம்மனும், மாரியம்மனும் கதை பிள்ளையில்லாத காளி மற்றும் பிள்ளைகள் உடைய பார்வதியைப் போன்றது தான் என்றாலும் கிராமத்துப் போக்குக்கு ஏற்ப சற்று மாற்றப்பட்டு வழங்குகிறது.

காளியும் மாரியும் வேதக் கடவுளர் கிடையாது. இருவரும் மண் சார்ந்த தெய்வங்கள் ஆவர். இருவருக்கும் கணவர் இல்லை. [மாரியம்மனாக மாற்றம் பெற்ற சீதள தேவி மற்றும் ரேணுகா தேவிக்கு கணவர் இருந்ததாகக் கதை உண்டு. ஆனால் மாரியம்மன் ஆன பிறகு அந்தக் கணவர் அவள் கூட இல்லை]. இருவரும் அடக்கப்பட முடியாத ஆற்றலுக்குச் சொந்தக்காரர்கள். நோய், வெள்ளம், பூகம்பம் என அழிவை

ஏற்படுத்தித் தமது மக்களைக் கொல்லவும் தயங்காதவர்கள். ஆண்களை அல்லது ஆண் விலங்குகளைப் பலியாகப் பெறுவார்கள்.

காளிக்கும் மாரிக்கும் சாமியாடிகளாகப் பெண்களே இருப்பர். ஆண்கள் இருந்தால் மாரடி [மாராப்பு] மாலை அணிய வேண்டும். தென் பகுதிகளில் ஆண்கள் காளியம்மன் வந்து சாமியாடும் போது தமது அடிவயிற்றில் கைகளால் இடித்துக் கொள்வர். ஆண்களை விரும்பாத காளியே ஆணின் உறுப்பைத் தாக்குகிறாள் என்று விளக்கம் சொல்கின்றனர். மாரியம்மன் சாமியாடிகளுக்கு இப் பிரச்னை கிடையாது. மாரியம்மன் பெண்ணுறுப்பின் அடையாளமாக நீர்க் கரகம் கொண்டே வழிபடப்படுகிறாள்.

புராணக் கதைகளில் காளி

தேவி மகாத்மியத்தில் காளி கருப்பானவள் என்ற தகவல் காணப்படுகிறது. இந்நூல் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். அதன் பின்னர் தோன்றிய லிங்க புராணத்தில் தண்டகாசுரனை வதைக்கப் பதினாறு வயதுப் பெண்ணாகக் காளி வருகிறாள். இவள் ஆண் முகம் பாராத கன்னிப் பெண் ஆவாள். வாமன புராணத்தில் சிவனைப் போருக்குத் தூண்டி விடுவதாகக் காளியும் அவனைச் சாந்தப்

படுத்துபவளாகப் பார்வதியும் காட்டப் படுகின்றனர். காளி சிவனைச் சாந்தமாக இருக்கச் சொல்வது கிடையாது. ஆனால் சக்தி சிவனை அமைதிப் படுத்துகிறான்.

மச்ச புராணத்தில் காளி நாட்டின் மத்தியப் பகுதியில் கலஞ்சாரா என்ற இடத்தில் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது. எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நுற்றாண்டு வரையிலான சமஸ்கிருத இலக்கியங்களில் மற்றும் காளிதாசன் படைப்புகளில் காளி இடம் பெற்றுள்ளாள். அது வரை காளி பற்றிய இலக்கியக் குறிப்பு எதுவும் காணப் படவில்லை.முண்டோபகநிஷத்தில் அக்னியின் ஏழு நாவுகளில் காளியும் ஒருத்தி என்ற குறிப்பு மட்டும் காணப்படுகிறது.

பூர்வீகக் குடிகளின் தெய்வம் காளி

மகாபாரதத்தில் அஸ்வத்தாமாவைத் தாக்கிய போது காளி பற்றிய ஒரு வருனனை இடம்பெறுகிறது. காளி சண்ட முசுண்டனைத் தாக்கிய போது கையில் காத்வாங்கா என்ற தடி வைத்திருக்கிறாள். இந்தத் தடியின் உச்சிப் பகுதியில் மண்டையோடு இருக்கும். இது போன்ற தடியை மலை வாழ் மக்களுடன் வாழும் பூசாரிகளும் மந்திரவாதிகளும் வைத்திருப்பார்கள். தாம் வணங்கும்

தெய்வத்தைப் போலவே பூசாரிகளும் தோற்றம் அளிப்பதனால் இத்தடி காளி இந்தியப் பூர்வீகக் குடிகளின் தெய்வம் என்பதைக் காட்டும் ஓர் அடையாளமாகும். இந்தியப் பூர்விகக் குடிகள் என்றால் இந்தியா முழுக்க பரவியிருந்த திராவிடர்களின் தெய்வம் ஆகும்

காளி கோவில்கள்

இந்தியாவில் முக்கியக் காளி கோவில் என்ற வரிசையில் உஜ்ஜயினியில் விக்கிரமாதித்தன் வழிபட்ட காளி கோவில்; அஸ்ஸாமில் காமாக்யா கோவில்; கல்கத்தாவில் உள்ள காளி கோவில் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தமிழ்நாட்டில் தில்லைக் காளி, கருங்காளி, மடப்புரம் காளி ஆகியவை தனி காளி கோவில்களாகும். ஆனால் இவை மூன்றுமே தோற்றுப் போனவை.

கல்கத்தா காளி அம்மன்

வங்காளத்தில் காளி துதிப் பாடல்கள்

பதினேழாம் நூற்றாண்டில் வங்காளத்தில் கருப்பு நிறக் காளியை நீல நிறமாக மாற்றி அழகு சேர்த்து அபய வரத ஹஸ்தங்களோடு புத்துரு கொடுத்தனர். வங்காளக் கவிஞர்கள் அவள் மீது பல போற்றிப் பாடல்களைப் பாடினர். அவற்றை பாடி இன்றும் தினமும் அங்குக் காளி பூஜை செய்கின்றனர்.

காளியும் நவீன தாந்திரிகமும்

இருபது இருபத்தியோராம் நுற்றாண்டுகளில் பெண்ணிலைவாதிகள் காளியைப் பெண்ணின் பெரும்சக்தியாக அதீத ஆற்றல் வடிவாகக் கண்டனர். நவீன தாந்திரிகர்கள் தாந்திரிகம் உணர்த்தும் பாலுறவு உடல் நலத்துக்கு இன்றியமையாதது என்று பிரச்சாரம் செய்கின்றனர். காளி என்ற கோட்பாடு அன்று முதல் இன்று வரை பெண்ணின் அளப்பரிய ஆற்றலாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. காளி ஆக்கவும் செய்வாள்; அழிக்கவும் செய்வாள் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற பழமொழிக்கு உதாரணமாக விளங்குகிறாள். இவள் ஆணின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்படாத சுதந்திரப் போக்குடையவள் என்பதால் இந்த நுற்றாண்டிலும் இவள் முக்கியத்துவம் பெறுகிறாள்.

4. காளி – இடாகினி – டாகினி தென்

காளி கோட்பாடு என்பது பெண்ணை ஆணுக்கு அடங்காதவளாக, ஆணை அடக்கி மிதித்து ஆளும் போர்க்குணம் படைத்தவளாகக் காட்டுகிறது. உலகெங்கும் உள்ள பல நாடுகளில் காளி எனப்பட்ட பெண் தெய்வம் கேலே, காலே என்று பல பெயர்களில் வழிபடப்பட்டாள். இந்தியாவில் கங்கை, யமுனைச் சமவெளிப்பகுதிகள் தவிர மற்ற பகுதிகளில் இமாசலப் பிரதேசம், பஞ்சாப், அஸ்ஸாம், வங்காளம் மற்றும் தென்னிந்தியா முழுக்கக் காளி வழிபாடு காணப்படுகிறது. இவள் இனக்குழுவின் தலைமை தாங்கிப் போர் நடத்திய போர்த்தெய்வமாக இருந்தாள். இதனால் அரசர்கள் போரில் வெற்றி வேண்டி இவளைக் கொற்றவை என்றும் துர்க்கை என்றும் வணங்கி வந்தனர். காளி இறப்புடன் தொடர்புப் படுத்தப்பட்டாள். கோர்த்து அணிந்திருந்தாள்.

சில இடங்களில் ஆணின் அடையாளமான சிவனின் நெஞ்சின் மீது கால் வைத்து மிதித்தபடி சிவந்த நாக்கைத் தொங்கவிட்டுச் சிங்கப்பற்களுடன் கோரமாகக் காட்சி அளிப்பாள். தாந்திரிகத்தில் காளி சிவனின் மீது சம்போக நிலையில் அமர்ந்து அவனது தலையை வெட்டிக் கையில் வைத்திருப்பவளாகவும் சித்திரிக்கப்பட்டாள்.

இந்திய வரலாற்றில் காளி

ஆதி மனிதனின் காலத்தில் தாய்த் தெய்வமாகக் கருதப்பட்ட காளி கிபி மூன்றாம் நூற்றாண்டில் வடநாட்டில் குப்தர் காலத்தில் போர்த் தெய்வமாகப் போற்றப்பட்டாள். போருக்குச் செல்வதற்கு முன்பு இவளுக்கு ரத்தப் பலியிட்டனர். அடுத்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் காளியைத் துர்காவாக்கிப் பார்வதியின் கோப வடிவமாக மாற்றி

சிவன் மீது அமர்ந்திருக்கும் காமாட்சி

அமைத்தனர். தேவி மகாத்மியம் இவளைத் துர்கா என்று அழைத்தது. அடுத்துத் தோன்றிய காதம்பரி, மாலதி மாதவம் ஆகிய நூல்கள் இவளை இரத்த தாகம் எடுத்த சண்டி என்றும் சாமுண்டி என்றும் அழைத்தன. இவளைப் புராணத் தெய்வம் ஆக்கின. நாட்டுப்புற மக்களின் தெய்வமான காளியை மெல்ல மெல்ல புராணங்களில் இடம்பெற வைத்தனர்.

கிபி எட்டாம் நூற்றாண்டில் காளி தாந்திரீக மரபில் இணைக்கப்பட்டு யோகினியாகவும் இடாகினியாகவும் பைரவருடன் சம்போகிக்கும் பெண்ணாக மாற்றப்பட்டாள். அதுவரை காளி தனித் தெய்வமாக இருந்தாள். தாந்திரீகத்துக்குள் கொண்டு வரப்பட்டதும் காளிக்கும் சம்போகம் தவிர்க்க முடியாததாயிற்று. லிங்க புராணத்தில் இவள் சிவனின் உடலுக்குள் புகுந்து தாரகாசுரனைக் கொன்றதாகவும் கதை சொல்லப்பட்டது.

காளி வழிபாடு இறப்புடனும் பேரழிவுடனும் தொடர்புப் படுத்தப்பட்டதனால் அவளுக்கான கோவில்கள் எழுப்புவதில் இந்து சமயத்தில் சில தடைகள் இருந்தன. காளி கோவிலை ஊருக்குள் கட்டக் கூடாது ஊருக்கு வெளியே சுடுகாட்டுக்கு அருகிலும், தாழ்த்தப்பட்டவர்

வாழும் இடங்களுக்கு அருகிலும் கட்டலாம் என்று விதிகள் செய்தனர். வீட்டில் காளி தெய்வத்தின் படத்தை வைத்து வழிபடக் கூடாது. பெண்கள் காளியை வழிபடுதல் கூடாது. காளியைப் பெண்கள் வழிபட்டால் அவர்கள் வீட்டுக்கும் கணவனுக்கும் அடங்காதவர்களாகி விவாகரத்துப் பெற்றுவிடுவர் என்ற கருத்து பரப்பப்பட்டது. காளியை வழிபடும் ஆண்கள் கடும் பிரம்மச்சர்யம் காக்காவிட்டால் கால் கை விளங்காமல் அவதிப்பட நேரிடும் என்றும் கருத்து நிலவியது. இதனாலும் காளி துஷ்ட தேவதையாகக் கருதப்பட்டாள்.

கிபி பதினோராம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கலிங்கத்துப் பரணி காளி பற்றி வருணிக்கிறது. தமருகம் ஒலிக்க அதன் தாளத்துக்கு ஏற்ப சாதகர் என்னும் உதவியாளர் பேயும் யோகினி மாதரும் ஆடிக்கொண்டு வரும் போது தமது வலக்கையில் படைக்கருவிகளையும் இடக்கையில் அப்போது அறுக்கப்பட்ட புதிய தலைகளையும் தூக்கிக் கொண்டு வருகிறார்கள். தாயிடம் குழந்தைப் பேய்கள் இறைச்சி கேட்டு அழுகின்றன. அவற்றின் பசியமர்த்த தாய்ப் பேய் பிணத்தை இழுத்துச் சென்று தின்ற நரிகளின் வாயில் இருந்து பிணத்தின்

தசையைப் பிடுங்கி குழந்தைகளுக்குத் தருகின்றன.

டாகினி

டாகினி அல்லது இடாகினி என்ற பெயர் ஆரம்பத்தில் பவுத்த சமயத்தில் யோக சித்தி பெற்ற பெண்ணுக்குக் கிடைத்த சிறப்புப் பெயராக இருந்தது. யோகினியரில் சிறந்தவள் இடாகினி ஆனாள் இவளும் சுடுகாட்டில் திரிபவள்; அரையாடை உடுத்தியவள்; பிணங்களைத் தோண்டி எடுத்துத் தின்பவள். எரியும் சிதையில் இருந்து பிணத்தின் தசையைப் பிய்த்துத் தின்பாள். காளியின் மெய்க்காப்பாளராக விளங்கிய சாதகர்களுடன் இடாகினியும் இருப்பதாகத் தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டது.

தமிழ் இலக்கியத்தில் இடாகினி

சிலப்பதிகாரத்தில் மாலதி என்பவள் தனது கணவனின் இன்னொரு மனைவியின் குழந்தை அழுததைக் கண்டு தூக்கி எடுத்துப் பால் ஊட்டினாள். அந்தக் குழந்தை மூச்சுத் திணறி இறந்துவிட்டது. மாற்றாளோ இவளை ஏசினாள். 'என் பிள்ளையை உயிருடன் கொண்டு வந்து தா' என்றாள். மாலதி அக்குழந்தையுடன் சுடுகாட்டுக்கு வந்தாள். அங்கு இடாகினிப் பேய் வந்து அவளிடமிருந்து

குழந்தையைப் பறித்துக் கொண்டு போயிற்று. அப்போது பாசண்டச் சாத்தன் எனும் தெய்வம் இடாகினியிடமிருந்து குழந்தையைப் பறித்து அதற்கு உயிருண்டாக்கிக் கொடுத்தது. கனாத் திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய்

பாசண்டச்சாத்தற்கு பாடுகிடந்தா ளுக்கு

‘ஏசும்படி ஓர் இளங்கொடியாய் ஆசிலாய்

செய்தவம் இல்லோருக்குத் தேவர் வரம்கொடார்;

பொய்யுரையே அன்று; பொருள்உரையே கையில்

படுபிணம் தா' என்று பறித்தவள் கைக்கொண்டு

சுடுகாட்டுக் கோட்டத்துத்தூங்கிருளில்சென்றாங்கு

இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி

மடியகத்து இட்டாள் மகவை''

என்ற அடிகளில் இடாகினி என்பவள் ஒரு பிணம் தின்னிப் பேய் என்பது தெளிவாகிறது.

கலிங்கத்துப் பரணியில் போருக்குச் சென்ற கணவன் திரும்பி வராததால் அவனைத் தேடிக்கொண்டு போர்க்களத்துக்கு வந்த அவனது மனைவி இடாகினியிடம் என் கணவனைப் பார்த்தாயா என்று கேட்கிறாள்.

தங்கண வருடன் தாமும் போக வென்றே

சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்

எங்கணவர் கிடந்த இடம் எங்கே என்றறிந்து

இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்

என்ற பாடல் சாதகர் மற்றும் இடாகினி பற்றி குறிப்பிடுகிறது.

இடாகினி பெண்ணா? பெண் பேயா?

டாகினி என்ற யோகினி பவுத்த சமயத்தின் தெய்வம் ஆனாள்.. இவள் அனைத்து யோக சித்தியும் பெற்றவள் என்பதால் வேண்டிய உருவை எடுக்க முடியும். அவள் பெண் உருவில் வந்து தோன்றுவாள்;

அதுவே அவளது இயல்பு. அவளால் வேறு உருவம் எடுத்துச் செயல்படவும் வான் வெளியில் பயணிக்கவும் [sky goer] முடியும், என்று Dakini - Some comments on its Nature and Meaning என்ற கட்டுரையை எழுதிய ஜென் வில்லியம்ஸ் தெரிவிக்கிறார். இடாகினி என்பவள் பெண் தான் என்று ரிச்மான்ட் பல்கலைக்கழகத்தின் சமயத் துறைப் பேராசிரியர் மிராண்டா ஷா உறுதிபடத் தெரிவிக்கிறார்.

இங்கிருந்து பயணப்பட்ட டாகினி

தமிழகத்தில் இருந்து டாகினி என்ற யோகினி போதிசத்வர் மூலமாகச் சீனாவுக்குப் போய் அங்கிருந்து ஜப்பானுக்கு போயிற்று.

ஷிந்தோவும் பௌத்தமும்

ஷிந்தோ சமயம் என்பது ஜப்பானில் பின்பற்றப்பட்டு வந்த பூர்விகச் சமயம் ஆகும். பவுத்தம் அங்கே பரப்பப்பட்ட போது அச்சமயம் அரசர்களின் ஆதரவு பெற்ற சமயம் என்ற தகுதியைப் பெற்றதனால் ஷிந்தோ சமயத்தின் தாய்த்தெய்வ வழிபாடு அல்லது பெண் தெய்வ வழிபாடு [நரி ராணி வழிபாடு] புதிய பவுத்த சமயத்தின் யோகசித்தி பெற்ற டாகினியுடன் இணைக்கப்பட்டது. பவுத்தம் புதிய மண்ணின் சமய மரபுகளைத் தன்னகத்தே ஏற்றுக் கொள்ளும் பண்பைப்

பெற்றிருந்ததனால் பாரம்பரியத் தாய்த் தெய்வத்தை டாகினி என்ற பெயரில் மாற்றிக்கொண்டது. அதன் பிறகு ஷிந்தோ சமயத்தின் தாய்த் தெய்வக் கோவில்கள் டாகினி கோவில்களாயின. ஷிந்தோ சமயத்தின் கோவில்களில் மூன்றில் ஒரு பங்கு கோவில்கள் டாகினி கோவில்களாயின.

ஆகாச சஞ்சாரியான டாகினி

பவுத்தத்தில் டாகினி மனக் கிலேசத்தை மாற்றி ஞான ஒளியைத் தருவாள். எனவே அவள் ஞான ரூபினியாகக் கருதப்பட்டாள். இச் சமயம் அவளை ஆகாச சஞ்சாரியாகக் கருதியது. ஆகாயத்தில் நடனம் ஆடுபவள் *[sky goer/ sky dancer]* என்ற பொருளில் *KAHANDRO* என்ற சொல்லால் திபெத் நாட்டில் வழங்கி வந்த வஜ்ராயன் பவுத்தம் டாகினியை அழைத்தது. யோகப் பயிற்சியில் சிறந்து விளங்கி அதில் உச்சநிலையை அடைந்த பெண் புத்த நிலையை அடைகிறாள் என்பதை வஜ்ராயன பௌத்த பிரிவு மட்டுமே ஏற்றுக்கொண்டது. மகாயான பவுத்த பிரிவு பெண்களைப் புத்தராக ஏற்றுக் கொள்வதில்லை.

திபெத்தின் வஜ்ராயன பௌத்தம்

திபெத்திய பௌத்தம் சக்ர சம்வாராவும் வஜ்ர யோகினியும் இணைந்து கருணை மற்றும்

வஜ்ராயான யோகி

பிரக்ஞையை உணர்த்துவதை ஆண் பெண் இணைப்பாகக் குறியீட்டு முறையில் போற்றியது. இதை மற்றவர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்கள் ஆபாசமாக நோக்கினர். யோக சித்தி பெற்று புத்த நிலை எய்திய திபெத்திய இளவரசி யோகினியாகப் போற்றப்பட்டாள் அவள் பத்ம சம்பவாவை மணமுடித்து இடாகினி என்ற தெய்வநிலை எய்தினாள். இவள் திபெத் நாட்டில் இன்றும் டாகினியாக

வழிபடப்படுகிறாள். இவள் மனம் [காட்சி], மொழி [மந்திரம்], மெய் [முத்திரை], என்ற மூன்றாலும் யோக சித்தி பெற்றவள். வஜ்ராயன பவுத்தத்தின் ஆதிகாலத்து டாகினியான இவளை நரோடாகினி என்றும் அழைத்தனர். நரன் என்றால் மனிதன்; மனித குலத்தில் இருந்து உதித்த டாகினி [நரோடாகினி] என்று இவள் போற்றப்பட்டாள்.

இடாகினிப் பேய்

இடாகினி காளிக்கு ஏவல் செய்பவள் என்று சதுரகராதி [பெயரகராதி] குறிப்பிடுகின்றது. அவளை மாயவள், பஞ்சலி வளவை என்று சதுரகராதி [பொருளகராதி] தெரிவிக்கின்றது.

யாம் யுன் தத்துவத்தில் டாகினி

பாகவத புராணம், பிரம்ம புராணம், மார்க்கண்டேய புராணம், கதா சரித சாகரம் போன்ற நூல்கள் இடாகினி பற்றி தெரிவிக்கின்றன. பௌத்த சமயம் இவளைத் தாந்திரிகத் தெய்வமாகக் குறிப்பிடுகின்றது. இந்து சமயம் இடாகினியைத் துஷ்ட ஆவி என்று குறிப்பிட பௌத்த சமயம் இவளைத் தெய்வமாகவும், விடுதலைச் சக்தியாகவும் போற்றுகின்றது. யாம் யுன் என்ற ஆண் பெண் இணைப்புத் தத்துவத்தில் யுன் எனப்படும்

பெண் டாகினி ஆவாள். இவள் அமைதியானவள் ஆக்ரோஷமானவள் அல்ல.

காளியும் டாகினியும்

தாய்த் தெய்வ வழிபாட்டுக் காலத்தில் ஆக்ரோஷமான பெண் தெய்வமான காளி பைரவரோடு இணைவதாகக் கருதப்பட்டது.

பைரவரும் காளியும் முகமுகமாய் நோக்கியிருக்க காளி பைரவரின் மடியில் அமர்ந்து அவரது இடுப்பைத் தன்னிரு கைகளால் அணைத்தபடி சம்போகத்தில் இருப்பதாக உருவங்கள் அமைக்கப்பட்டன. பிற்காலத்தில் இந்நிலை சம போக நிலையாகவும் உணர்த்தப்பட்டது. ஆண் பெண் ஏற்றத் தாழ்வின்றி அடையும் யோக நிலையின் உச்சம் என்பதும் போதிக்கப்பட்டது. காளி பைரவர் இணைப்பு சக்கர சம்வார வஜ்ரவராகி எனப்பட்டது. பின்னர் காளியின் இடத்தை டாகினி பெற்றாள். பவுத்தம் விடைபெற்றுப் போன பிறகு சைவ சமய எழுச்சி ஏற்பட்ட காலத்தில் இவ்விணைப்பு சிவசக்தி சம்போகம் என்றும் மாற்றம் பெற்றது. காளி கோவில் இருக்கும் இடங்களில் பைரவரும் சேர்ந்து இருப்பதற்கு இதுவே காரணமாகும். ஆனால் பைரவரைக் காளியின் இணைத் தெய்வமாகப் போற்றாமல் காவல் தெய்வமாகக் கருதி இந்து சமயத்தில் வழிபடுகின்றனர்.

இந்து பௌத்த டாகினிகளின் வேறுபாடு

ஆண் பெண் இணைப்பில் இந்து டாகினிக்கும் பவுத்த டாகினிக்கும் இடையில் வேறுபாடு உண்டு. இந்து சமயத்தில் அவள் சர்வ வல்லமை படைத்த சக்தியாக விளங்க, பௌத்தத்தில் அவள் அமைதியானவளாக

விளங்குகிறாள். பௌத்த சமயத்தில் தாயும் தந்தையுமாக [அறிவும் அன்பும்] இணைந்திருக்கும் அனுத்தார யோக தாந்திரிகத்தில் ஆண் கருணை மற்றும் உபாய கவுசல்யத்தின் வடிவமாக விளங்குகிறான். பெண் அறிவு அல்லது பிரக்ஞையின் வடிவாகக் கருதப்படுகிறாள். இந்து சமயத்தில் பெண் சக்தியாகவும், ஆண் சவமாகக் கிடக்கும் சிவனாகவும் மாறுபட்ட கருத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

டாகினி கடவுட் கோட்பாடு

இந்தியாவில் ஆரம்பத்தில் யோகினியாகவும் பின்னர் அறிவைக் குறிக்கும் இணை வடிவான [ஜோடி] பெண்ணாகவும் அதற்குப் பிறகு [சிவ] சக்தியாகவும் இறுதியில் சுடுகாட்டில் திரியும் பிணம் தின்னிப் பேயாகவும் டாகினி கோட்பாடு மாற்றம் பெற்றுள்ளது. ஆனால் ஜப்பானில் டாகினி பெண் தெய்வமாகவே அன்று முதல் இன்று வரை காவல் தெய்வமாக வணங்கப்படுகிறாள் ஜப்பான் நாட்டில் அரசன் முடிசூட்டுவதற்கு முன்பு டாகினி வழிபாடு நடத்தவில்லை என்றால் அவனது அரசுக்கு உடனடியாகப் பேரிழப்பு நேரிடும் என்ற அச்சம் நிலவியது. எனவே ஜப்பான் அரசர்கள் டாகினிக்குப் பூசை போட்ட பிறகு முடிசூட்டினர். நவீன காலத்தில்

திருக்குற்றால மலையில் காணப்படும் அகத்திய முனிவர் (அவலோகதீஸ்வரர் சிலை)

டாகினி வழிபாடு அதோகோ கொண்கேன் [ATOGO GONKEN] என்ற மந்திர உச்சாடனத்துடன் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தர்மபாலர் என்பது பௌத்த சமயத்தில் ஓர் உயர்ந்த தகுதி நிலை ஆகும். மகா காலன் ஓர் தர்மபாலர் ஆவார். இவரை அவலோகதிசுவரர் என்று அழைத்தனர். புத்த நிலை எய்திவர்களை இப்பெயரால் குறிப்பிடுவது பவுத்த மரபு. பொதிகை [போதி இல்] மலையில் வாழ்ந்த அவலோகதீசுவரரை அங்கு வாழ்ந்த மக்கள் பேச்சு வழக்கில் அகத்தீஸ்வரர் என்று அழைத்தனர். இதுவே அங்கு அகத்தியர் வந்து

தங்கியதாகக் கதைகள் புனையவும் ஸ்தல புராணங்கள் எழுதவும் சைவ சமய எழுச்சியின் போது உதவியது.

விழிப்புணர்ச்சியின் வடிவமான டாகினி

தர்மபாலர்களில் முக்கியமானவரான பால் தேன் லாமோ *[pal den lhamo]* என்பவள் ஓர் இடாகினி ஆவாள். இவள் வஜ்ராயன சிம்ம முகி எனப்பட்டாள். பௌத்த சமயத்தில் பெண்ணின் உயர்ந்த நிலையாகப் போற்றப்பட்ட டாகினி ஞான ரூபிணி ஆனாள். பவுத்தம் பரவியிருந்த கேரளாவில் டாகினியை பின்னர் பகவதி எனப் பெயர் மாற்றி அழைத்தனர் *[Keith Dowman net.]*. இன்று பகவதிக்குக் கோவில் இருக்கும் இடங்களிலெல்லாம் ஆதியில் தாய்த் தெய்வ வழிபாடும் பின்னர் டாகினி கோவில்களும் இருந்தன. பெண்ணை டாகினியாகக் கொண்டு வணங்க வேண்டும் என்பது பவுத்த மரபு. ஏனெனில் டாகினி என்பவள் இருமை இல்லாதவள். அவள் அறிவும் விழிப்பும் ஒருசேரப் பெற்றவள், விழிப்புணர்ச்சியின் வடிவமாக டாகினி போற்றப்பட்டாள்.

டாகினியும் கலச பூஜையும்

வஜ்ராயன பௌத்தத்தில் ஆண் தருபவனாகவும், வெளியேற்றுபவனாகவும்

[giver] விளங்க பெண் பெறுபவளாகவும் ஏற்றுக் கொள்பவளாகவும் *[receptor]* கருதப்பட்டாள். பெண் என்பவள் உளவியல், பாலியல், மற்றும் உடலியல் ரீதியாக எதனையும் ஏற்றுக் கொள்பவளாக இருப்பதனால் அனைவரையும் அணைத்துக் கொள்கின்ற பெருந்தன்மையான பண்பைப் பெற்றவள். இவள் அனைத்தையும் ஏற்றுக் கொள்பவள் என்பதனால் கலசம், கரகம், குடம் என்றும் ஏரி மற்றும் குளம் என்றும் யோனி

என்றும் அழைத்தனர். தற்காலத்தில் நடைபெறும் கரக பூஜை, கும்ப பூஜை, கலச பூஜை ஆகியன இத்துடன் ஒப்பு நோக்கற்குரியதே.

டாகினி 'ஓ இனாரி' ஆன வரலாறு

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து டாகினியை ஜப்பான் நாட்டில் வணங்கத் தொடங்கினர். அப்போது அவளை அரை நிர்வாணப் பெண்ணாக யோகினியாகச் சித்தரித்தனர். ஹெலான் அரசின் காலம் முடியும் போது இடாகினியை யோகினி என்ற நிலையில் இருந்து ஷிந்தோ தெய்வமான நரி அரசியுடன் இணைத்துவிட்டனர். இவளுடன் எப்போதும் ஒரு வெள்ளை நிற நரி இருக்கும் என்று தெரிவித்தனர். ஜப்பானிய மொழியில் கித்சுனே என்றால் நரி. ஆதியில் ஜப்பானியர் நரிகளுடன் வசித்தனர். எனவே அவர்களின் மண்ணின் சமயமான ஷிந்தோ சமயத்தில் நரியும் ஒரு பெண் காவல் தெய்வம் ஆயிற்று. இதற்கு ஒன்பது வால்கள் உண்டு எனச் சித்தரித்து இதன் அதீத சக்தியை வெளிப்படுத்தினர். இதனை ஷிந்தோ காமி என்பர். நரியை அரசியாக்கி **ஷிங்கோ போசாத்சு** என்றனர். சொர்க்கத்தில் உள்ள நல்ல நரி அரசியை **கிக்கோ தென்னோ** என்றனர். இந்த

வெள்ளை நரி எப்போதும் டாகினியுடன் இருக்கும். டாகினியின் இருப்பை இந்த நரியின் மூலமாக அறியலாம்.

வெள்ளை நரியின் தரிசனம்

தாயிரோநோ கியோ மோரி என்பவன் ஒரு சாதாரண இனக்குழுத் தலைவன். அவன் ஒரு முறை சாலையில் நடந்து வந்தபோது கித்சுனே என்று ஜப்பானியர் அழைக்கும் வெள்ளை நரியைக் கண்டான். உடனே அங்கிருக்கும் டாகினிக்கு அவன் சிறப்புப் பூசைகள் நடத்தினான். அதனால் அவன் அந்த நாட்டின் தலைவனாகி முடிசூட்டி அரசாண்டான் என்ற நம்பிக்கை ஜப்பானில் ஆழமாகப் பதிந்து இருப்பதனால் இன்றைக்கும் டாகினி வழிபாடு அங்கு மந்திர உச்சாடனமாக நடைபெற்று வருகிறது.

ஓ இனாரி

டாகினியின் தூதுவராக விளங்கும் வெள்ளை நிற நரியை ஓ இனாரி என்ற சொல் குறிக்கின்றது. இந்த நரியை **போ ஓ இனாரி** என்பர் இது ஆண், பெண் மற்றும் அலி வடிவிலான தெய்வமாகும். இடாகினியின் அடுத்த கட்ட வளர்ச்சியான ஓ இனாரியை மூன்று தெய்வங்களின் சேர்க்கை என்றும் ஐந்து தெய்வங்களின் சேர்க்கை என்றும் ஜப்பானில்

புகழ்வது உண்டு. **இனாரி ஓ காமி** என்ற பெயரில் இன்று டாகினியை வழிபடுகின்றனர். இத்தெய்வம் செல்வத்துக்கும் வெற்றிக்கும் உரியதாகும். வளமை, நரி, அரிசி, தேயிலை, மது, தொழில்துறை, வேளாண்மை, வணிகம், கருங் கொல்லர் ஆகிய அனைத்துக்கும் ஓ இனாரியே காவல் தெய்வம் ஆகும்.

இந்தியாவில் காளியும் டாகினியும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையனவாக உள்ளன. இவை இரண்டும் காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களை அடைந்துவிட்டன. ஆனால் இங்கிருந்து ஜப்பானுக்குச் சீனா வழியாகச் சென்ற டாகினி அங்கு **டாகினி தென்** என்ற பெயரில் அன்று முதல் இன்று வரை எவ்வித மாற்றமும் அடையாமல் காவல் தெய்வமாகப் போற்றப்படுகிறது.

5. சப்தகன்னியர்

பிராமி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வராகி, நரசிம்மி, இந்திராணி ஆகிய ஏழு பெண்கள் சப்த கன்னியர் அல்லது சப்த மாதர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் வடநாட்டிலும் தென்னிந்தியாவிலும் வழிபடப்படுகின்றனர். இவர்களைப் பௌத்த சமயம் தனித் தெய்வங்கள் என்றும் ஆண் தெய்வங்களின் ஜோடி அல்ல என்றும் குறிப்பிடுகிறது இந்து சமயம், வடமொழியில் எழுந்துள்ள புராணங்கள் வழியாக இவர்களை ஜோடித் தெய்வங்கள் என்று இயம்புகின்றது.

இந்தியாவில் இருந்து பவுத்த மரபு மெல்ல மெல்ல வெளியேறிய போது இந்து சமயம் அரசர்களின் ஆதரவுடன் கோலோச்சிய போது நகர்வாழ் மக்கள் இந்து சமயப் பாரம்பரியங்களைக் கடைப்பிடித்தனர். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பதால் மன்னரைச் சார்ந்து வாழ்ந்த மக்கள் தமது

சமயப் பழக்கங்களையும் மாற்றிக்கொண்டனர். ஆனால் கிராமத்தில் இருந்தவர்கள் சப்த கன்னியர் வழிபாட்டைத் தொடர்ந்தனர். இப்பெண் தெய்வங்களைப் பௌத்த சமயம் காவல் தெய்வங்கள் என்று போதித்ததனால் ஏரி, குளம் போன்றவற்றின் கரைகளில் ஒரே கல்லில் எழு பெண்ணுருவங்களை வடித்து எளிமையாக வணங்கினர். இதனால் தமிழகத்தில் கிராமத் தெய்வங்களின் வரிசையில் சப்த கன்னியரும் இடம் பெற்றனர். கிராமப்புறங்களில் உள்ள சிறிய கோவில்களில் இவர்களுடன் பைரவரும் இருப்பது உண்டு.

நகர்ப்புறங்களில் உள்ள பெரிய இந்துக் கோவில்களில் சப்த கன்னியர் சுவாமி சந்நிதியின் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்திக்கு எதிரே வைக்கப்பட்டுள்ளனர். ஆக சப்த கன்னியர் வழிபாடு பௌத்த மரபில் இருந்து

நாட்டுப்புற வழிபாட்டு வழக்கிலும் இந்து சமயத்தில் பெருங்கோவில்களிலும் என இரு வகைச்சமய மரபுகளிலும் செல்வாக்குப் பெற்றது.

தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சி

சப்த கன்னியர் வழிபாடு நாட்டுப்புற மரபில் நடைமுறையில் இருப்பதனாலும் ஆண் இணையர் இல்லாத காரணத்தாலும் இக்கன்னியரை ஆங்கில அறிஞர்கள் தாய்த் தெய்வ வழிபாட்டில் வந்த திராவிட மரபுத் தெய்வங்கள் என்றனர். கீழைநாடுகளில் முதலில் தோன்றிய மனித நாகரிகமும் அவர்களின் தாய்த் தெய்வ வழிபாடும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து தோன்றிப் பரவவில்லை. ஆங்காங்கே தோன்றி வளர்ந்து வந்தது. பின்னர் அந்தந்தப் பகுதிகளில் பெரு நெறியாகப் பரிணமித்தது. மாதா வழிபாட்டின் தாயகமான உரோம் நாட்டிலும் சிறுமிகளைக் கடவுளாகக் கருதி வழிபடும் முறை இருந்தது.

சப்த கன்னியர் வழிபாடு ஆணின் ஆற்றல் மற்றும் அதிகாரத்தை மறுக்கும் வழிபாடாக ஆதியில் இருந்தது. இவர்களே சர்வ வல்லமை படைத்த காவல் தெய்வங்கள் என்று நம்பப்பட்டனர். காலப்போக்கில் பௌத்த மரபில் பைரவரும் இவர்களுடன் சேர்க்கப்பட்டார். பின்னர் இந்து சமய மரபில்

இணைத் தெய்வங்களாக இவர்களுடன் ஆண் தெய்வங்கள் சேர்க்கப்பட்டனர். பிராமி வைஷ்ணவி மகேஸ்வரி கவுமாரி, இந்திராணி, நரசிம்மி ஆகியோருக்கு ஆண் இணையர் தேடிச் சேர்ப்பதில் சிரமம் ஏற்படவில்லை. அவர்களின் பெயர்களுடன் இணையக் கூடிய பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன், குமரன், இந்திரன், நரசிம்மன் ஆகியோர் அமைந்துவிட்டனர். சப்த கன்னியருக்கு இணையாக பைரவரைக் குறிப்பிட்டு இவருக்கு காசி நகரத்தில் உள்ள கோவில்களில் சன்னிதி அமைத்தனர்.

கன்னி	பைரவர்	வாகனம்	காசி நகர் கோவில்
பிராமி	அசிதாங்க பைரவர்	நாய்	விருத்தகாலர்
மகேஷ்வரி	குரு பைரவர்	காளை	காமாட்சி
கௌமாரி	சண்ட பைரவர்	மயில்	துர்கை
வைஷ்ணவி	குரோதன பைரவர்	கருடன்	காமாட்சி
வராகி	உன்மத்த பைரவர்	குதிரை	பீம சண்டி

இந்திராணி	கபால பைரவர்	யானை	லாட் பசார்
சாமுண்டி	பீஷண பைரவர்	சிங்கம்	பூத பைரவர்
சண்டிகை	சம்ஹார பைரவர்	நாய்	திரிலோச்சன சங்கம்

(வட நாட்டில் ஏழு கன்னியரை சண்டிகையோடு சேர்த்து எட்டாக்கி அஷ்ட மாத்ரிகா என்று அழைத்து அவற்றிற்கு அஷ்ட பைரவரை ஜோடி சேர்த்தனர்)

வராகி போர்த் தெய்வம், போரில் வெற்றி அருளும் தெய்வம் எனப் போற்றப்பட்டாள். இராஜராஜசோழன் போருக்குப் போகும் முன்பு அவளை வணங்கிச் சென்றான். அவளுக்குத் தனது பெருவுடையார் சந்நிதியில் தனிச் சன்னதியும் கட்டினான். அதற்கு முன்பு வரை போருக்குப் போகும் முன்பு கொற்றவையை வணங்கிச் செல்வது தமிழ் மன்னர் மரபு. இணைத் தெய்வம் இல்லாத காரணத்தால் இன்றும் வராகி சக்தி படைத்த தனித் தெய்வமாக இருந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

சிறுமியர் வழிபாடு

இந்து சமயத்தில் சாக்தம் என்னும் சக்தி வழிபாட்டு முறையில் வாலை, புவனை, திரிபுரை எனப் பெண்களை வயது வாரியாக

வணங்கும் முறை உள்ளது. இதுவே சைவ மரபில் பருவம் எய்தாத சிறுமியை முற்றா முலையாள் [அபித குஜாம்பாள்] எனப் பெயரிட்டு வழிபடும் முறை இடம்பெற்றது. முற்றா முலையாள், இந்து சைவ மரபில் சிவனின் இணைத் தெய்வமாக உண்ணாமுலை அம்மன் என்றும் வணங்கப்படுகிறாள். நாட்டுப்புற மரபிலும் பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட பெண்களைக் கோவில் விழாக்களின் போது தெய்வங்களாகப் போற்றி வழிபடும் மரபு காணப்படுகிறது. மதுரை மாவட்டம் மேலூர் அருகே வெள்ளலூர் ஏழு காத்த அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நேபாளத்தில் சிறுமியைத் தெய்வமாகக் கருதி வழிபடும் இம்மரபு போற்றப்படுகிறது. ஆனால் அச்சிறுமி பூப்பெய்தியதும் அவளைக் கோவிலை விட்டு வெளியே அனுப்பிவிடுவர். பின்பு அவளை யாரும் வழிபடுவதில்லை. நாட்டுப்புற மரபிலும் பௌத்த மரபிலும் செல்வாக்குப் பெற்றிருந்த சப்த கன்னியர் வழிபாடு இந்து சமயத்திலும் தொடர்ந்தது.

இந்து சமயப் புராணங்களில் சப்த கன்னியர்

சப்த கன்னியர் பற்றி ரிக் வேதத்தில், மார்க்கண்டேய புராணத்தில், காளிதாசர் எழுதிய குமார சம்பவத்தில், விஷ்ணு

தர்மோத்திர புராணம் மற்றும் தேவி பாகவதம் போன்ற நூல்களில் தகவல்கள் கிடைக்கின்றன. தேவி புராணம் இவர்களை இந்திரனின் சகோதரிகளாகக் குறிப்பிட்டுள்ளது. சப்தகன்னியர் லலிதா பரமேஸ்வரியின் உடலில் இருந்து தோன்றியதாக தேவி மகாத்மியம் கூறுகிறது. அரக்கனை ஒழிக்க அவதரித்த தேவியர் இவர்கள் என மச்ச புராணம் தெரிவிக்கிறது.

சண்டன் முண்டன் என்ற அரக்கர்கள் பெண்ணின் கருவில் தோன்றாத கன்னியால் மட்டுமே தனக்கு மரணம் ஏற்படலாம் என்று வரம் பெற்று அட்டூழியங்கள் செய்து வந்தனர். இவர்களைக் கொன்று இவர்களின் தொல்லைகளுக்கு ஆளாகிச் சிரமப்பட்ட காத்யாயன முனிவரைக் காக்க வேண்டி சப்தமாதர் அவதாரம் எடுத்தனர் என்பது இந்து சமயப் புராணக் கதை. சும்ப நிசும்ப அரக்கர்களை அழிக்க சப்த கன்னியர் தோன்றியதாக மார்க்கண்டேய புராணம் எடுத்தியம்புகின்றது. இவர்களைச் சிவனின் பணிப்பெண்கள் என்று காளிதாசர் தனது குமாரசம்பவம் நூலில் கூறுகிறார்.

இந்து சமய மரபில் ஆண் இணைத் தெய்வங்கள் சேர்க்கப்பட்ட பிறகு இவர்களைச் சப்த மாதர் என்று அழைத்தனர். இவர்களைச்

சப்தரிஷி மண்டலம் என்று அழைக்கப்படும் நட்சத்திரங்களின் அடையாளமாகவும் கொண்டனர்.

பௌத்த மரபில் சப்த கன்னியர்

ஆதியில் சப்தகன்னியர் வட இந்தியக் கிராமப்புறங்களில் காவல் தெய்வமாக விளங்கினர். அங்கு பௌத்த சமயம் தோன்றிப் பரவத் தொடங்கியதும் அப்பகுதி மக்களிடையே இருந்து வந்த ஆதிச் சமய மரபுகளை பௌத்தம் தன்னுள் ஏற்றுக்கொண்டது. சாத்தன் எனப்பட்ட போதி சத்துவர் வழிபாட்டு மரபுகளோடு கன்னியர் வழிபாட்டையும் இணைத்துக் கொண்டது. பவுத்தர் சாத்தனை அய்யன் என்றும் ஐயனார் என்ற மரியாதைப் பன்மை விகுதியுடன் சேர்த்தும் அழைத்தனர். இவனுக்கு ஏரி, குளம்,

கண்மாய் என்று நீர்நிலைகளுக்கு அருகே கோவில் எழுப்பப்பட்டது. போதிசத்வர் இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். இவர்கள் கண்மாய் பெருகி உடையாமல் தடுத்தனர்.

கிராம தேவதையாகச் சப்த கன்னியர்

பவுத்த கடவுளர் மக்களோடு அவர்களின் அன்றாட வாழ்க்கையில் இணைந்தவராக இருந்ததனால் ஊருக்குள் மக்கள் அதிகம் புழங்கும் இடங்களில் மக்கள் அவர்களுக்குக் கோவில் கட்டினர். அது போலவே சப்த கன்னியருக்கும் கண்மாய்க் கரைகளில், தெருக்களின் சந்திப்புகளில் ஏழு கற்கள் அல்லது பெண் உருவங்கள் கொண்டு கூரை மற்றும் சுவர் இல்லாத சிறு கோவில்களை அமைத்தனர். இத்தெய்வங்கள் வறட்சி, வெள்ளம் மற்றும் அவை காரணமாக வரும் அம்மை, காலரா, பேதி போன்ற கொள்ளை நோய்களில் இருந்து தங்களைக் காப்பாற்றும் என்று நம்பி மக்கள் வழிபட்டு வந்தனர். குறிப்பாகக் குழந்தை நலம் வேண்டிச் சப்த கன்னியரை வழிபடும் பழக்கம் கிராமங்களில் இருந்து வந்தது. குழந்தை பிறந்ததும் அவற்றுக்கு இக்கோவிலில் காவல் காணிக்கை செலுத்துவதுண்டு.

சிவன் கோவிலில் சப்த கன்னியரும் பைரவரும்

பௌத்த சமயம் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த திருச்சி தஞ்சை மாவட்டங்களில், மேலும் நதிக்கரையோர நகரங்களில் சப்த கன்னியர் வழிபாடு பரவலாக இருந்தது. தென் மாவட்டங்களில் இவர்களை ஏழு கன்னிமார் என அழைத்தனர். பின்னர் சைவ சமயம் எழுச்சி பெற்ற போது சப்த மாதர் சிவன் சந்நிதியில் இடம் பெற்றனர். திருக்கோவில் வளாகத்தில் சாந்நித்யம் கிடைத்தாலும் பெரியளவில் மக்கள் இவர்களை வழிபடவில்லை. இவர்களோடு இணைந்து போற்றப்பட்ட பைரவர் வழிபாடு

திருக்குற்றால மலையில் திரும்பிப் பார்த்தான் பாறையிலிருந்து 30 அடி தூரத்தில் காணும் சப்தகன்னியர் (படம். சண்முகக்குமார், தென்பொதிகை ஆவணக் காப்பகம்)

கூடத் தற்காலத்தில்தான் சிவன் கோவில்களில் ஞாயிற்றுக்கிழமை இராகு கால வழிபாடாகப் பிரபலமடைந்து வருகிறது. ஆனால் கிராம தேவதையாக பைரவர் வைரவ சாமி என்ற பெயரில் எப்போதும் சிறப்பு வழிபாட்டுத் தகுதி பெற்றிருக்கிறார்.

உலகின் பல்வேறு இடங்களில் சப்தகன்னியர்

தென் இந்தியா முழுவதிலும் மக்கள் இடைக்காலத்தில் சப்த கன்னியரை வழிபடா விட்டால் அவர்கள் தமது பிள்ளைகளைக் கொன்று விடுவர் என்று பயந்து வழிபாட்டை முறையாக ஆண்டுதோறும் நடத்தி வந்தனர். சில ஊர்களில் கன்னிமார் வழிபாடு என்று அழைத்தனர். சிலருக்குக் குல தெய்வமாகவும் இந்தக் கன்னிமார் இருந்தனர். அவர்கள் தமது பிள்ளைகளுக்குக் கன்னியம்மா, கன்னியப்பன், கன்னிகா என்று பெயர் சூட்டினர். 7ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை மிகப் பிரபலமாக இருந்த இவ்வழிபாட்டின் செல்வாக்கு பிறகு நகரங்களில் மட்டும் குறைந்தது.

கன்னிமார் வழிபாடும் கன்னித் தாயும்

கன்னிமார் வழிபாடு உலகெங்கும் பரவியிருந்த காலமும் உண்டு. பின்னர் பெரு நெறிச் சமயங்களாக கத்தோலிக்க சமயமும்

மறுமலர்ச்சி கிறிஸ்தவமும் தோன்றிய பிறகு கன்னிமார் வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு போன்றன மெல்ல மெல்ல மறைந்துவிட்டன. உரோம் நாட்டில் கன்னிப் பெண்களின் வழிபாடு ஹவுஸ் ஆப் வெஸ்டல் வர்ஜென்ஸ் *[House of Vestal Virgins]* என்ற பெயரில் 6 முதல் 10 வயது சிறுமிகளைக் கன்னிப் பூசாரிகளாகக் கொண்டு பழங்காலத்தில் நடைபெற்று வந்தது. இவர்கள் இங்கிருந்து வெளியேறினால் உயிரோடு புதைக்கப்பட்டனர். இக் கன்னிப் பெண்களிடம் ஆண்கள் வல்லுறவு கொண்டால் அவர்கள் சாகும் வரை அடித்துக் கொல்லப்பட்டனர்.

கன்னிப் பெண் வழிபாடே கன்னி மேரி வழிபாட்டுக்கான ஆரம்பம் ஆகும். இது போன்ற கன்னித் தெய்வங்களின் வழிபாடு ஐரோப்பிய நாடுகளில் *Beatrice, Madonna, Agnes* என்று பல கன்னித் தெய்வங்களின் பெயர்களில் நடைபெற்றது. பின்பு அனைத்தும் ஒரே பெயரில் மேரி மாதாவாக ஒருங்கிணைக்கப்பட்டது. ஆனால் வழிபடப்படும் தெய்வம் ஒரு கன்னி என்பதைக் குறிக்கும் கெபி *[cave]* மட்டும் அனைத்து மாதா கோவில்களிலும் தவறாமல் இடம் பெற்றது. இது ஆவுடை வழிபாட்டுடன் ஒப்பு நோக்கற்குரியது.

மதுரையில் சப்த கன்னி வழிபாடு

இன்றைக்கும் மதுரை மாவட்டத்தில் மேலூர் அருகே வெள்ளலூரில் காணப்படும் ஏழு காத்த அம்மன் கோவிலில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியரைத் தெய்வமாகக் கருதி விரதம் இருக்கச் செய்து அவர்களை வழிபடும் பழக்கம் தொடர்ந்து வருகிறது. இவர்கள் வெறும் பாவாடை மட்டும் உடுத்தியிருப்பர். மேலாடை கிடையாது. நிறைய நகைகளை அணிந்து மேலுடம்பை மறைத்திருப்பர். இறுதி நாளன்று கிராமத்துப் பெண்கள் மதுக்குடம் ஏந்தி ஊர்வலம் வருவர். மதுக்குடம் என்பது விரிந்த தென்னம்பாளை செருகி வைத்த குடம் ஆகும். இவை அனைத்தும் வளமைக் குறியீடுகளாக இவ் வழிபாட்டில் இடம் பெறுகின்றன.

நேபாளத்தில் இருசமயத்தார் கன்னித்தெய்வம்

நேபாளத்தில் மூன்று நான்கு வயதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிறுமியைத் தாய்த் தெய்வமாகக் கருதி அவள் பூப்படையும் வரைக் கொண்டாடுகின்றனர். அவளது பாதங்கள் பூமியில் படாது. பூப்படைந்த பிறகு அப்பெண்ணை அங்கிருந்து வெளியேதரும் போது அவளால் நடக்கக்கூட இயலாது. எனவே அவளைத் திருமணம் செய்து கொள்ள எவரும் முன் வரமாட்டார்கள். அதன் பிறகு

அவளது வாழ்க்கை பரிதாபமாகப் போய் விடுகிறது.

இந்நாட்டில் வஜ்ராயன பௌத்த மரபு பின்பற்றப்படுகிறது. இங்கு இம் மார்க்கத்தில் சப்த கன்னியர் கோவில்களில் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தலும் மாடுகளைப் பலியிடுதலும் கூட வழக்கில் உள்ளன.

6. நாட்டுப்புற வழிபாட்டில் சப்த கன்னியர்

இந்துசமயத்தில் பிராமி, மகேஸ்வரி, கவுமாரி, இந்திராணி, நரசிம்மி, வராகி, சாமுண்டி என்று ஏழு பேரும் சப்த கன்னியர் ஆவர். இவர்கள் சிவன் கோவில்களில் சுவாமி சந்நிதியின் முதல் பிரகாரத்தில் வலது காலைத் தொங்க விட்டு இடது காலை மடித்து அமர்ந்த நிலையில் சந்நிதி கொண்டிருப்பர். இவர்களில் பிராமி அம்பிகையின் முகத்தில் இருந்து தோன்றியவள். இவள் பிரம்மனின் மனைவி. அதனால் பிரம்மனுக்குரிய அன்ன வாகனம் இவளுக்கும் உண்டு. இரண்டாமவள் மகேஸ்வரி, இவள் தேவியின் தோளில் இருந்து உதித்தவள். சிவனின் மனைவி என்பதால் இவளுக்குரிய வாகனம் எருது. அடுத்தவளான கவுமாரி முருகனின் மனைவி; இவளுக்குரிய வாகனம் மயில். அடுத்தவள் வைஷ்ணவி தேவியின் கைகளில் இருந்து தோன்றியவள். இவள் விஷ்ணுவின் மனைவி. எனவே இவளது வாகனம் கருடன். இந்திராணி

இந்திரனின் மனைவி இவளை வணங்கினால் வாழ்க்கைத் துணையும் தாம்பத்தியமும் சிறப்பாக அமையும். இவளுக்கு இவளது கணவன் இந்திரனின் வெள்ளை யானையே வாகனமாக அமைகிறது.

இனி எஞ்சியிருக்கும் வராகி, சாமுண்டி ஆகிய இருவருக்கும் பொருத்தமான ஜோடியாக ஆண் தெய்வங்கள் இல்லை. அதனால் வராகிக்கு சிவன் ஹரி சக்தி என்ற மூவரையும் சொல்கின்றனர். இவள் முரட்டுக் குணம் படைத்தவள் இவளது வாகனம் எருமைக் கடா ஆகும். இவள் கைகளில் உலக்கையும் கலப்பையும் வைத்திருப்பாள் இவள் தவறு செய்தவர்களைத் தண்டிப்பதால் இவளைத் தண்டினி என்றும் அழைத்தனர். இவள் பகையை முற்றாக அழிக்கும் வீர மங்கை. வெற்றி தேவதை; இவளைச் சிம்ம வாகினி என்பாரும் உளர்.

ஒரு வரிசையில் ஏழாவதாக நரசிம்மியைச் சொல்வர். சிலர் நரசிம்மிக்குப் பதிலாகச் சாமுண்டியைச் சேர்த்துக் கொள்வர். சாமுண்டிக்குப் பிடாரி என்றொரு பெயரும் உண்டு. 'ஏரிக்கொரு ஐயனாரும் ஊருக்கொரு பிடாரியும் வேண்டும்' என்பது நாட்டுப்புற வழக்காகும். ஏரியைக் காக்கும் அய்யனாரைப் போல ஊரைக் காக்கும் காவல் தேவதை பிடாரி ஆவாள். பல்லவர், சோழர் மற்றும் பாண்டியர்கள் ஆட்சிக்காலத்தில் பிடாரிக்குக் கோவில்கள் இருந்ததாகக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. முத்தரையர் காலாபிடாரிக்கு நேமத்தில் கோவில் கட்டினான் என்றொரு வரலாற்றுச் செய்தியும் உண்டு. தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம் வட்டத்தில் கள்ளர் பசுபதி கோவிலில் சாமுண்டிக்கு முன்பு தனிக் கோவில் இருந்ததாகச் சொல்கின்றனர். மைசூரில்

சாமுண்டிஸ்வரி கோவில், மைசூர்

சாமுண்டன் என்ற அசுரனைக் கொன்ற தேவிக்கு சாமுண்டிஸ்வரி என்ற பெயரில் மலை உச்சியில் பிரசித்தி பெற்ற கோவில் உள்ளது.

தமிழகத்தில் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் இருந்து வந்த சப்த கன்னியர் வழிபாடு மராட்டியர் மற்றும் நாயக்கர் ஆட்சிக் காலத்தின் போது வடமொழி தாக்கத்தால் செல்வாக்கை இழந்து விட்டது.

கார்த்திகைப் பெண்கள்

இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிகத்தில் காணப்பட்ட சப்தகன்னியர் வழிபாடு வேத காலத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்ததாக அறிகிறோம். தாந்திரிக சமய மரபின் சின்னங்களாகப் பெண் தெய்வங்களின் உருவச்

சிலைகள் சிந்து சமவெளியில் கிடைத்துள்ளன. இவை **குழந்தைப் பேற்றுக்குரிய பெண் உறுப்புகளைப் பெரியளவில் கொண்டுள்ளன. இதன் மிச்ச சொச்சமாகத் தான் இக்கன்னியரைக் குழந்தை பிறப்பு மற்றும் குழந்தையைக் காக்கும் காவல் தெய்வங்களாகப்** போற்றி வழிபடும் முறை தோன்றியது. இதன் அடியாகத் தோன்றிய கதை தான் குமரனை வளர்த்த கார்த்திகைப் பெண்களின் புராணக் கதை ஆகும்.

Sarah L Schastok என்பவர் வடநாட்டில் குமார குப்தா ஆட்சிக்காலத்தில் அதாவது ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கந்தன் வழிபாடு தனி வழிபாடாக வளர்ந்தபோது சப்த கன்னியரைக் கந்தனுக்குத் தாய்மாராகக் கற்பித்தனர் என்கிறார். [இயேசு கிறிஸ்து வழிபாட்டில் கன்னி மரியாளை அவருக்குத் தாயாக்கிய கதையுடன் இக்கார்த்திகை பெண்களின் கதையை ஒப்பு நோக்கலாம்] வராகி நீங்கலாக மீதி ஆறு பேரும் கார்த்திகைப் பெண்கள் எனப்பட்டனர். இவர்கள் வானத்தில் நட்சத்திரங்கள் ஆக்கப்பட்டனர் என்றும் கந்த புராணம் தெரிவிக்கிறது. கிபி ஏழாம் நுற்றாண்டு முதல் ஒன்பதாம் நுற்றாண்டு வரை சப்த கன்னியரை சப்த ரிஷி மண்டலம் எனப்படும் நட்சத்திரக் கூட்டத்துடன் [plaeides]

தொடர்புப் படுத்திப் பேசும் வழக்கு இருந்துவந்தது. சங்க இலக்கியத்தில் இது அறு மீன் எனப்படுகிறது. [எ டு]

அறுமீன் பயந்த அறம்செய் திங்கள்

செல் சுடர் நெடுங்கொடி போல

[நற்றிணை 202: 9-10].

ஆனால் இந்த ஆறு நட்சத்திரங்கள் கொண்ட கூட்டம் தான் சப்த கன்னியர் என்றோ கார்த்திகைப் பெண்கள் என்றோ கூறவில்லை. கார்த்திகை முழு நிலவன்று **விளக்கீடு விழா** நடக்கும் என்ற தகவல் காணப்பட்டாலும் அவ்விழா கார்த்திகைப் பெண்களுக்காக, கந்தனின் பிறப்புக்காகக் கொண்டாடப் பட்டதாகக் தகவல்கள் கிடையாது. திருமுருகாற்றுப்படை காலத்தால் பிந்தியது என்பதால் அதைச் சங்க இலக்கியக் கணக்கில் சேர்க்கக் கூடாது. சங்க இலக்கியத்தில் ஆறு பெண்களும் கந்தனை வளர்த்தனர் என்ற தகவல் இல்லை. வானில் ஆறு மீன்கள் கொண்ட விண்மீன் கூட்டம் இருந்த தகவல் பதிவாகியுள்ளது.

பௌத்தம் பரவியிருந்த காலத்தில் சப்த கன்னியரை இந்திரனின் சகோதரியாக்கி பௌத்த சமயம் உறவு கொண்டாடியது. சைவம்

எழுச்சி பெற்ற காலத்தில் சப்த கன்னியரின் முக்கியத்துவத்தை உணர்ந்து சாமி சந்நிதியின் முதல் பிரகாரத்திலேயே தனிச் சிறப்பளித்து அங்கேயே இடம் பெறச் செய்தது.

மற்ற மாநிலங்களில் சப்த கன்னியர் வழிபாடு

மன்னர்கள் பௌத்த சமயத்தை ஆதரித்த போது சப்த கன்னிகள் அரசவைத் தெய்வங்களாகப் [ROYAL DEITIES] போற்றப்பட்டனர். நான்காம் நூற்றாண்டில் மத்திய பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட குகைக் கோவிலில் ஏழு கன்னிமார்களுக்கான உருவச் சிலைகள் குகையின் சுவற்றில் செதுக்கப்பட்டதை இன்றும் நாம் காணலாம். கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சப்தமாதர் வழிபாடு வெற்றித் தேவதைகளின் வழிபாடாக விளங்கியது. காளி, கன்னிமார் என தனித் தெய்வமாக விளங்கும் பெண்தெய்வம் எப்போதும் வெற்றித் தெய்வம் ஆகும் .

சப்த கன்னியரை இந்திரனின் சகோதரிகள் எனப் போற்றிய தேவி புராணம் இவர்களை வணங்கினால் சக்தியும் புத்தியும் கிடைக்கும் என்றது. இவர்களின் அடையாளங்களாக அன்னம், எருமை, மயில், சங்கு, சக்கரம், யானை மற்றும் எலும்புக் கூடு ஆகியவை

கருதப்பட்டன. சில மாநிலங்களில் அமாவாசையன்று கன்னியர் வழிபாடு சிறப்பாக நடந்தது. இவர்கள் பெண்களின் வயிற்றில் இருக்கும் சிசுவையும் பிறந்த குழந்தையையும் அழிக்கும் கடவுளர்களாகக் கருதப்பட்டதால் இளம் தாய்மார் இவர்களை அச்சத்தோடு வழிபட்டு வந்தனர். பிடாரி வழிபாடு வயிற்றில் இருந்த சிசுவுக்காக வழிபடப்பட்டதாகும். **கன்னிமார் பிடாரி வழிபாடுகளை தாய்த்தெய்வ வழிபாட்டின் மிச்ச சொச்சம் எனலாம்.**

உத்தரபிரதேசம், பீகார், ராஜஸ்தான் போன்ற இடங்களிலும் சப்தகன்னியர் வழிபாடு இருந்தது. உதயகிரிக் குகை வாசலில் சப்தகன்னியருக்குக் கோவில் இருப்பதைக் காணலாம். நோயுற்ற மன்னர்கள் சுகம் பெற வேண்டி, இளைஞர்கள் சப்தகன்னியர் கோவில் முன்பு தீக் குளித்து இறந்ததாக ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பான பட்டரின் ஹர்ஷ சரிதம் குறிப்பிடுகின்றது.

பான பட்டரின் காதம்பரி, மிருச்சிகடிகம் ஆகியன நாற்சந்தி அல்லது முச்சந்தியில் சப்தகன்னியருக்குக் கோவில் இருக்கும், அங்கு படையல் போடுவர் என்ற தகவல்களைத் தெரிவிக்கின்றன. சப்தகன்னியர் வழிபாட்டில் ஆடை, இறைச்சி, மது ஆகியன படைக்கப்படுவதுண்டு.

வடக்கு வாய்ச்செல்வி

சப்த கன்னியர் வழிபாடு பல இடங்களில் வடக்கு நோக்கி இருப்பதால் இத் தெய்வங்களை வடக்குவாய்ச் செல்வி என்று அழைத்தனர். பின்னர் இவ்வழிபாடு செல்வாக்கு குறைந்தபோது செல்வி, செல்லி என்ற பெயரில் செல்லி அம்மன் செல்லத்தம்மன், என்ற பெயர்களில் புத்துருப் பெற்றன. தாய்த்தெய்வ வழிபாடு, கண்ணகி [பத்தினித் தெய்வம்] வழிபாடு, கேரளாவில் இருந்து தமிழகம் வந்த பத்ரகாளி வழிபாடு, ரேணுகாதேவி வழிபாடு, சிவன் கோவில்களில் வடகிழக்கு மூலையில் சந்நிதி கொண்டுள்ள பராசக்தி வழிபாடு ஆகியனவும் ஆங்காங்கே வடக்கு வாய்ச் செல்வி அல்லது செல்லியம்மன், மாரியம்மன், காளியம்மன் என்ற பெயர்களில் பல ஊர்களில் அம்மன் வழிபாடாகப் பொதுப் பெயர் பெற்றன.

நாட்டுப்புற மரபில் சப்த கன்னியர்

நாட்டுப்புற வழிபாட்டு மரபில் ஆண்களால் பாதிக்கப்பட்டு இறந்து போன கன்னிப்பெண்கள் அவர்களின் குடும்பம் மற்றும் ஊர் மக்களால் தெய்வங்களாக வணங்கப்பட்டனர். அப்போது அவர்களின் கதையைக் காலத்தால் அழியாமல் நிறுத்த விரும்பி சப்த கன்னியரின் கதையாகத் திரித்துவிட்டனர். சப்த கன்னியருக்கும்

இப்பெண்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றாலும் இப்பெண்களோடு பிறந்தவர் அறுவர் என்ற கதைக் கூறையும் சேர்த்து சப்த கன்னியர் வழிபாடாக உருவாக்கிவிட்டனர். இவ்வாறு பல கதைகள் சப்த கன்னியர் என்ற பெயரில் வழங்குகின்றன. இங்கு இரண்டு கதைகள் மட்டும் எடுத்துக் கூறப்படுகின்றன.

சப்த கன்னியரில் மூத்தவளை முத்தாலம்மன் என்ற பெயரில் வணங்குகின்றனர். உத்தமபாளையம், மல்லிங்காபுரம் என்ற ஆனைமலையன் பட்டி கிராமத்தில் 'அன்று தோன்றி அன்றே அழியும் முத்தாலம்மனுக்கு' வழிபாடு நடக்கும். முத்தாலம்மன் என்றால் மூத்தவள், இச்சொல் முத்தியாலு என்ற தெலுங்குச் சொல்லின் தமிழ் வடிவம் ஆகும்.

தமிழகத்தில் நாயக்கர்கள் அரசாண்ட காலத்தில் பெண் தெய்வங்களின் எண்ணிக்கை கிராமங்களில் பெருகியது. அவ்வாறு புதிதாய்த் தோன்றிய தெய்வங்களுக்கும் ஏற்கெனவே புழக்கத்தில் இருந்து வந்த சில தெய்வங்களுக்கும் தெலுங்குப் பெயர்கள் சூட்டப்பட்டன. பெரிய நாயகி, முத்தாலம்மன், பச்சை நாச்சி, நாச்சியாரம்மன் என்ற பெயர்களில் உள்ள நாச்சி, நாச்சியார்,

முத்தியாலு போன்றவை தெலுங்குப் பெயர்களாக இணைந்தன.

முத்தாலம்மன் வழிபாடு

முத்தாலம்மனின் கதையில் அவள் தன் கூடப் பிறந்த ஆறு தேவ கன்னியருடன் பூலோகம் வந்த போது அதிக தாகமெடுத்த காரணத்தால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்தனர். இதனால் தேவலோகத்தின் அரசனான இந்திரனால் சபிக்கப்பட்டு தேவலோகத்திற்குத் திரும்பிப் போக இயலாமல் இங்கேயே தண்ணீர் தந்தவர் வீட்டில் தங்கி அந்த இனத்தைச் சேர்ந்த ஆண்களைத் திருமணம் செய்து வாழ்ந்தனர். அவர்களில் மூத்தவள் மட்டும் அந்த இனத்து ஆணோடும் வாழ விரும்பாமல் ஒரு கவுண்டர் இனத்து இளைஞனைக் காதலித்தாள். இதை அறிந்த அவளுடைய கணவன் பச்சைக்கள்ளிக் கம்பால் அவளை அடித்துக் கொன்றுவிட்டான்.

இறந்து போன முத்தியாலு, கவுண்டர் ஒருவரின் கனவில் வந்து தன்னைத் தெய்வமாக வைத்து வழிபடும் படியும் அவ்வாறு வணங்கி வந்தால் அந்த இனத்தவரை நல்லபடியாகக் காப்பதாகவும் கூறினாள். அன்று முதல் அவர்கள் இப்பெண்ணுக்கு ஒரே ஒரு நாள்

மட்டும் வழிபாட்டு விழா எடுக்கின்றனர். துணைப் பூசாரியாக அவளது கணவர் இனத்தைச் சேர்ந்தவரை அழைத்து வந்து கோவிலில் சமபந்தி விருந்து வைத்து அம்மனுக்குத் தாலி கட்டச் சொல்வர். பின்பு மாலையில் அக்கணவர் பூசாரி அம்மனை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று அடித்துச் சிலையை உடைத்துப் போட்டு அதற்கு வாயில் வாய்க்கரிசியும் போட்டு விட்டு ஊருக்குள் திரும்பி விடுவார். காலையில் செய்த முத்தாலம்மன் உருவத்தைச் மாலையில் அடித்துக் கொன்று அழித்து விடுவதால் இந்த தெய்வத்தை அன்று தோன்றி அன்று அழியும் முத்தாலம்மன் என்பர்.

முத்தியாலு அம்மனுடன் பூலோகத்துக்கு வந்த தங்கைமார் பட்டாளம்மன், காளியம்மன், மாரியம்மன், மந்தையம்மன், துர்க்கை அம்மன் மற்றும் சவுடம்மன் ஆவர். இந்த ஊரில் இவர்களுக்கென்று தனி வழிபாடோ தனிக் கோவில்களோ இல்லை. முத்தாலம்மனுக்கு மட்டுமே தனிக்கதையும் வழிபாடும் உள்ளது.

சப்த கன்னியருக்கு ஏழு ஊரில் கோவில்

சப்த கன்னியர் ஏழுபேரில் மூத்தவளுக்கு மட்டுமே கதை இருந்தாலும் ஏழு பேரும்

தனித்தனியாக ஏழு ஊர்களில் வணங்கப்பட்டு வரும் வழக்கமும் உண்டு. பெரம்பலூர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் இக்கோவில்கள் காணப்படுகின்றன. பார்வதி, பட்டத்தாள், அருந்தவம், பூவாள், காத்தாயி, பூங்காவனம், பச்சையம்மாள் ஆகிய ஏழு பேரும் சகோதரிகள் ஆவர். இவர்கள் பொதிகை மலையின் அடிவாரத்தில் ஒரு விவசாயிக்கு மகள்களாகப் பிறந்து தினமும் சிவ பூசை செய்து வாழ்ந்து வந்தனர்.

சகோதரிகளின் பக்தியைச் சோதிக்க நினைத்த சிவ பெருமான் ஒரு கட்டிளங் காளையைப் போல் வந்து இப்பெண்கள் மீது தனக்கிருக்கும் மோகத்தைத் தெரிவித்தார். எல்லாப் பெண்களும் பயந்து காட்டுக்குள் ஓடிவிட்டனர். பின்பு இவர்கள் ஏழு பேரும் ஒன்று சேர ஒரு வருடம் ஆயிற்று. அப்போது மூத்தவள் பார்வதி மட்டும் ஒரு குழந்தையோடு வந்தாள். அவர்கள் இது யார் குழந்தை என்று கேட்டதற்கு அன்று வந்து நம்மிடம் வம்பிழுத்தானே அவனிடம் நான் சிக்கி கொண்டேன். அவன் என்னுடன் வல்லுறவு கொண்டதால் இக்குழந்தை பிறந்தது என்றாள். சகோதரிகள் அக்காளை நம்பாமல் நிரூபித்துக் காட்டு என்றனர். பார்வதி அழுது கொண்டே தனது குழந்தையுடன் தீக்குளித்தாள். அப்போது

சிவபெருமான் காட்சியளித்து ஏழு பேரையும் ஆட்கொண்டார். 'என் மீது பக்தி கொண்ட உங்கள் ஏழு பேரையும் மக்கள் கோவில்கட்டி வணங்குவார்கள். உங்களுக்குத் துணையாக பூமாலையப்பர், செம்மலையப்பர், ராயப்பர், கருப்பையா, முத்தையா போன்ற ஏழு முனிகள் காவலாக இருப்பார்கள்' என்ற வரமும் அளித்தார்.

பார்வதிக்கு சன்னாசி நல்லூரிலும், பட்டத்தாளுக்குப் புலியூரிலும் அருந்தவத்துக்குக் காளிங்கராய நல்லூரிலும் பூவாளுக்குச் சித்தூரிலும் காத்தாயிக்கு வெங்கனூரிலும், பூங்காவனத்துக்கு அரகண்ட நல்லூரிலும், பச்சையம்மனுக்குக் குமாரையிலும் கோவில் கட்டி மக்கள் வழிபட்டு வருகின்றனர். காவல் முனிகளும் இப் பெண் தெய்வங்களோடு கோவில் கொண்டுள்ளனர்.

நாட்டுப்புறத் தெய்வக்கதைகளில் வழங்கும் ஒரு அக்காளின் கதை அவள் கூட இருந்த ஆறு தங்கைமார் என்பது பழைய சப்த கன்னியருடன் தொடர்புடையது அல்ல என்றாலும் பாதிக்கப்பட்ட ஒருத்தியின் கதைக்குத் தெய்வத் தன்மை ஏற்றுவதற்காக *[divinisation]* ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள செல்வாக்கு மிகுந்த சப்த கன்னியர் கதையுடன் இவளது கதையையும் இணைத்து

விடுகின்றனர். ஏழு என்ற எண்ணிக்கைக்காக ஆறு தங்கைகளைச் சேர்த்துக் கொள்கின்றனர். இது போன்ற ஏழு பேர் கதை நாட்டுப்புறத் தெய்வங்களின் வழக்கில் ஏராளமாக உள்ளன.. சில ஊர்களில் அண்ணன் தங்கை ஏழு பேர் என்றும் கதைகள் வழங்குகின்றன. முப்புடாதி அம்மன் கதையிலும் எழு பேர் எண்ணிக்கை காணப்படுகிறது. கதை ஒருவருக்குடையதாக மட்டுமே இருக்க அதை ஏழு பேருக்கானதாக வளர்ப்பதற்குக் காரணம் சப்த கன்னியர் வழிபாடு பெற்றிருந்த செல்வாக்கு ஆகும்.

பெருங்கோவில்களில் சப்தகன்னியர்

சில சிவன் கோவில்களில் சப்தகன்னியர் ஒவ்வொருவருக்கும் தனிக்கோவில் இருந்த காலமும் உண்டென்பர். இப்போது அவற்றில் சில மட்டுமே நடைமுறையில் வழிபாட்டில் உள்ளது. நாகப்பட்டினம் அருகே தருமபுரம் என்ற ஊரில் இந்திராணிக்குத் தாழமங்கை என்ற பெயரில் கோவில் உண்டு. தாழமங்கை இருக்கும் இக்கோவிலை சந்திரமவுலீஸ்வரர் ஆலயம் என்று அழைப்பர். இந்திராணிக்கு [தாழமங்கைக்கு] யானைக் கொடி, யானை வாகனம் என்று இந்திரனுக்குரிய சிறப்புகள் உண்டு. இவளை 'அகத்தே ஆயிரம் கண்ணுடையாள்' என்று அழைக்கின்றனர். தஞ்சை பெரிய கோவிலில் வராகிக்கு மட்டும்

தனிச் சந்நிதி உண்டு. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சந்திர சூடேஸ்வரர் கோவில் திருச்சுற்றில் சப்த கன்னியர் கோவில் காணப்படுகிறது.

பெண்ணேஸ்வரர் மடத்தில் உள்ள பெண்ணேஸ்வரர் கோவில் திருச்சுற்றில் சப்த கன்னியருக்குச் சிற்றாலயம் ஒன்றுண்டு. ஈரோடு அம்மாபேட்டை அருகே நெருஞ்சிப்பேட்டையில் காவிரியின் நடுவே கன்னிமார் திட்டு என்ற இடத்தில் ஏழு கன்னியரும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றனர். சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் **முன் உதித்த அம்மன்** என்ற பெயரில் ஒரே கல்லில் ஏழு கன்னியரின் சிலையும் காணப்படுகின்றது. இவர்களே இங்கு வழிபடப்பட்ட முதல் தெய்வங்கள் ஆவர். எனவே முன் உதித்த அம்மன் என்று அழைக்கப்படுகின்றனர்.

திருச்சியில் பாளையம் பஜார் என்ற இடத்தில் சப்த கன்னியருக்குச் சிற்றாலயம் உள்ளது. பண்ருட்டி அருகே நெல்லிக்குப்பம் என்ற ஊரில் செல்லியம்மன் கோவிலில் வராகிக்குத் தேய்பிறை பஞ்சமி அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வாறு இன்றும் கிராமப் புறங்களில் சப்த கன்னி வழிபாடு சிறப்பாக நடக்கிறது.

தேவேந்திர குலத்தார் வணங்கும் ஏழு கன்னிமார்

சப்தகன்னியர் வழிபாடு தென் தமிழகத்தில் ஏழு கன்னிமார் என்ற பெயரில் பல இனத்தாரால் தற்போது வணங்கப்பட்டு வந்தாலும், இக்கன்னிமார் ஏரி, குளம் ஆகியவற்றின் காவல் தெய்வமாகவும் விளங்குவதால் நெல் வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றிற்குரிய தேவேந்திர குலத்தார் தொடக்க காலந்தொட்டு கன்னிமார் தெய்வங்களையும் தமது குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர். அவ்வாறு மீன் பாறை கன்னிமார், தலைக்குத்து கன்னிமார், பேழைக் கன்னிமார், சின்னணைக் கன்னிமார் (சிறிய அணைக்கு உரிய காவல் தெய்வம்), பூமிக் கன்னிமார், தாமரைப்பாடி கன்னிமார், ஓடி காட்டுக் கன்னிமார் போன்றோர் வணங்கப்படுகின்றனர்.

இவ்வாறாக புராணங்களில் சப்தகன்னிகள் என்றும், நாட்டுப்புற வழக்கில் ஏழு கன்னிமார் என்றும் வணங்கப்படும் திருமணமாகாத பெண் தெய்வம் இந்தியா முழுக்க வழிபடப்படுகிறது. இத்தெய்வத்தை பௌத்தர்களின் வரவால் தமிழகம் வந்த தெய்வங்கள் என்று கருத இடமுண்டு. பௌத்தம் இங்கிருந்து அகன்ற பிறகு சைவ வைணவ எழுச்சி தோன்றிய பிறகு நகர்வாழ்

மக்கள் சிவன் கோவில்களில் தனிச்சன்னதி அமைத்தும், நாட்டுப்புற மக்கள் பாறைகளிலும் சுவர்களிலும் புடைப்புச் சிற்பங்கள் அமைத்தும் தம் காவல் தெய்வமாகக் கொண்டு இன்றுவரை தொடர்ந்து வணங்கி வருகின்றனர்.

தமிழ் மரபு அறக்கட்டளை

Tamil Heritage Foundation

THF

தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

நூல் ஆசிரியர் பற்றி

முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்கள் பண்பாட்டு ஆய்வில் மிகுந்த ஆர்வமும் தொடர்ந்த தேடுதலும் உடைய அறிஞர். உலகளாவிய அளவில் மதங்களின் *(Religion)* தோற்றம் எவ்வாறு தொடங்கி அது; பண்பாட்டின் வேராக எப்படி நிலைபெற்றது என்பதை இந்த நூலில் மிக நேர்த்தியாய் விளக்குகிறார்.

கலைமாமணி பேரா. முனைவர்
தே. ஞானசேகரன்
பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

நூல் பற்றி

உலகளாவிய நிலையில் ஒப்பிட்டுக் கூறியிருப்பது வழிபாடு குறித்த ஒருமைக்குள் நம்மைக் கொண்டு செல்கிறது. இன்னும் உலகிலுள்ள அனைத்து வழிபாட்டிற்கும் வேட்டைச்சமூக மக்களின் தேவைகளே ஆரம்பமாய் அமைந்துள்ளதை மறை நிலையில் கொண்டுச் சுட்டிக்காட்டுவது இன்றைய சமூகத்தில் காணப்படும் சமயப்பூசல்கள் தேவையற்றவை என்கிற புரிதலுக்கு நம்மை அழைத்துச்செல்லும்.

மனித அச்சத்தின் விளைவே வழிபாடு என்கிற ஃப்ராய்டின் கூற்றை இந்நூல் ஒவ்வோரிடத்திலும் வெளிப்படுத்துகிறது. உலகளாவிய நிலையிலான பல்வேறு மனிதர்களின் வாழ்வியல், சமயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அளவுக்கு அதிகமான தரவுகளை உள்ளடக்கியதோடு மட்டுமல்லாமல் எதிர்கால ஆய்வுக்கான களங்களை ஏகமாய்த் தந்திருக்கிறது. வெவ்வேறு தலைப்பில் ஆறு கட்டுரைகளைக் கொண்டிருந்தாலும் அவையனைத்தும் பெண் தெய்வ வழிபாடு என்கிற ஒற்றை இலக்கை நோக்கிப் பயணிப்பன.

முனைவர் ஆ. பாப்பா
தமிழ் உதவிப்பேராசிரியர்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.